REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஓகஸ்ட் 25 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 201 | Friday 25, August, 2023 | 28 பக்கங்கள் | 50/-

## சந்திரனில் சந்திரயான்-03 ஜனாதிபதி ரணில் வாழ்த்து

**இந்தியாவின் வரலாற்றுச் சாதனையென பெருமிதம்**



சந்திரயான் 03 விண்கலத்தை வெற்றிகரமாக சந்திரனின் தென் துருவத்தில் தரையிறக்கியதன் மூலம், இந்தியா அடைந்துள்ள தனித்துவமான சாதனைக்காக இந்திய பிரதமர் உட்பட நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி

06

### மாகாண மட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க

# ஓய்வுபெற்ற பட்டதாரிகள் மீண்டும் ஆசிரியர் சேவையில்

### அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த வாரம் சமர்ப்பிக்க நடவடிக்கை

**சபையில் ரோஹிணி குமாரி எம்பி எழுப்பிய கேள்விக்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதில்**







*லோரன்ஸ் செல்வநாயகம்*

ஓய்வு பெற்றுள்ள பட்டதாரிகளை மீண்டும் ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மாகாண மட்டத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்

06

**ஆசிரியர் விடயத்தில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிப்பதால் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே.....சுசில்**

**சட்டச் சிக்கல் எழுந்தால் தீர்வைப் பெற்று தருவதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ உறுதி**

QR ஐ ஸ்கேன் செய்து வீடியோவை பார்வையிடவும்

## இந்திய உதவியுடன் பொருளாதார மையமாக திருமலை அபிவிருத்தி

**2019–2023 வழங்கப்பட்டுள்ள காணிகள் ஒரு வாரத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்பு**



1980 களில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்பட்டது போன்று கிழக்கு அபிவிருத்தித் திட்டமும் துரிதப்படுத்தப்பட்டு நாட்டின் பொருளாதாரத்துக்கு புத்துயிரளிக்கும் சூழல், உருவாக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையை வலுசக்தி, போக்குவரத்து, துறை முகம், கப்பற்துறை, விமானம், கைத்தொழில் மற்றும் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்யும் இலக்குடன் கூடிய வேலைத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட

06

## சரத் வீரசேக்கர எம்பிக்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் போராட்டம்

**முல்லைத்தீவில் இன்று பாரிய ஏற்பாடு**

*ஓமந்தை விஷேட நிருபர்*



சரத் வீரசேக்கர எம்பியின் அண்மைய பாராளுமன்ற உரையை கண்டித்து இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து, அடையாள கண்டனப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக்கர (22) அன்று முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக அவதூறு பரப்பும் வகையிலும், நீதித்துறை சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தும் வகையிலும் பாராளுமன்றில் உரையாற்றியிருந்தார்.

இவ்வுரையை கண்டித்தும், எதிர்ப்புத் தெரிவித்தும் கண்டன

06

### கிரிக்கெட் உள்ளிட்ட துறைகள் முன்னேற வேண்டுமாயின்

## விளையாட்டுத் துறைக்குள் அரசியல் தவிர்க்கப்பட வேண்டும்

**பாராளுமன்றில் நாமல் ராஜபக்ஷ எம்.பி. கோரிக்கை**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



கிரிக்கெட் உள்ளிட்ட நாட்டின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் விளையாட்டுத்துறைக்குள் அரசியல் நிகழ்ச்சி நிரல்களை கொண்டு வருவது தவிர்க்கப்பட வேண்டும் என, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எம் பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, விளையாட்டுத்துறையை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல, துறை சார்ந்த சட்டங்களில்

06

### "Dr.அப்துல் கலாமின் கனவு நனவாகியது"

## சந்திரயான்-03 விண்கல வெற்றி இந்தியாவுக்கு சபையில் வாழ்த்து

*லோரன்ஸ் செல்வநாயகம்*





இந்தியாவின் சந்திரயான்- 3 விண்கலத்தை வெற்றிகரமாக சந்திரனின் தென் துருவத்தில் தரையிறக்கிய, இந்திய அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் எம்பிக்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

அண்டை நாடான இந்தியா சந்திரயான்- 3 விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளமையை பாராட்டுவதாக சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

## டுபாயில் முதலீடு செய்து அதிக வட்டி பெற்றுத் தருவதாக மோசடி

**அமெரிக்கா தப்பிச் செல்ல முயன்ற தம்பதி கைது**



டுபாயிலுள்ள வர்த்தக நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு அதிக வட்டி பெற்று தருவதாக கூறி 200 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவுக்கு தப்பிச் செல்ல தயாரான கணவன் மனைவியுடன் அவர்களது இரண்டு பிள்ளைகளையும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றின் பெயரில் தம்பதியினர் இந்த மோசடியை செய்துள்ளதாக, கொழும்பு குற்றப்பிரிவின்

06

## கடவுள் நம்பிக்கைக்காக போராடும் நிலையில் நாம்

**மாவை சேனாதிராஜா கவலை தெரிவிப்பு**



இனத்தின் விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பித்து இன்று கடவுள் நம்பிக்கையை பாதுகாப்பதற்காக போராட வேண்டிய நிலைக்கு, தள்ளப்பட்டுள்ளதாக தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு விசுவமடு பகுதியில் நேற்றைய தினம் (24) தனியார் நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் 85 மாணவர்களுக்கு வங்கிக்கணக்கு

06

## அரிசி இறக்குமதி தற்போது அவசியமற்றதொரு விடயம்

**கையிருப்பிலுள்ளவை தாராளமாக போதுமானது**



தற்போது கையிருப்பிலுள்ள அரிசி, அடுத்த பெரும்போக அறுவடை வரை போதுமானதாக இருப்பதால், வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு தேவையான மூன்று வகையான உரங்களையும் உரிய நேரத்தில் வழங்கியதாலும், நிதி உதவி அளித்ததாலும் கடந்த

06

## தங்கக் கடன் அடகுச் சேவைக்கு உச்சபட்ச வட்டி வீதம் நிர்ணயம்

**CBSL நாணயச் சபை தீர்மானம்**



நாட்டில் தங்கக் கடன் அடகுச் சேவைக்கு இலங்கை மத்திய வங்கி உச்சபட்ச வட்டி வீதத்தை நிர்ணயித்துள்ளது. நேற்று முன்தினம் (23) மாலை கூடிய இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை, இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதன்படி அரச வங்கிகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்து தனியார் வங்கிகளும், தங்கக் கடன் அடகுச் சேவைக்கு உச்சபட்சமாக 18 வீத வட்டியையே அறவிட முடியுமெனவும் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, கடன் அட்டைக்கு 28 வீதத்தையும், தற்காலிக மேலதிக பற்றுக்கு 23 வீதத்தையும்

06

## காணாமல் போனோரது உறவுகளுக்கு விரைவில் நீதி

**ஆறு மாதங்களுக்குள் தீர்வு வழங்குவதாக உறுதி**

இலங்கையில், காணாமலாக்கப்பட்டவரின் உறவுகளுக்கு 06 மாத காலத்துக்குள் நீதி வழங்கப்படுமென, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் தலைவர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

06



## இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் இலங்கை வருகிறார்

**பெற்றோலிய துறை குறித்து கலந்துரையாடல்**

03



### 'விமானம் அவசர தரையிறக்கம்'

## தவறாக வெளியான செய்தி என ஸ்ரீலங்கன் நிறுவனம் மறுப்பறிக்கை

03

## விமான நிலையம் வந்த சொகுசு பஸ் நீர்கொழும்பில் தீப்பிடிப்பு

**பயணிகள் பாதுகாப்பாக வெளியேற்றம்**



யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு பயணிகளை ஏற்றி வந்த அதிசொகுசு பஸ், நீர்கொழும்பில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

நேற்று (24) அதிகாலை 04.30 மணியளவில் இது, இடம்பெற்றது. வெளிநாடு செல்வதற்காக 35 பயணிகளை

06

## தேரில் மின்சாரம் தாக்கி இரண்டு பக்தர்கள் பலி

**நமுனுகுல, கதிரேசன் கோவிலில் சம்பவம்**







பதுளை, நமுனுகுல பூட்டாவத்தை கதிரேசன் கோவிலின் வருடாந்த தேர் திருவிழாவின், வீதி உலாவின் போது மின்சாரம் தாக்கியதில் இருவர் பலியாகினர்.

சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூவர் பசறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருத்தேர் உற்சவத்தில் கலந்து கொண்ட தேரொன்று உயர் அழுத்த

06







# நகர்வலம்



## மாலைதீவு உயர்ஸ்தானிகர் விமானப்படை தளபதி சந்திப்பு



இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் அலி ஃபைஸ் அவர்கள் இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவை (23) விமானப்படை தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னமும் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

## இலங்கையில் தௌஹீத் பிரசாரப்பணி தோற்றமும் வீழ்ச்சியும் நூல் வெளியீடு



திக்குவெல்லை மௌலானா மௌலவி செய்யது இஸ்மாயில் இமாம் எழுதிய இலங்கையில் தௌஹீத் பிரசாரப்பணி தோற்றமும் வீழ்ச்சியும் நூல் வெளியீடு நாளை மறுதினம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திக்குவெல்லை மின்ஹாத் தேசிய பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

தென் மாகாண தமிழ் மொழி பாடசாலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மஷாயிர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஹமீத் அல் ஹுஸைனி அதிபர் எம்.ரீ.எம். ரிஸ்கி வரவேற்புரை நிகழ்த்த இருப்பதோடு மௌலவி எம்.எஸ்.எம். பாயிஸ் (இஸ்பஹானி), ஓய்வுபெற்ற முன்னாள் தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.எம். மொஹமட் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் தேர்தல் அதிகாரி எம்.ஆர்.எம். நிஸ்தார் ஆகியோர் கருத்துரையாற்றுவர்.

யோனகபுர ஹம்ஸாவின் கவி வாழ்த்தும் இந்நிகழ்வில் இடம்பெறவுள்ளதோடு நூல் ஆய்வுரையை மௌலானா மௌலவி ஜெ. அப்துல் மஜீத் பாகவீ (பிரதம கதீப், நாகோர் மஸ்ஜித், மலேசியா) நிகழ்த்த இருப்பதுடன் சிறப்புரையை திக்குவெல்லை கமால் நிகழ்த்துவார். (பா)

## ரமழான் பரிசு மழை போட்டியின் பரிசளிப்பு





ஜம்மிய்யதுஷ் ஷபாப் நிறுவனம் ஒவ்வொரு வருடமும் ரமழான் மாதத்தை முன்னிட்டு ஜப்னா முஸ்லிம் இணையத்தளத்துடன் இணைந்து நடாத்தி வரும் ரமழான் பரிசு மழை போட்டி நிகழ்ச்சியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் ஷபாப் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட புனித மக்கா ஹரம் சரீபில் கடமையாற்றிய அஷ்ஷெய்க் முஹம்மது பின் ரியாழ் அல் ஸய்லானி மற்றும் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட ரிஸ்மி ரியாழ், சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட முளப்பர் கைவ்யைனி, மௌலவி எம்.எஸ்.எம். தாஸீம் மற்றும் ஏ. ஜே.எம்.வாரிஸ் ஆகியோர் பரிசில்களை வழங்குவதைப் படங்களில் காணலாம்.

கொவிட்19, பொருளாதார நெருக்கடி காரணமாக

# தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள 24 திட்டங்கள் மீண்டும் ஆரம்பம்

### உடன் ஆரம்பிக்க அமைச்சர் பிரசன்ன நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்பு

கொவிட்19 மற்றும் பொருளாதார நெருக்கடியால், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள 24 திட்டங்களை துரிதமாக மீள ஆரம்பிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி அந்தத் திட்டங்களை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையும் தெரிவித்துள்ளது.

24 திட்டங்களில் 09 திட்டங்கள் பல்வேறு தொடர்புடைய நிறுவன சிக்கல்களால் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த திட்டங்களின் பெறுமதி சுமார் 56,529 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது .இந்த 09 திட்டங்களுக்கென, ஒப்பந்ததாரர்களுக்கு சுமார் 1,180 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகவும் இன்னும் 14 மில்லியன் ரூபா பணம் செலுத்த வேண்டியுள்ளதென்றும் அதிகார சபை கூறுகிறது.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான மொத்த நிதித் தேவை 55,335 மில்லியன் ரூபாவாகும். ஹொரணை பிரதேசத்தில் பொரளை வெலிக்கடை சிறைச்சாலை வளாகத்தை மாற்றியமைக்கும் திட்டத்துக்கு 55,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத்திட்டம் எண்ணக்கருவாக உள்ளதாலும், சிறை வளாகத்துக்கான இடம் மற்றும் தேவைகள் தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் இறுதி ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாததாலும், நிதி ஒதுக்கீடு இல்லாததாலும் இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இத்திட்டத்தை தனியார் துறையுடன் இணைந்து கூட்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதிகாரசபை கூறுகிறது.

நிறுவனப் பிரச்சினைகளால் நிறுத்தப்பட்டுள்ள 09 திட்டங்களில் எஞ்சிய 08 திட்டங்களுக்கு 335 மில்லியன் ரூபா மட்டுமே தேவைப்படுகிறது. மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, புகையிரத திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களுடனான இந்தத் திட்டங்களுக்கான வசதிகளை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக இந்தத் திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாகவும், அதற்கேற்ப வேலைத்திட்டங்கள் துரித கதியில் ஆரம்பிக்கப்பட்டு வருவதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் நிதி நெருக்கடியால் ஒப்பந்ததாரர்கள் எதிர்கொண்டுள்ள மூலப்பொருட்களின் விலை உயர்வு, இறக்குமதி கட்டுப்பாடுகள், எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடி போன்ற காரணங்களால் எஞ்சிய 15 திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த திட்டங்களின் பெறுமதி 10,451 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகர மண்டப நிர்மாணத் திட்டமே மிகவும் பெறுமதியான திட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பெறுமதி 3,769 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக ஏற்கனவே 1,033 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

எஞ்சிய கட்டுமானத்துக்கு தேவையான தொகை 2,536 மில்லியன் ரூபாவாகும். நிறுத்தப்பட்டுள்ள ஏனைய 14 திட்டங்களில் 02 திட்டங்கள் கொழும்பு நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களாகும். இந்த 02 திட்டங்களுக்காக 2,438 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இந்த 02 திட்டங்களின் அபிவிருத்திக்கு தேவையான நடவடிக்கைகள் தனியார் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகார சபை மேலும் தெரிவிக்கின்றது.

சூது விளையாடிய வீடு சுற்றிவளைப்பு;

# வீட்டு உரிமையாளர் உட்பட ஏழு பேர் பொலிஸாரால் கைது

### சந்தேக நபர்களிடமிருந்து 09 மோ.சைக்கிள்கள், 10 கையடக்கத் தொலைபேசிகளும் பறிமுதல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மஹாஇலுப்பள்ளம் இஹலகம பகுதியில் சூது விளையாடிக் கொண்டிருந்த ஏழு நபர்களையும் அவர்களின் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளையும் எப்பாவள பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பின் போது சூது விளையாடிய வீட்டு உரிமையாளர் உட்பட ஏழு சந்தேக நபர்களையும் 9 மோட்டார் சைக்கிள்கள், 10 கையடக்க தொலைபேசிகள் டப் வகை கையடக்க தொலைபேசி ஒன்றும் சூது விளையாடுவதற்கு வைத்திருந்த பணம் மற்றும் காட் பக்கட் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

எப்பாவள பொலிஸ் நிலைய விசேட அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய (23) நள்ளிரவு சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர். மஹாஇலுப்பள்ளம் இஹலகம பகுதி வீடு ஒன்றில் குறித்த சூது விளையாட்டு நடத்திச் செல்லப்பட்டுள்ளதுடன் அதற்கு வரும் வீதியில் தகவல் வழங்குபவர்களை அமர்த்தி மிகவும் சூசகமான விதத்தில் நடத்திச் சென்றுள்ளனர். அப்பிரதேசத்தில் காட்டு யானைகள் அடிக்கடி சுற்றித்திரிவதனால் பொலிஸார் அடிக்கடி அப்பகுதிக்கு செல்வதை தவிர்த்து வந்துள்ளனர். இதனை சாதகமாக பயன்படுத்தியே மிக நீண்ட காலமாக இச்செயலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.



குறித்த சுற்றிவளைப்பின் போது சீ.ரீ 100 வகையிலான 03 மோட்டார் சைக்கிள், பஜாஜ் வகையிலான பிலட்டினா மோட்டார் சைக்கிள் 03, டிஸ்கவரி மோட்டார் சைக்கிள் 01, ஹொண்டா டீயோ ஸ்கூட்டர் 03, பஜாஜ் முச்சக்கர வண்டி 01 என்பன இங்கு கைப்பற்றப்பட்டுள்ளது. இவைகள் திருடப்பட்டவைகளா அல்லது குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டவைகளா என்பது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். பிரதேசத்தில் திருட்டு, குடும்ப தகராறு, பொருளாதார பிரச்சினை உள்ளிட்ட பல பிரச்சினைகள் இதனால் ஏற்படலாம் என பொலிசார் தெரிவித்தனர்.

## உடவளவை பிரதேசத்தில் கடும் வரட்சி; கால்நடைகள் நீர், உணவின்றி அவதி



**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

உடவளவை பிரதேசத்தில் கடந்த சிலமாத காலமாக நிலவி வரும் கடும் வரட்சியான காலநிலையின் காரணமாக உடவளவை தேசிய சரணாலயம் வரண்டுபோய் காணப்படுகிறது. இதனால் நீர் மற்றும் போதிய உணவின்றி யானைகள் உட்பட மிருகங்கள் பாரிய அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன.

மேற்படி சரணாலயத்திற்குள் உள்ள புருதுகொள்ள மற்றும் தன்கஹவெள ஆகிய சிறிய குளங்கள் உட்பட சகல நீர் தேங்கிநிற்கும் பிரதேசங்களும் முற்றாக வற்றிப்போயுள்ளது. இதனால் சரணாலயத்தில் உள்ள மிருகங்கள் நீரைத்தேடி அலைவதைக் காணக்கூடியதாயுள்ளது.

அத்தோடு, மிருகங்கள் உணவாக உண்ணக் கூடிய சரணாலயத்திலுள்ள தாவரங்கள், புற்கள் என்பனவும் காய்ந்துபோயுள்ளதினால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வரண்டுபோயுள்ள குளங்களுக்கு பவுஸர்களினூடாக நீரை ஊற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

## பேருவளை ஸபீலுல் ஹுதா மத்ரஸாவின் பரிசளிப்பு விழா



பேருவளை அம்பேபிட்டிய பகுதியில் இயங்கி வரும் ஸபீலுல் ஹுதா குர்ஆன் மத்ரஸாவின் இவ்வருடத்திற்கான (2023) வருடாந்த பரிசளிப்பு விழா மத்ரஸா வளாகத்தில் மத்ரஸா அதிபர் மௌலவி பாஹிம் தலைமையில் அண்மையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சீனன்கோட்டை பள்ளிச்சங்கத்தலைவர் முக்தார் ஹாஜியாருக்கு மத்ரஸா நிர்வாக சபை உறுப்பினர் நளீம் ராஜா ஞாபகார்த்த சின்னம் வழங்குவதையும் விசேட அதிதிகளில் ஒருவரான நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) விசேட உரை நிகழ்த்துவதையும் விசேட அதிதி அதிவணக்கத்திற்குரிய வலதர சுபூதி நாஹிமி மற்றும் சமூக சேவையாளர் சர்பான் முஸம்மில் ஆகியோர் மாணவர்களுக்கு பரிசு வழங்குவதையும் கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்கள், பெற்றோர்கள் நிகழ்வுகளை கண்டுகளிப்பதையும் மத்ரஸா மாணவ மாணவிகளையும் படங்களில் காணலாம்.

# வெலிகமயில் சின்னம்மை நோய் பரவும் அபாயம்

### தடுப்பூசி ஏற்றும்பணிகள் நாளை

**வெலிகம தினகரன் நிருபர்**



நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக சின்னம்மை நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனைக் கட்டுப்படுத்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையொன்றை வெலிகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இத்தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நாளை 26 ம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் வெலிகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் சமுகமளித்து தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இச் சின்னம்மை நோயினால் கண் பார்வை குறைவு, செவிட்டுத் தன்மை ஏற்படல், வயிற்றோட்டம், மூளை அழற்சி போன்ற நோய்களும் ஏற்படக் காரணமாக அமையலாம் எனவும் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

தகுந்த காரணமின்றி இத் தடுப்பூசியை ஏற்றாதோர் பற்றி விசாரணை மேற் கொண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் வெலிகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தீர்மானித்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 25 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.46
லுஹர் - 12.14
அஸர் - 03.25
மஃரிப் - 06.22
இஷா - 07.34

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் ஆவணி 09
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## HIV தொற்றாளர் தொகை அதிகரிப்பு



2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம் எச்.ஐ.வி தொற்றாளர் எண்ணிக்கை 48 சதவீதம் அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது.

15 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட அதிகமானோர் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகின்றமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில், இதுவரை நான்காயிரத்து நூறு எச்.ஐ.வி தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக எய்ட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது.

# தடையின்றி குடிநீரை வழங்குவதற்கு கூட்டு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

**பிரதமர் தலைமையில் அமைச்சர் ஜீவன் ஆராய்வு**



நாட்டில் கடும் வரட்சி நிலவுவதால், குடிநீர் தேவையை அத்தியாவசிய அவசர நிலையாகக் கருதி, தடையின்றி குடிநீரை வழங்குவதற்கான கூட்டு வேலைத் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கோரிக்கைக்கமைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில், பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கூட்டதிலே, இது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நீர்வழங்கல், நீர்பாசனம், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுகள் இணைந்தே கூட்டு வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. பிரதமரின் செயலாளர் தலைமையில் மேற்படி மூன்று அமைச்சுகளின் செயலாளர்களை உள்ளடக்கிய வகையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. துறைசார் அரச நிறுவனங்களும் இக்குழுவுடன் இணைந்து செயற்பட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் கடும் வரட்சியால் குடிநீரை பெறுவதில் உள்ள சிக்கல்கள், சுகாதாரமான நீரை வழங்குவதில் உள்ள நெருக்கடிகள் பற்றி ஆராய்ந்து, இது தொடர்பில் கருத்துகளும் பெறப்பட்டன. அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், ரொஷான் ரணசிங்க, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, சுதர்சன தெனிபிட்டிய, ஜகத் சமரவிக்கிரம மற்றும் பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க உள்ளிட்ட பிரதமர் அலுவலக அதிகாரிகள், நீர்ப்பாசன அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு மற்றும் மகாவலி அதிகார சபை ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

## சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தல் இலங்கைத் தமிழர் முன்னிலை

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மும்முனை போட்டி ஏற்பட்டுள்ளது. இதில் இலங்கையை பூர்விகமாக கொண்ட தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் முன்னிலையில் உள்ளார்.

இந்தத் தேர்தலில் இலங்கை தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் (66) மற்றும் இங் கொக் சொங் (76), டான் கின் லியான் (75) ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர். அவர்கள் 03 பேரும் அதிகாரபூர்வ வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டதால், ஜனாதிபதி தேர்தலில் மும்முனை போட்டி ஏற்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரம் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் நிறைவு பெறவுள்ளது. செப்டம்பர் முதலாம் திகதி வாக்களிப்பு நடைபெறும். சுமார் 27 இலட்சம் பேர் வாக்களிப்பரென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் கடந்த 2001ஆம் ஆண்டு சிங்கப்பூரின் ஜூரோங் தொகுதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிங்கப்பூர் நாணய திணைக்களத்தின் தலைவர், பிரதமரின் ஆலோசகர், நிதி அமைச்சர், கல்வி அமைச்சர், துணை பிரதமரென பல்வேறு பதவிகளை இவர், வகித்துள்ளார்.

தர்மன் சண்முகரத்னம் சிங்கப்பூரின் ஆளும் கட்சியான மக்கள் செயல் கட்சியின் ஆதரவு பெற்றவரென்பதால், சிங்கப்பூரின் அடுத்த அதிபராக அவர் தேர்வு செய்யப்படுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய 02 வேட்பாளர்களும் சுயேச்சையாக களமிறங்கியுள்ளனர்.

# இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்தும் உதவும்

**காணொளி செய்தியில் இந்திய வெளியுறவு அமைச்சர்**

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணொளிச் செய்தி மூலம் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற இலங்கை இந்திய நாடாளுமன்ற நட்புறவுச் சங்க கூட்டத்தின் போதே, இந்திய வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கூட்டத்தில் உரையாற்றுகையில், உணவு பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, நாணய ஆதரவு மற்றும் நீண்ட கால முதலீடு ஆகிய நான்கு முக்கிய துறைகளில் இந்திய இலங்கை உறவுகள் மேலும் மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

இந்நிலையில் இலங்கை இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஊடாக பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய சபாநாயகர், இந்தியா வழங்கும் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கை இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளர் நாடாளுமன்ற 06

# 'விமானம் அவசர தரையிறக்கம்'

## தவறாக வெளியான செய்தி என ஸ்ரீலங்கன் நிறுவனம் மறுப்பறிக்கை



கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை (23) டெல்லிக்குப் புறப்பட்ட ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம், இந்தியாவின் இந்திரா காந்தி விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கம் செய்யப்பட்டதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையுமில்லையென ஸ்ரீலங்கன் நிறுவனம் அறிவித்துள்ளது.

இருப்பினும், அந்த விமானத்தின் ஹைட்ராலிக் அமைப்பில் ஒரு சிறிய தவறு ஏற்பட்டது. இது போன்ற சம்பவங்கள் அவ்வப்போது பதிவாகி வருகின்றன. இது ஒரு சாதாரண நிலைமையே. இவ்வாறான நிலைமைகளில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக விமானக் குழுவினர் முழுப் பயிற்சி பெற்றுள்ளனர். இத்தகைய ஒரு சூழ்நிலையில் பயணிகளின் பாதுகாப்புக்காக விமானம் தரையிறக்கப்பட்டது. பின்னர் இவ்விமானம் திட்டமிடப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே டெல்லியைச் சென்றடைந்ததாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் இலங்கை வருகிறார்

**பெற்றொலிய துறை குறித்து கலந்துரையாடல்**

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அடுத்தமாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இங்கு வரும் இந்திய பாதுகாப்பு அமைச்சர், இந்தியா மூலோபாயரீதியில் முதலீடு செய்துள்ள திருகோணமலைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இருநாடுகளுக்குமிடையில் பெற்றோலிய உற்பத்திகளை பரிமாற்றம் செய்வதற்கான குழாய் உருவாக்கம் தொடர்பிலேயே, அமைச்சரின் திருகோணமலை விஜயம் அமைந்திருக்குமென தெரிவிக்கப்படுகிறது. இவரது வருகையில் மேலும் பல இராஜதந்திர விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

# சந்திர மண்டலத்தை பாரதம் தொடும் போது நாம் தரைக்குள் தொல்பொருளை தேடுகிறோம்



சந்திரனில் தடம் பதித்த நான்காம் நாடாகவும், நிலவின் தென்முனையில் விண்கலத்தை இறக்கிய முதலாவது நாடாகவும் பாரதம் சரித்திரம் படைத்துள்ளது. இந்திய மக்களுக்கும், அரசுக்கும், குறிப்பாக இந்திய இஸ்ரோ நிறுவனத்தின் "மூன்ப்ராஜெக்ட்" வேலைத்திட்ட பணிப்பாளர் வீரமுத்துவேல் தலைமையிலான விஞ்ஞான தொழினுட்ப அணிக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களென தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இந்த சாதனையை எண்ணி, தென்னாசிய நாட்டவராகவும், இந்திய வம்சாவளி தமிழராகவும் பெருமையடைகிறேன். ஆனால், வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலை பாரதம் தொடும் போது, நாம் தரைக்கு கீழே தொல்பொருளை தேடுகிறோமென்ற உண்மையை உணர்ந்து வருவதாகவும் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது, பாரதம் தந்த 13 ஆவது திருத்த மாகாண சபையும் இன்று குருந்தூர் மலையில் ஏறி விழுந்து நிற்கிறது. அது காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்று இழுபறிபடுகிறது. சரித்திரத்திலிருந்து பாடம் படிப்பதற்கு பதிலாக, எல்லா பிரச்சினைகளுக்கும் சரித்திரத்துக்குள் நுழைந்து பதில் தேடும் தோற்றுப்போனநாட்டவராகநாம் இன்று இருக்கிறோம்.

தொல்பொருள் அகழாய்வு பிரதேசம், மதங்களுக்கும், மத நிகழ்வுகளுக்கும் இடம் தராத பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக இருக்க வேண்டும். அது தொடர்பான எல்லா வரலாறு உண்மைகளையும் ஆவணப்படுத்தி ஆர்வலர்களுக்கு எடுத்து கூறும் அரச நிறுவனமாக இருக்க வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனையறிவு எமக்கு இல்லை. ஆகவே, ஒருநாள், மாலைத்தீவும் இப்படி "மூன்ரொக்கட்" அனுப்பும் வரை நாம் இப்படி தொல்பொருளாராட்சியில் தேடி மோதிக் கொண்டேஇருப்போமென்றும்அவர் தெரிவித்துள்ளார்.

# தபால் துறையை நவீனமயப்படுத்த ரூ.10 பில். செலவில் வேலைத்திட்டம்

**அரச, தனியார் துறை நடவடிக்கை**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தபால் துறையை நவீனமயப்படுத்துவது தொடர்பில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் 10 பில்லியன் ரூபா செலவில் அரச மற்றும் தனியார் துறை இணைந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும், ஊடகத் துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, அண்மைக் காலமாக பல தபால் நிலையங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டு வரும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக தெரிவித்த ராஜாங்க அமைச்சர், இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபருடனும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தபால் நிலையங்களுக்கு பொலிஸாரின் 06

# முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்கள் பொதுத் தளத்தில் ஒன்றுபட வேண்டும்

**புதிய தலைவர்களை அடையாளம் காண இதுவே வழி**



சமகால அரசியல் சவால்கள் விடயத்தில் முஸ்லிம்க ளை சரியாக வழிநடத்துவதற்கு முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் முன்வர வேண்டுமென,தேசிய செயற்பாடுகள் அமைப்பின் தலைவி ஜெஹான் ஹமீட் தெரிவித்துள்ளார்.இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகள் மும்முரமாகியுள்ள இச் சூழலில்,முஸ்லிம் அரசியல் தலைமைகளை நம்பியிராமல் பொதுத்தளம் ஒன்றில் செயலாற்ற,முஸ்லிம் சமூகத்தின் சிவில் அமைப்புக்கள் ஒன்றுபடுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மூன்று தசாப்தங்களாக நாட்டில் நிலவும் அதிகாரப்பகிர்வு மற்றும் இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளில்,முஸ்லிம் களின் வகிபாகம் சமூகப்படுத்தப்படவோ அல்லது சர்வதேசமயப்படுத்தப்படவோ இல்லை.இதற்கான காரணங்களை கண்டறிய வேண்டிய தேவை 06

# நாட்டில் கடும் வரட்சியான காலநிலை 61,000 ஏக்கர் விவசாய காணிகள் பாதிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

**ஹெக்டேயருக்கு ரூ.01 இலட்சம் நட்ட ஈடு விரைவில் வழங்க நடவடிக்கை**
**– இராஜாங்க அமைச்சர் ஹேரத் தெரிவிப்பு**

வரட்சியான காலநிலையால் 51,035 ஏக்கர் நெற் பயிர்ச் செய்கையும்10,000 ஏக்கர் மரக்கறி உட்பட ஏனைய பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட விவசாய காணிகளுக்கு ஹெக்டேயருக்கு ஒரு இலட்சம் ரூபா அடிப்படையில் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலையால் சிறுபோக பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நட்டஈடு தொடர்பில் மொஹமட் முஸம்பில் எம்.பி கேள்வி எழுப்பினார்.இதற்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலையால் 510,35 ஏக்கர் நெற் பயிர்ச்செய்கைகளும்10 ஆயிரம் ஏக்கர் மரக்கறி உட்பட ஏனைய பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

நெல்,மிளகாய்,சோளம்,உருளைக்கிழங்கு மற்றும் சோயா ஆகிய பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு நட்ட ஈடு வழங்க, மதிப்பாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய ஒரு ஏக்கர் விவசாய காணிக்கு 40 ஆயிரம் ரூபாவும்.ஒரு ஹெக்டேயர் விவசாய காணிக்கு 01 இலட்சம் ரூபா என்ற அடிப்படையிலும் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் விவசாய காணிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில், இதுவரை மதிப்பாய்வு தகவல்கள் கிடைக்கவில்லை. 06

# இலங்கையில் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் 33 படகுகளுக்கு நஷ்ட ஈடு

**ரூ.1.23 கோடி நிதி வழங்க தமிழக அரசு நடவடிக்கை**

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 33 படகுகளுக்கு, தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 01.23 கோடி ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

இலங்கை கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட வலைகள், படகு மூலம் மீன் பிடிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படுகிறது. அதேபோல, இலங்கை கடல் பகுதியில் மீன் பிடிக்கும் வெளிநாட்டுப் படகுகளுக்கும் தண்டனை மற்றும் அபராதம் விதிப்பதற்கான புதிய சட்டம் இலங்கை கடற்றொழில் அமைச்சின் மூலம் 2018 ஜனவரி 24ல் இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் படகின் நீளத்தைப் பொறுத்து, இலங்கை மதிப்பில் 50 இலட்சம் ரூபா முதல் அதிகபட்சமாக 17.5 ரூபா கோடி வரை அபராதமும், கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு சிறைத் தண்டனையும் விதிக்க முடியும்.

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து இலங்கை கடற் படையினரால் சிறைப் பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் நீதிமன்ற காவலுக்குப் பிறகு விடுதலை செய்யப்படுகின்றனர். ஆனால், கைப்பற்றப்பட்ட படகுகளை அந்நாட்டு நீதிமன்றத்தில் படகின் உரிமையாளர் ஆஜராகி, ஆவணங்களைச் சமர்ப்பித்து வாதிட்டால் மட்டுமே, படகு விடுவிக்கப்படுகிறது. 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 09ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 08

### குறள் தரும் சிந்தனை



பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

பண்புடைய பெரியோர் எல்லோரிடமும் எப்பொழுதும் பணிவுடன் பழகுவார்கள்; பண்பு இல்லாத சிறியோர், தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டு இறுமாந்து கிடப்பார்கள்.

# வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நெற்காணிகளுக்கு நஷ்டஈடு

நாட்டில் நிலவிவரும் வரட்சியான காலநிலை காரணமாக உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக நெற்செய்கை மாத்திரமல்லாமல் ஏனைய உணவுப் பயிர்ச்செய்கை நிலங்களும் பாதிப்புகளுக்கு உள்ளாகி உள்ளன.

தற்போதைய வரட்சி காலநிலையால் நெற்செய்கை உள்ளிட்ட ஏனைய உபஉணவுப் பயிர்ச்செய்கை நிலங்களுக்கும் நீர் வழங்கும் குளங்களதும் நீர்த்தேக்கங்களதும் நீர்மட்டம் பெரிதும் குறைவடைந்து வருகிறது. சில பிரதேசங்களில் குளங்களும் நீரேந்து பிரதேசங்களும் வற்றிவரண்டு போயுள்ளன.

இதேவேளை அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள திறப்பனை பிரதேசத்தில் நிலவும் வரட்சியினால் மிளகாய்ப் பயிர்கள் வாடிக் கருகியுள்ளமைக்கு நேற்றுமுன்தினம் தேசிய ஊடகமொன்று முன்பக்கத்தில் பிரசுரித்து முக்கியத்துவம் அளித்திருந்தது. இதன் ஊடாக நாட்டில் நிலவும் வரட்சியின் அகோரம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அந்தக் அகோரத்தின் வெளிப்பாடே இந்த அழிவுகளும் பாதிப்புகளும் ஆகும்.

இவ்வரட்சியினால் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்படுவதானது உணவு நெருக்கடிக்கு வழிவகுக்க முடியுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. விவசாய அமைச்சின் தரவுகளின்படி, நாடெங்கிலும் 51,055.19 ஏக்கர் நெற்செய்கை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஏனைய பயிர்ச்செய்கை நிலங்கள் 424.70 ஏக்கர்களும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளன. உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைகளில் ஏற்பட்டுவரும் இப்பாதிப்புக்களை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

அதேநேரம் தற்போதைய வரட்சிக் காலநிலையினால் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைகள் எதிர்கொண்டுள்ள பாதிப்புகளும் அழிவுகளும் எதிர்காலத்தில் விவசாயிகள் அவற்றில் இருந்து தூரமாகிவிடக்கூடிய அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளன. ஏனென்றால் தற்போதைய வரட்சிக் காலநிலை உணவு உற்பத்தி விவசாயத் துறையில் ஏற்படுத்திவரும் தாக்கங்களும் பாதிப்புகளும் சாதாரணமானவை அல்ல. அவ்வாறானதொரு பாதிப்பு எதிர்காலத்தில் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அது தொடர்பிலான அச்சமும் விவசாயிகள் மத்தியில் நிலவவே செய்கின்றது. அதனால் இவ்வாறான அனர்த்தத்திற்கு உள்ளாகும் போது அதற்கென நியாயமான நிவாரணத்தை நஷ்டஈடாக அவர்கள் எதிர்பார்க்கவே செய்கின்றனர்.

இவ்வாறான சூழலில் உள்நாட்டு உணவு உற்பத்தி விவசாயத் துறையைப் பாதுகாப்பது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது. ஏனெனில் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையில் இருந்து விவசாயிகள் தூரமானால் ஏற்படக்கூடிய தாக்கங்களையும் பாதிப்புக்களையும் குறைத்து மதிப்பிட முடியாதிருக்கும்.

அந்த வகையில்தான் தற்போதைய வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நெற்செய்கையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா இந்நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இத்தொகையானது 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய தீர்மானிக்கப்பட்டதாகும். நெற்செய்கை உள்ளிட்ட ஆறு பயிர்ச்செய்கைகளுக்கு இச்சுற்றறிக்கைப்படி நஷ்டஈடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் 'இது போதுமான தொகை அல்ல' என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய போது 'அதனை தாமும் ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளதோடு, தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு அமைய நஷ்டஈட்டுத் தொகை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாமும் இருப்பதாகவும் விவசாய அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரின் கூற்றின்படி, இத்தொகை அதிகரிக்கப்படுவது அவசியமானது. இற்றைக்கு ஆறு வருடங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில்தான் ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா என நஷ்டஈடு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதே தொகையை இன்றும் வழங்கத் தீர்மானிப்பது நியாயமானதல்ல என்பதே விவசாயிகளின் கருத்தாகும்.

ஆனால் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான இந்நாடு, கட்டம் கட்டமாக மீட்சி பெற்று தற்போது மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கிறது. இந்தச் சூழலில்தான் மக்களும் வரட்சியின் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம் கொடுத்திருக்கின்றனர்.

அதனால் விவசாயிகள் உணவு உற்பத்திப் பயிர்ச்செய்கையில் தொடர்ந்தும் ஆர்வத்துடன் ஈடுபடுவதற்கு ஏற்ப வரட்சி நஷ்டஈட்டு தொகை தீர்மானிக்கப்படுவதே உசிதமானது. எதிர்காலத்திலும் விவசாயிகள் ஆர்த்துடன் பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும். அதற்கான ஊக்குவிப்பை அளிக்கும் வகையில் நஷ்டஈடு தொகை அமைய வேண்டும். அதுவே விவசாயிகளின் எதிர்பார்ப்பாகும். அதற்கேற்ப தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். அது நாட்டின் எதிர்கால உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையை வலுப்படுத்தி மேம்படுத்தக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# தமிழ்நாடு சிவாக்கர தேசிக சுவாமிகள் மலையகத்தில் ஆன்மீக அருளுரை

## இன்று எட்டியாந்தோட்டை, மீம்பிடிகந்க பாகுளி அறநெறிப் பாடசாலையில்



தமிழ்நாடு திருஞானசம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் கேகாலை மாவட்டத்திலும், அவிசாவளை, கொட்டகல, ஹட்டன் ஆகிய பகுதிகளிலும் அறநெறிப் பாடசாலைகள், ஆலயங்களில் ஆன்மீக அருளுரைகள் நிகழ்த்துவதற்காக நேற்றுமுன்தினம் 23 ஆம் திகதி இலங்கை வந்து சேர்ந்தார்.

நேற்று (24) பிற்பகல் 2.00 மணிக்கு எட்டியாந்தோட்டை, கௌனி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய அறிநெறிப் பாடசாலையில் அருளுரை நடைபெற்றது. இன்று வெள்ளிக்கிழமை (25) பிற்பகல் 2.00 மணிக்கு எட்டியாந்தோட்டை, மீம்பிடிகந்க பாகுளி அறநெறிப் பாடசாலையிலும், சனிக்கிழமை (26) பிற்பகல் 1.00 மணிக்கு எதுராபொல ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயத்திலும், ஞாயிற்றுக் கிழமை (27) பிற்பகல் 2.00 மணிக்கு எட்டியாந்தோடை ஸ்ரீ விநாயகர் ஆலயத்திலும், திங்கட்கிழமை (28) காலை 7.00 மணிக்கு எலிஸ்டன் தோட்ட சிவலிங்க பிரதிஷ்டையிலும், பிற்பகல் 2.00 மணிக்கு எட்டியாந்தோட்டை சாந்த மரியால் பாடசாலையிலும், செவ்வாய்க்கிழமை (29) பிற்பகல் 2.00 மணிக்கு கனேபல்ல ஸ்ரீ துர்க்க அறநெறி பாடசாலையிலும், புதன்கிழமை (30) காலை 9.00 மணிக்கு அரனாயக தமிழ் ஆரம்ப பாடசாலையிலும், வியாழக் கிழமை (31) பிற்பகல் 2.00 மணிக்கு பூணுகல ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திலும், வெள்ளிக்கிழமை (01) பிற்பகல் 2.00 மணிக்கு கொட்டகல அறநெறி பாடசாலையிலும், சனிக்கிழமை (02) காலை 9.00 மணிக்கு ஹட்டன், ஓம் ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் தேவஸ்தானம், பன்மூர்பதியிலும், ஞாயிற்றுக்கிழமை (03) காலை 9.00 மணிக்கு வரக்கபொல ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்திலும், பிற்பகல் 2.00 மணிக்கு அவிசாவளை அறநெறி பாடசாலையிலும் மற்றும் திங்கட்கிழமை (04) பிற்பகல் 2.00 மணிக்கு ரூவான்வெல்ல அறநெறி பாடசாலையிலும் சுவாமிகளின் ஆன்மீக அருளுரைகள் நடைபெறவுள்ளன.

தமிழகத்திலிருந்து வருகை தரும் சுவாமிகள் நடத்தும் காலை, மாலை நிகழ்வுகளில் கலந்து கொண்டு இறையருள் பெறுவதோடு சுவாமிகளின் அருளாசிகளையும் பெற்றுக் கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எச்.எச்.விக்கிரமசிங்க...

# முஸ்லிம் பெண்கள் சுயவிருப்பில் அணிகின்ற ஆடை பர்தா

பர்தா பற்றிய பிழையான விமர்சனங்களுக்கு பல காரணகள் இருப்பினும் பிரதானமாக இரண்டு காரணங்கள் உள்ளன என்று சொல்லலாம். ஒன்று, பர்தா என்றால் என்ன என்ற தெளிவான விளக்கமின்மை, அடுத்தது அதன் பூர்வீகம் பற்றிய தெளிவான அறிவின்மை.

பர்தா பற்றி விமர்சிப்பவர்கள் சிலர் அல் குர்ஆனை கையில் வைத்துக் கொண்டு பிழையாக விளக்கம் சொல்கின்றனர். அது மிகவும் கவலையை அளிக்கிறது. குர்ஆனின் மொழி சாதாரண அரபு மொழியல்ல. அது classical அரபு மொழியில் உள்ளது. இதனைக் குர்ஆனிக் அரபு (Quranic Arabic) என்றும் சொல்வர். இது ஒரு உயர் தரப்படுத்தப்பட்ட இலக்கிய அரபு என்றும் கூறுவர்.

இது ஒரு புனிதமான மொழி என்றும் கூறப்படுகிறது. எனவே, குர்ஆன் சாதாரணமாக அரபியர்கள் பேசும் அல்லது எழுதும் அரபு மொழியில் எழுதப்படவில்லை. குறிப்பாக அரபு மொழியினை தாய்மொழியாகக்கொண்ட அராபியர்கள் கூட ஒரு சமய அறிஞரின் உதவியுடனேயே குர்ஆனை விளங்கிக் கொள்கின்றனர். குர்ஆனை பிழையாக விளங்கிக்கொள்பவர்கள் அதனை விளங்கிக்கொள்வதற்கு இஸ்லாமிய கல்விமான்களால் எழுதப்பட்ட விளக்கவுரைகளையும் வாசிக்க வேண்டும்.

மேலும், இஸ்லாமியர்களின் வாழ்க்கை முறையானது, கலாசாரமானது குர்ஆனை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. அதற்கு மேலதிகமாக ஹதீஸ்), இஜுமா, கியாஸ் என்பனவற்றையும் அடிப்படையாகக் கொண்டவை. எனவே, பர்தாவைப் பற்றிய தெளிவினைப்பெறுவதற்கு இவற்றை எல்லாம் வாசித்து, அவற்றில் பர்தா பற்றி என்ன கூறப்படுகின்றது



என்று அறிந்த பின்னரே அதுபற்றிப் பேச வேண்டும்.

பர்தா தொடர்பான நபிமொழிகளை முழுமையாக வாசித்துத் தெளிவாக விளங்கிக்கொள்ளாதவரை ஒருவர் பர்தா பற்றிக் கருத்துச் சொல்ல நிச்சயமாக தகுதி பெற்றவரல்லர். அதனால் அல் குர்ஆன், நபிமொழிகள், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை உதாரணங்கள், போதனைகள், வழிகாட்டல்கள், அவற்றை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய அறிஞர்கள் எடுக்கும் முடிவுகள், இவை எல்லாவற்றையும் முழுவதும் ஆய்வு செய்ததன் பின்னர் பர்தா பற்றிக் கருத்துச்சொல்வதே அழகு.

பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் ஏதோ ஒரு வகையான பர்தாவை அணிகின்றனர். மேற்கத்தைய நாடுகளில்கூட முஸ்லிம் பெண்களில் கணிசமானவர்கள் பர்தா அணியக்கூடியவர்களாக உள்ளனர். உதாரணமாக அமெரிக்காவிலும் கணிசமான முஸ்லிம் பெண்கள் தமது சொந்த விருப்பத்தின்படி பர்தா அணிகின்றனர். இவர்கள் எவரும் பர்தா அணியும்படி கட்டாயப்படுத்தப்படவில்லை. எனவே தமது சொந்த விருப்பத்தின்படி பர்தா அணியும் கோடிக்கணக்கான முஸ்லிம் பெண்களை பெண்ணுரிமைக்கு எதிரான கோசமாகவே, பர்தாவுக்கு எதிராகக் கதைப்பவர்களின் கருத்துக்களை எடுத்துக்கொள்ள வேண்டும். தமது சுயவிருப்பத்தின் மூலம் பர்தா அணியும் பெண்களின் உரிமையினை சில நாடுகளில் சட்டத்தின் மூலம் மறுப்பது அவர்களது பெண்ணுரிமைக்கெதிரான அடக்குமுறை ஆகும்.

ஈரான், ஆப்கானிஸ்தான் போன்ற ஒரு சில நாடுகளில் மட்டுமே பர்தா கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதை வைத்துக்கொண்டு முழு முஸ்லிம் பெண்களையும் விமர்சிக்கவோ குறைகூறவோ முடியாது. இந்த நாடுகளில் கூட, இலட்சக்கணக்கான முஸ்லிம் பெண்கள் இஸ்லாம் மார்க்கத்தின் நிமித்தம் முழு விருப்பத்துடன் பர்தா அணிகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள சுமார் 2 கோடி பெண்களில் பெரும்பான்மையானவர்கள் தமது சொந்த விருப்பத்தின்படியே சமய கலாசார காரணங்களுகாக பர்தாவை அணிகின்றனர். ஈரான், ஆப்கானிஸ்தான் அரசுகள் சட்டரீதியாக பர்தா அணியும் நிலையினை மாற்றினால் கூட இவர்கள் தொடர்ந்து பர்தாவை அணிவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எம்.வை.எம். சித்தீக்...

# உலகினால் இதுவரை இயலாததை சாதித்துக் காட்டிய இந்திய தேசம்!

இந்தியாவின் சந்திரயான் 3 விண்கலத்தின் லேண்டர் நேற்றுமுன்தினம் மாலை நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கியதன் மூலம் உலகம் இதுவரை ஈட்ட முடியாத சாதனையை இந்திய தேசம் ஈட்டியுள்ளது.

நிலவின் தென்துருவத்தில் இதுவரை விண்கலத்தை தரையிறக்க உலகின் பல நாடுகளும் முயன்று வந்த போதிலும் அது முடியாத காரியமாகவே இருந்தது. ஆனால் அத்தனை நாடுகளையும் முந்திக் கொண்டபடி இந்தியா நேற்றுமுன்தினம் நிலவில் தரையிறங்கியுள்ளது.

விக்ரம் லேண்டர் நேற்றுமுன்தினம் நிலவில் வெற்றிகரமாக இறங்கியதும் பெங்களூரில் இருக்கும் இஸ்ரோ கட்டுப்பாட்டு அறையில் இருந்து அது புகைப்படமாக எடுக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்று கவனத்தை ஈர்த்துள்ளது.

நிலவின் தென்துருவம் என்பது மர்மங்கள் நிறைந்தது. இதுவரை நிலவின் தென் துருவங்களுக்கு உலகின் எந்த ஒரு கருவியும் சென்றதே இல்லை. நாம் எப்போதும் நிலவின் வடக்கு பகுதியை மட்டுமே பார்த்து வருகிறோம். நிலவின் தென் பகுதி எப்படி இருக்கும் என்பதே நமக்குத் தெரியாது.

நிலவின் தென்பகுதி என்பது நாம் பார்க்காத நிலவின் பின்பக்கம். இந்த பின்பக்கம் என்பது சுமார் 2 பில்லியன் ஆண்டுகளாக சூரியஒளியே படாத பகுதி ஆகும். இங்கே சூரிய வெளிச்சம் இன்றி வெறும் இருளான, குளிரான பகுதிகள் மட்டுமே உள்ளன. மிகக்குறைவான அளவில் அதிகாலைச் சூரியன் வெளிச்சம் மட்டுமே இருக்கும். அங்குதான் தற்போது விக்ரம் லேண்டர் களமிறங்கி உள்ளது. விக்ரம் லேண்டர் களமிறங்கி சுமார் 4 மணி நேரம் கழித்து அதில் இருந்த பிரக்யான் ரோவரும் களமிறங்கி உள்ளது.

இந்தப் புகைப்படங்களை உடனுக்குடன் சந்திரயான் 3 அனுப்பி வருகிறது. சந்திரயான் 3 இன் விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கிய நிலையில் இஸ்ரோ கட்டுப்பாட்டு அறையில் நேற்றுமுன்தினம் காணப்பட்ட காட்சி ஒன்று பெரிய அளவில் கவனம் பெற்றுள்ளது.

கட்டுப்பாட்டு அறையில் அதிக அளவில் பெண் பொறியியலாளர்கள் வரிசையில் அமர்ந்து இருந்தது பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதாவது சாதாரண எளிமையான புடைவையில், பெரிய ஆர்ப்பாட்டம் இன்றி பெண் பொறியியலாளர்கள் அமர்ந்து இருந்தது பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இக்காட்சியானது இந்தியாவின் பாலின சமத்துவத்துவதையும், பெண்களின் முன்னேற்றத்தையும் உலக நாடுகளுக்கு முன்னிறுத்துவதாக உள்ளது. அரைவாசித் தொகையினராக பெண்கள் அங்கே அமர்ந்து இருந்த காட்சி பெண்களின் அறிவியல் ரீதியான

முன்னேற்றத்தை உணர்த்தும் விதமாக அமைந்து உள்ளது. முக்கியமாக உலக நாடுகள் பலவற்றிற்கும் இந்தியா குறித்த புதிய பிரதிமையை கொடுக்கும் காட்சியாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட ஒரு சில நாடுகள் மட்டுமே இதுவரை ரோவர்களை பூமிக்கு வெளியே அனுப்பி உள்ள நிலையில், இந்தியா முதன்முறை இவ்வாறு ஒரு ரோவரை பூமிக்கு வெளியே களமிறக்கி உள்ளது. அதிலும் நிலவின் தென்துருவத்தில் முதன்முறையாக வேற்றுக்கிரக பொருள் ஒன்று களமிறக்கப்பட்டுள்ளது.






இது இவ்விதமிருக்க, சந்திரயான் 3 திட்டம் வெற்றிபெற்று நிலவில் இந்தியா தடம் பதித்து வரலாற்று சாதனை படைத்ததை உலகின் பல்வேறு நாடுகளை சேர்ந்த ஊடகங்கள் பிரமிப்புடன் பாராட்டி செய்தி வெளியிட்டு வருகின்றன.

கடந்த ஜூலை மாதம் இந்திய விண்வெளி நிறுவனமான இஸ்ரோ சந்திரயான் 3 விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் ஏவியதில் இருந்தே இந்திய ஊடகங்கள் தொடர்ந்து அது குறித்து செய்தி வெளியிட்டு வருகின்றன. முதல் 2 முறைகள் வெற்றிபெறாத நிலையில், மூன்றாவது முயற்சி வெற்றிபெறுமா என்ற எதிர்பார்ப்புடன் இந்தியா மட்டுமின்றி உலகின் பல நாடுகள் இதை உற்று நோக்கி வந்தன.

## இதுவரை புரியாத மர்மமாக இருந்த நிலவின் தென்பகுதியில், முதன்முதலில் விண்கலத்தை இறக்கிய அறிவியல் தேசம் பாரதம்!

நேற்றுமுன்தினம்மாலை நிலவின் தென் துருவத்தைத் தொட்ட முதல்நாடு என்ற பெருமையை சந்திரயான் 3 விண்கலம் மூலம் பெற்ற இந்தியாவின் புகழைப் போற்றி இந்தியாவின் ஆங்கில மற்றும் பிறமொழி ஊடகங்கள் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன. உலகின் பல தொலைக்காட்சிகள் நேரடி ஒலிபரப்புகளையும் செய்தன.

இந்திய ஊடகங்கள் மட்டுமின்றி உலகளவில் முன்னணியில் இருக்கும் பல ஊடகங்கள் இதுபற்றி பிரமிப்புடன் செய்தியை வெளியிட்டு இருக்கின்றன. ஒவ்வொரு இந்தியக் குடிமகனையும் பெருமைப்பட வைக்கும் அளவுக்கு சர்வதேச ஊடகங்களின் தலைப்புகள் உள்ளன.

பிரபல பிரிட்டன் ஊடகமான பி.பி.சி வெளியிட்டுள்ள செய்தியில், "சந்திரயான் 3 நிலவின் தென்துருவத்தில் இறங்கியதன் மூலம் இந்தியா வரலாறு படைத்துள்ளது" என அந்த ஊடகம் தலைப்பிட்டு இருக்கிறது. மற்றொரு பிரிட்டன் ஊடகமான தி கார்டியன், "வரலாற்றில் முதன் முறையாக நிலவின் தென்பகுதியில் இந்தியா விண்கலத்தை நிறுத்தியுள்ளது" என்று பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஊடகமான தி நியூ யோர்க் டைம்ஸ், "நிலா பந்தயத்தில், இந்தியா முதன்முறையாக தெற்கு மண்டலத்தை தொட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளது. மற்றொரு அமெரிக்க ஊடகமாக 'தி வோஷிங்டன் போஸ்ட் வெளியிட்டிருக்கும் செய்தியில், "நிலவின் தென்துருவத்தில் விண்கலத்தை நிறுத்திய உலகின் முதல் நாடாக இந்தியா அமைந்துள்ளது" எனத் தலைப்பிட்டு இருக்கிறது.

சிஎன்என் வெளியிட்ட செய்தியில், "இந்தியா நிலவை தொட்டு வரலாறு படைத்து உள்ளது" என தலைப்பு வைத்து இருக்கிறது. ஜெர்மனியில் DW வெளியிட்டு இருக்கும் செய்தியில், "நிலவின் தென் துருவத்தில் முதல் முறையாக இந்தியாவின் விண்கலம் தரையிறங்கி உள்ளது." என தலைப்பிட்டு உள்ளது.

# கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை கட்டடத் திறப்பு விழா

இக்பால் அலி

- வாசிக்க முடியாத சூழலில் கற்ற மாணவர்களுக்கு வசதியான இரண்டு மாடிக் கட்டடம்...
- தமிழ் வர்த்தகர் ஒருவரின் நிதி உதவியின் கீழ் 22 மில்லியன் ரூபா செலவு



**தமிழ் வர்த்தகர் ஒருவரின் நிதி ஒதுக்கீட்டில் 22 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரியின் இரண்டாம் மாடிக் கட்டடத் திறப்பு விழா பாடசாலை அதிபர் பெ. சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.**

**இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக மாணவர்களின் பாவனைக்காக கையளித்தார்.**

**இதன் போது மத்திய மாகாண பிரதான செயலாளர் ஜீ.எச்.எம்.ஏ. பிரேமசிங்க, கண்டி மாவட்டச் செயலாளர் சந்தன தென்னகோன், மத்திய மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாயாதுன்ன, மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ. ஆர். சத்தியேந்திரா உட்பட பல கல்வி சார் உத்தியோகஸ்தர்கள், கண்டி வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்கள், கண்டி இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.இதன் போது பாடசாலை மாணவர்களின் நடனம், கலை, கலாசார நிகழ்வுகள் வெகு விமர்சையாக நடைபெற்றன.**



## பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே

தமிழ் வர்த்தகர் ஒருவரின் நிதி ஒதுக்கீட்டில் இப்பாடசாலைக்கு மிகவும் அத்தியாவசியமாகக் காணப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தை நிர்மாணித்து மக்களுக்கு ஒப்படைக்கின்ற தினமாகும். எங்கள் பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர் சிறுமியர்களுக்கு கிடைக்கப் பெற்ற மிகப்பெறுமதியான வகுப்பறைக் கட்டடம் ஆகும். மாகாண சபை என்ற வகையிலும் அரசாங்கம் என்ற வகையிலும் எங்களுடைய மதிப்புக்குரிய கௌரவத்தையும் நன்றியினையும் எங்களுடைய நன்கொடையாளர் உட்பட அதற்கு தலைமைத்துவம் வழங்கிய அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.





நடராஜா அவர்கள் நல்ல மனம் படைத்த மனிதர் என்ற வகையில் நாங்கள் சந்தோசம் அடைகின்றோம். நல்ல காருண்ணிய உள்ளம் படைத்த மனிதர். இந்நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பில் ஏற்கவுள்ள சிறுவர் சிறுமிகளின் பயன்பாட்டுக்காக தான் தேடிய நிதியினை நன்கொடையாக வழங்கிய ஒருவர். மீண்டும் நாங்கள் அரசாங்கம் என்ற வகையிலும் மாகாண சபை என்ற வகையிலும் நன்றியினை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

உண்மையிலேயே இது நாங்கள் செய்ய வேண்டிய பணியாகும். அரசாங்கம் செய்ய வேண்டிய காரியம். மத்திய மாகாண சபை செய்ய வேண்டி காரியம். எனினும் நமது நாட்டில் கடந்த காலங்களில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலை எல்லோருக்கும் நன்கு விளங்கும். 2019 கொரோனா தொற்று, அதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி உட்பட சகல காரணங்களினால் மாகாண சபையினால் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது.

அரசால் கட்டட நிர்மாணப் பணிகளுக்கான நிதியுதவி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இவ்வாறான பாடசாலைகளுக்கு கட்டடம் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கான வாய்ப்புக்கள் இதுவரையிலும் கிடைக்கவில்லை. மாணவர்களுக்குத் தேவையான கட்டட வளங்கள், மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் யாவற்றையும் வழங்குவதற்கான வாய்ப்புக்கள் இனி வரும் காலங்களில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அந்த வகையில் நாங்கள் எதிர்பார்ப்பது இப்பாடசாலையில் சிறந்த மாணவர் சமூகத்தை உருவாக்குவதாகும்.

இப்பாடசாலை குறித்து கண்டி மாவட்ட பிரதம செயலாளர் சந்தன தென்னக்கோன் ஊடாக நான் அறிந்து கொண்டேன். அவர் இந்து சிரேஷ்ட பாடசாலையின் கட்டட நிர்மாணம் தொடர்பில் எமது செல்வந்தர் உட்பட ஏனைய நபர்களுக்கு பிரச்சினைகள், இடையீடுகள் ஏற்படுவதாக தன்னிடம் அதிபர் முறைப்பாடு தெரிவித்துள்ளார் என மாவட்ட பிரதம செயலாளர் ஒரு முறை என்னிடம் தெரிவித்தார். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி மாகாண சபையின் கல்வி அமைச்சின் மதீப்பீட்டின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யும் முறையில் சட்ட திட்டங்களை மாற்ற வேண்டிய அவசியம் இருந்தது.

அந்த சட்ட திட்டங்களுக்கு நாங்கள் உட்பட்டுச் செயற்பட்டால் எங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போய் விடும் நிலைமை இருந்தது. சட்டத்திற்கு மாறாக எமது தேவையைக் கருத்திற் கொண்டு செயற்படுதல் வேண்டும். மாற்றத்தை ஏற்படுத்தி நிதி ஒதுக்கீடு செய்யும் தொடர்பில் நேரடியாக செல்வந்தர் மூலமாக அதற்கான முழுச் செலவுகளை ஒதுக்கீடு செய்து கட்டடத்தை நிர்மாணித்துக் கொள்வது சிறந்தது எனக் கருதுகின்றேன்.





இது தொடர்பில் மத்திய மாகாண பிரதம செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணச் சபையின் பல செயலாளர்கள் எல்லோரும்சேர்ந்துகலந்துரையாடி இந்த நிதியினைப் பயன்படுத்துவதற்கான பங்களிப்பினை வழங்கினர். எனவே பாடசாலை அதிபர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோர்களது வேண்டுகோளுக்கு இணங்க துரிதகதியில் இப்பணத்தை பயன்படுத்துவது தொடர்பிலான முறையில் மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது. உண்மையிலேயே மாவட்ட செயலாளர். அதிபர் ஆகியோர் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் நாங்கள் எல்லோரும் சேர்ந்து எடுத்த நடவடிக்கையின் மூலம் சந்தோசம் அடைகின்றோம். இல்லையேல் இப்படியான கட்டடத்தை அமைத்துக் கொள்ளுவதில் இன்னும் தாமதம் ஏற்பட்டிருக்கும்.

இப்பிள்ளைகள் தங்களுடைய மூச்சைக் கூட சரியான முறையில் விட முடியாத சூழலில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நகரில் அமைந்துள்ள கொங்கிரீட், சீட் போன்றவற்றால் சிலவேளை மாணவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படலாம். இப்பிள்ளைகள் தமது வகுப்பறைகளில் அமர்ந்து கற்றலுக்கு உரித்தான சூழல்கள் இல்லாத இடங்களிலே கல்வி பயிலுகின்றனர். இந்தப் பாடசாலை பிள்ளைகள் மட்டுமல்ல இன்னும் பல பாடசாலைகள் உள்ளன. இது கண்டி நகரிலுள்ள பாடசாலைகளில் காணக் கூடியதாக இருக்கின்றது. ஏனைய பாடசாலைகளை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது இந்நிலைமை காணப்படுகிறது.

அந்த வகையில் மிக மோசமான நிலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் நலன்கருதி அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைக் கருத்திற் கொண்டு வகுப்பறைகள் மற்றும் ஏனைய அனைத்து வளங்களையும் கொண்டதாகவும் மாணவர் சுதந்திரமாக கல்வி பயிலக் கூடிய வகுப்பறைகளை நிர்மாணித்துக் கொடுத்ததையிட்டு நாங்கள் சந்தோசம் அடைகின்றோம்.

இந்தப் பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக உருவாவதற்கு உங்களையே ஒரு முன்மாதிரியாக ஏற்றுக் கொள்வார்கள். இப்பாடசாலை ஒரு சிறந்த பாடசாலையாகும். நல்ல புகழ் பெற்ற பழைய மாணவர்களை உருவாக்கிய பாடசாலை. எங்கள் நாட்டின் முன்னாள் பிரதமர் தி. மு. ஜயரட்ன ஆரம்பக் கல்வியினை இப்பாடசாலையில் கற்றுள்ளார். அதே போன்று நடிகர் தமிழ் நாட்டின் முதல் அமைச்சர் எம். ஜி. ராமச்சிந்திரன் ஆகியோர் கல்வி கற்றுள்ளனர். புகழ்பெற்ற பெரியார்களை உருவாக்கிய பாடசாலைக்கு இந்தப் புண்ணிய காரியத்தைச் செய்த தனவந்தருக்கு மத்திய மாகாண ஆளுநர் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இத்தகைய தனவந்தரைப் போன்று 10 பேர் இருந்தால் நிறையப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அப்படியான நல்ல மனிதர்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த கட்டட நிர்மாணப் பணிக்காக 22 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளார். அடுத்தவர்களுக்கு கொடுத்துதவி செய்வோர்கள் மிகக் குறைவு. அந்த வகையில் உங்களுடைய சமய முறைக்கு இணங்க நல்லதொரு உயர் பண்பாட்டைச் செய்துள்ளீர்கள்.

எதிர்காலத்தில் மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி உதவியின் மூலம் இப்பாடசாலையில் மேலும் பல குறைபாடுகள் உள்ளன. இப்பாடசாலையின் தேவையைக் கருத்திற் கொண்டு உதவி செய்ய இயலும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.







## தமிழ் வர்த்தகர் உரையாற்றும் போது

கண்டி இந்து சீனியர் பாடசாலைக்கு நானும் எனது துணைவியாரும் வந்த சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையின் கீழ் மாடியில் மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர்கள் அதற்கு உதவியாக இருந்தார்கள். அத்தோடு பாதையில் செல்லும் அனைத்து வாகனங்களின் சத்தம் எங்களது காதுகளுக்கு அசௌகரியமாக இருந்தது. எப்படி இந்த மாணவர்களுக்கு கல்வி கற்க முடியும்.

வேறு ஒரு நாள் நான் தனியாக வந்து பார்த்தேன். அப்பொழுது ஆசிரியரிடம் நான் மலசல கூடம் சொல்ல வேண்டும் என்று வினவினேன். கீழ் தரை முழுவதும் நீரில் மூழ்கியிருந்தது. எது மலசல கூடம், எது வகுப்பறை என்று விளங்கவில்லை. அப்பொழுது முதலில் இதைச் செய்வோம். அதற்கு என்ன செலவு போகின்றதோ அதைச் செய்வோம் என்று உடன் கூறினேன். என்னை உள்ளே அழைத்துச் சென்று பாடசாலையில் காணப்படும் அனைத்துப் பிரச்சினைகளையும் என்னிடம் முறையிட்டார்கள். அப்பொழுது இந்தப் பாடசாலைக்கு பிள்ளைகளை எப்படி அனுமதிக்கிறீர்கள் என்று அதிபரிடம் வினவினேன். அப்பொழுது அவர் பிள்ளைகள் இந்துவாக இருக்க வேண்டும் ஏழை மாணவர்களாக இருக்க வேண்டும். தாய் தந்தையர்கள் படித்தவர்கள் அல்லாதவர்களாக இருக்க வேண்டும் என்று கூறினார். இந்த முழு இலங்கையில் அப்படி ஒரு பாடசாலையை நான் பார்த்ததும் இல்லை கேட்டதுமில்லை. பெற்றோர்கள் படித்திருக்கிறார்களா? அவர்களால் எவ்வளவு பாடசாலைக்கு நன்கொடை வழங்க முடியும். அவர்கள் என்ன தொழில் செய்கிறார்கள். பிள்ளைகளை வழி நடத்துவார்களா என்றுதான் எதிர் பார்ப்பார்கள்.

ஆனால் உண்மையிலேயே இந்த கண்டி மாநகரத்தில் பணம் படைத்தவர்கள் சர்வதேச பாடசாலைகளுக்குச் செல்கிறார்கள். புகழ்பெற்ற கண்டி புனித திரித்துவக் கல்லூரி, புனித அந்தோனியார் போன்ற பாடசாலைகளுக்குச் செல்கின்றார்கள். அடுத்த படித்த தரத்தில் இருப்பவர்கள் புனித சில்வெஸ்டர் கல்லூரிக்குச் செல்கிறார்கள். அங்கே இடம் இல்லாமல் இருந்தால் எங்களை அரவணைத்துக் கொள்வது முஸ்லிம் பாடசாலைகளாகும். அங்கு சென்றால் இந்து சமயம் சார்ந்த பாடங்கள் கற்பிக்கப் படுவதில்லை. அங்கு இந்து சமயப் பாடநெறிக்கான ஆசிரியர்கள் இருப்பதுமில்லை. அப்பாடசாலைகள் குறித்து குறை கூற முனையவில்லை. ஆனால் அதுதான் உண்மையான நிலையாகும். அதே மாதிரித் தான் இந்துப் பாடசாலைகளில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களுக்கு இஸ்லாம் போதிக்கப்படுவதில்லை. இத்தகைய ஒரே மாதிரியான பிரச்சினைகளை அவர்களும் எதிர்நோக்குகின்றனர்.

அப்பொழுது நான் ஒரு மேல் மாடியை முழுமையாக முடித்துத் தருகின்றேன். ஏனையவர்களைக் கொண்டு அடுத்த மாடி வகுப்புக்களைக் கட்டிக் கொள்ளுங்கள் என்று கூறினேன். இப்பாடசாலைக்கு தற்போதைக்குத் தேவையான கட்டடத்தை வழங்கி விட்டேன். இக்கட்டடத்தில் உயர் தர வகுப்புக்களை உருவாக்கி வருடத்தில் ஐந்து மாணவர்களையாவது பல்லைக்கழகத்திற்கு அனுப்ப வேண்டும். அதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பாகும்.

இப்பாடசாலையின் கட்டட நிர்மாணப் பணியை ஒப்படைத்துக் கொடுத்து விட்டு சபை முன்னிலையிலும் நான் விடுக்கின்ற கோரிக்கை என்னவென்றால் நீங்கள் குளிர் அறையில் அமர்ந்து கொண்டு உங்கள் வசதிகளை மட்டும் பார்க்காமல் அம்மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக என்னென்ன உதவிகள் தேவையோ எங்களிடம் கேளுங்கள். இங்கே எங்கள் உறவினர்கள் வந்திருக்கிறார்கள். நண்பர்கள் வந்திருக்கிறார்கள்.

அவர்கள் கல்விப் பணிக்காக நிறைய உதவிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெளியே சொல்வதில்லை. அந்த உதவிகளைப் பயன்படுத்தி க. பொ. த உயர் தரப்பரீட்சையில் அதுவும் விஞ்ஞானப் பாடத்திற்கு முன்னுரிமை கொடுத்து பல்கலைக்கழகம் அனுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.





## இலங்கையின்... (03 ஆம் பக்கத் தொடர்)

உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர உட்பட அங்கத்தவர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தபால் துறையை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஒத்துழைப்புடன் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடை க்கான வினாக்கள் வேளையில், ராஜிகா விக்ரமசிங்க எம் பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ராஜிகா விக்ரமசிங்க எம்,பி நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தபால் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் உப தபால் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும் தமது கேள்வியின் போது கேட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர், நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தபால் அலுவலகங்களில் எண்ணிக்கை 4003 என்றும், உப தபால் நிலையங்கள் 3351 என்றும் அதிகமான தபால் அலுவலகங்கள் மத்திய மாகாணத்திலேயே காணப்படுவதாகவும் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், தபால் துறையை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளில், குறிப்பாக மலையகப் பெருந் தோட்டப்பகுதிகள் மற்றும் கேகாலை மாவட்டத்திற்கும் முன்னுரிமை வழங்கப்பட உள்ளது. அத்துடன் தபால் துறையை நவீனமயப் படுத்தும் நடவடிக்கைகள் டிஜிட்டல் மயப்படுத்தலோடு ஆரம்பிக்கப்படும் என்பதை குறிப்பிட்ட அவர், அரச மற்றும் தனியார் துறை இணைந்த வேலைத்திட்டமாக அது முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## இலங்கையில் பறிமுதல்... (03 ஆம் பக்கத் தொடர்)

இல்லையென்றால் படகுகளை இலங்கை நீதிமன்றங்கள் அரசுடமையாக்கி விடுகின்றன. இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு, இலங்கையில் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள, தமிழகத்தைச் சேர்ந்த படகுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துவந்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்று, கடந்த ஜனவரி மாதம் தமிழக அரசு 108 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சமும், 17 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சமும் என மொத்தம் ரூ.5.66 கோடி நிவாரணம் வழங்கியது.

கடந்த ஆகஸ்ட் (18) இராமேசுவரம் அருகே மண்டபத்தில் நடந்த மீனவர் மாநாட்டில், இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டு, தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதமிழக மீனவர்களின் படகுகள் சிலவற்றுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று மீனவப் பிரதிநிதிகள், முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்தனர்.

இந்நிலையில், 21 விசைப் படகுஉரிமையாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சமும், 12 நாட்டுப் படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சமும் என மொத்தம் 33 படகுகளின்உரிமையாளர்களுக்கு ரூ.1.23 கோடியை, முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து தமிழக அரசு வழங்கவுள்ளது.

## முஸ்லிம் சிவில்... (03 ஆம் பக்கத் தொடர்)

இப்போது ஏற்பட்டுள்ளது.காலத்தின் கட்டாயம் கருதி இத்தேவை களைப் பூர்த்தி செய்ய வேண்டியும் உள்ளது. இவ்வரலாற்றுப் பணிகளைப் பொறுப்பேற்க முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் முன்வரவேண்டும். இதனூடாகவே, புதிய தலைமைகளை அடையாளம் காண முடியும் இத்தலைமைகள், திரைமறைவில் செயற்படாத தைரியமிக்க தலைமைகளா இருப்பது அவசியம் என்றும் ஜெஹான் ஹமீட் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் கடும்... (03 ஆம் பக்கத் தொடர்)

வரட்சியான காலநிலையால் குருநாகல் மாவட்டத்தில் 15,305 ஏக்கர் விவசாய காணியும், மஹவ விவசாய வலயத்தில் 9,295 ஏக்கர், உடவளவ விவசாய வலயத்தில் 14,667 ஏக்கர், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1,892 ஏக்கர், புத்தளம் மாவட்டத்தில் 1,230 ஏக்கர் விவசாய பயிர்ச்செய்கை காணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## தங்கக் கடன் அடகுச் சேவைக்கு...

உச்சபட்ச வட்டியாக அறவிட முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கொள்கை வட்டி வீதங்களை தற்போதைய மட்டத்திலேயே தொடர்ந்தும் பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல் போனோரது...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், காணாமல் போனவர்கள் தொடர்பான முதல் கட்ட விசாரணைகளை எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்துவிடுமென அவர் தெரிவித்துள்ளார். முதல் கட்ட விசாரணைகள் நிறைவடைந்தவுடன், காணாமல் போனவர்களின் சான்றிதழ்கள், அல்லது இறப்புச் சான்றிதழ்களைப் பெறத் தயாராக இருக்கும் அவர்களின் உறவினர்களுக்கு உரிய, சான்றிதழ்கள் வழங்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார். அத்துடன் கொடுப்பனவுகளைப் பெற விரும்பும் உறவினர்கள், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இழப்பீடுகளுக்கான அலுவலகமூடாக உரிய கொடுப்பனவுகளைப் பெறுவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 988 என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## விமான நிலையம் வந்த சொகுசு...

ஏற்றி வந்த சொகுசு பஸ்ஸே இவ்வாறு தீப்பற்றி எரிந்தது. சம்பவம் குறித்து பஸ்ஸின் சாரதி கூறுகையில், புதன்கிழமை (23) இரவு எட்டு மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து 35 பயணிகளை ஏற்றிக் கொண்டு விமான நிலையம் நோக்கி புறப்பட்டோம்.

வியாழக்கிழமை (24) அதிகாலை 4.30 மணி அளவில் நீர்கொழும்பு தளுவகொட்டுவ பிரதேசத்தில் வைத்து திடீரென பஸ் தீ பற்றி கொண்டது. உடனடியாக பஸ்ஸிலிருந்த பயணிகள் காப்பாற்றப்பட்டதுடன் வேறு வாகனங்களில் அவர்கள் விமான நிலையத்துக்கு சென்றனர். நீர்கொழும்பு தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வந்து தீயை கட்டுப்படுத்தியதாகவும் தெரிவித்தார். இந்த தீ விபத்து காரணமாக பஸ் முற்றாக எரிந்துள்ளது. பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. கொச்சிக்கடை பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தேரில் மின்சாரம் தாக்கி...

மின்கம்பியில் பட்டபோதே, இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் புதன்கிழமை (23) பிற்பகல் ஆரம்பமான தேர்த் திருவிழாவின் திருவீதிஉலா, நேற்று வியாழக்கிழமை (24) அதிகாலை வரை தொடர்ந்தது. திருத்தேரை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லும்போது தேரின் மேல்பகுதி உயர் அழுத்த மின்கம்பியில் பட்டபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## சரத் வீரசேக்கர எம்பிக்கு...

போராட்டம் ஒன்றை இன்று (25) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர். முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்க கூட்டத்தில் நேற்று (24) ஏகமனதாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் ஏனைய கிளைச்சங்கங்களும் தத்தமது நீதிமன்றங்களில் அடையாள கண்டனப் போராட்டத்தை மேற்கொள்ளுமாறு நட்புரிமையுடன் கேட்டு கொள்வதாக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டுபாயில் முதலீடு செய்து அதிக...

மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நீர்கொழும்பு சிலாபம் வீதியின் கட்டுவ பகுதியில் இந்த வர்த்தக நிலையம் நிறுவப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியிலுள்ள வீட்டுத் தொகுதியிலுள்ள வீடொன்றில் தம்பதியினர் வசித்து வந்தனர்.

டுபாயிலுள்ள நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்து அதிக வட்டி தருவதாக கூறி பணம் மற்றும் தங்கப் பொருட்களை பெற்றுக்கொண்டு ஏமாற்றியதாக இத்தம்பதியர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.இது தொடர்பில், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் ஆறு முறைப்பாடுகள் கிடைத்தன. இருபது வருடங்கள் வெளிநாட்டில் தங்கி இலங்கையில் வர்த்தகம் செய்து வரும் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர், கொழும்பு குற்றப் பிரிவுக்கு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணையின் போது, இந்நிறுவனத்துக்கு எதிராக 400 இலட்சம் ரூபா பண மோசடி தொடர்பில் மேலும் ஐந்து முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். முறைப்பாட்டை பெற்றுக்கொண்ட பொலிஸார், கடந்த மாதம் 14ஆம் திகதி தம்பதிக்கு எதிராக பயணத்தடை பெற்றனர். இது தொடர்பில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அறிவித்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## கடவுள் நம்பிக்கைக்காக...

புத்தகங்கள் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது இனம் இந்நாட்டில் மொழியுரிமை அற்றவர்களாக மொழிக்கு சமத்துவும் இல்லாதவர்களாக உள்ளது. சிங்களம், ஆட்சிமொழியாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது தமிழுக்கு அந்த உரித்தில்லாதிருந்தது. இதனால்,சமத்துவத்துக்காக போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. எங்கள் மண்ணில் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. எங்கள் மக்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. எங்கள் நிலங்களை எங்களால் பாதுகாக்க முடியவில்லை. இந்நிலையில், 12 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வெளிநாடுகளிலிருந்து எங்கள் இனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, தங்கள் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் வழங்கி வருகின்றார்கள். இங்குள்ள சிறுவர்கள் சுதந்திரம் பெற்றவர்களாக வாழவேண்டும். வெளிநாடு சென்றாலும் அவர்களது எண்ணங்கள் இம்மக்கள் பற்றியும் இம்மண் குறித்தும் இருக்கின்றது. எமது, எதிர்கால சந்ததிக்காக வெளிநாட்டிலுள்ள எமது உறவுகள் தங்களை அர்பணித்துக்கொண்டிருக்கின்றனர். இதை நிரூபிக்கும் சந்தர்ப்பமாக இந்நிகழ்வு அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### திருமதி வாசுகி பி வாசு கௌரவிப்பு விழாவில்

# யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜெயலட்சுமி உதயகுமார்



மாதா மாதம் ஒரு ஆளுமையை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 2023.08.30ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை, ஐந்து லாம்புச் சந்தியிலுள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் எழுத்தாளரும் கவிஞரும் இலக்கியவாதியுமான திருமதி வாசுகி பி வாசு கௌரவிக்கப்படவுள்ளார். இதில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஜெயலட்சுமி உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் கவிஞர்களான நஜுமுல் ஹுசைன், பிரேம்ராஜ், ஈழகணேஷ் ஆகியோரும் கவிதாயினிகளான திருமதி பவானி சச்சிதானந்தன், திருமதி நடராஜா தாமரைச்செல்வி ஆகியோரும் திருமதி வாசுகி பி வாசுவைப் பற்றி கவிதைகள் பாடி கௌரவிக்கவுள்ளார்கள்.

# வலம்புரி கவிதா வட்டத்தின் 91 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 91 ஆவது கவியரங்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் 30/08/2023 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும். கவியரங்கிற்கு கவிஞர் ரவூப் ஹஸீர் தலைமை தாங்குவார்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர்

நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

# 'இனிய நந்தவனம்' இலங்கைச் சிறப்பிதழ் அறிமுக விழா




'இனிய நந்தவனம்' இலங்கைச் சிறப்பிதழ் அறிமுக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (27) பிற்பகல் 3.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு 'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் 'சாகித்திய ரத்னா' தி.ஞானசேகரன் தலைமை தாங்கவுள்ளார்.

தமிழ் வாழ்த்தை கொழும்பு சைவமங்கையர் வித்தியாலய மாணவி சக்திகா சிறிகுமரனும், வரவேற்புரையை எழுத்தாளர் பவானி சச்சிதானந்தனும், தலைமையுரையை 'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரனும், ஏற்புரையையும் நன்றியுரையையும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனும் நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்பு அதிதிகளாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ்.ஶ்ரீகஜன், தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கே.பி.ஆர்.ஹரன், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ். சிவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராஜா, எழுத்தாளர் 'சாகித்திய ரத்னா' மு.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வை கவிதா ராம்குமார் (டான் ரீ.வி.) தொகுத்து வழங்கவுள்ளதுடன், 'கலாபூஷணம்' பொன்னுத்துரை நிகழ்வை ஒருங்கிணைப்புச் செய்யவுள்ளார்.

## ஓய்வுபெற்ற பட்டதாரிகள் ...

தெரிவித்தார். அத்துடன் விஞ்ஞானம், ஆங்கிலம் உள்ளிட்ட பாடங்களுக்கான ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய் மூல விடைக்கான வினாக்கள் வேளையில், ரோஹினி குமாரி விஜேரத்ன எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ரோகினி குமாரி விஜேரத்ன எம்பி தமது கேள்வியின் போது, இலங்கையில் நிறுவப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் கல்வி சாரா ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும் கேட்டார். அத்துடன் மேற்படி கல்வி சாரா ஊழியர்களில் பெரும்பாலானோர் கோரியுள்ள இடமாற்றங்கள் இன்று வரை வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிய அவர், இந்த ஊழியர்களுக்கு முறையான வழிமுறையின் கீழ் இட மாற்றங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? என்றும் கேள்வி எழுப்பினார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் சுசில், எந்த முறைமையையும் பின்பற்றாமல் கடந்த மூன்று வருடங்களுக்கு முன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமித்தபோது, அவர்களில் 52 ஆயிரம் பேரில் 22 ஆயிரம் பேர் பாடசாலைகளில் இணைக்கப்பட்டனர். எந்த முறைமையோ அல்லது பொருத்தப்பாடோ இல்லாமலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எமது ஆரம்ப பாட கல்வித்துறை பாதிக்கப்பட்டுள்ளமை கொவிட்19 காரணமாக மட்டுமல்ல. பயிற்சி வழங்கப்படாத ஆசிரியர்களை அங்கு நியமித்தமையும் இதற்கான காரணமாகும். மேற்படி 22,000 பேரும் தற்போது பாடசாலைகளில் செயற்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு முறைப்படி பயிற்சிகளை வழங்கி பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்தாலும் ஒரு தரப்பினர் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ளனர். நீதிமன்றம் இதற்கு இடைக்கால தடை உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

இது ஒன்றும் காணிகள் சம்பந்தமான விடயம் அல்ல. இது எமது நாட்டு மாணவர்களின் பிரச்சினை என்பதை இவ்வாறு வழக்கு தொடுப்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோன்று அதிபர்கள் நியமனம் தொடர்பில் தொடுக்கப்பட்டிருந்த வழக்குக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை விலக்கிக் கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். மீண்டும் அது தொடர்பில் சிலர் நீதிமன்றம் சென்றுள்ளனர். நீதிமன்றம் மீண்டும் இதற்கு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. காணிப்பிரச்சினைகள் போன்று கல்வித் துறை பிரச்சனைகள் தொடர்பில் தடை யுத்தரவு பிறப்பிக்கப்படுமானால், மாணவர்களின் கல்வியே பாதிக்கப்படும். கல்வித்துறை தொடர்பான தடை உத்தரவுகள் பொருத்தமற்றது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்,

இதற்கு பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச உரையாற்றினார். நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்படுவது தொடர்பில் கொள்கை தேவையென்றால், அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானம் மேற்கொள்ளத் தயார். கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்த தடையுத்தரவு தொடர்பான சிவில் வழக்கு முறைமையில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பான விடயத்திற்கு இணக்கம் தெரிவிக்கும் வகையிலேயே அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் சுசில் தொர்ந்து உரையாற்றுகையில், சில வேளைகளில் இவ்வாறு தடையுத்தரவு விதிக்கப்பட்டு அடுத்த விசாரணைக்கான தினம் ஆறு மாதங்களுக்கு ஒத்திப் போடப்படுகிறது. இதனை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது தொடர்பில் நீதி அமைச்சர் உரிய சட்டத்தில் திருத்தமொன்றை கொண்டு வந்தால், நாம் பாராளுமன்றத்தில் அதனை நிறைவேற்றிக் கொடுக்கத் தயார். இவ்வாறு ஆறு மாதங்களுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்படுவதால் எம்மால் வெற்றிடங்களுக்கு தேவையான அதிபர்களை நியமிக்க முடியாமல் உள்ளது. பயிற்சி வழங்கப்படாத 22,000 பேர் இப்போதும் பாடசாலைகளில் பணியாற்றுகின்றனர். எனினும், இதனால் மாணவர்களுக்கு எவ்வித பயனும் இல்லை. அநீதியை நிவர்த்தி செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்தால், அதற்கு எதிராக நீதிமன்றம் சொல்கின்றனர். இந்த நிலை மாற வேண்டுமென்றார்.

## சந்திரனில் சந்திரயான் 03...

ரணில் விக்கிரமசிங்க தனது அன்பான வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியா பெற்றுள்ள இந்த மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி தொடர்பில் அண்டை சகோதர நாடாக இலங்கையும் பெருமிதம் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ள முழுமையான வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

“கௌரவ நரேந்திர மோடி அவர்களுக்கு, சந்திரயான் 03 விண்கலத்தை சந்திரனின் தென் துருவத்தில் முதன்முறையாக வெற்றிகரமாக தரையிறக்கிய, இந்தியாவின் தனித்துவமான சாதனைக்காக உங்களுக்கும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான (இஸ்ரோ) குழுவினருக்கும், இந்திய மக்களுக்கும், எனதும் அனைத்து இலங்கை மக்களினதும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்டை சகோதர நாடுகளான இந்தியாவும் இலங்கையும் தனித்துவமான நீண்ட கால நட்பைக் கொண்டுள்ளன. தெற்காசிய குடும்ப உறுப்பினர்கள் என்ற வகையில், இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சாதனையை நாங்கள் பெருமையுடன் கொண்டாடுகிறோம். அனைத்து மனித குலத்திற்காகவும் செய்யப்படும் இந்த அர்ப்பணிப்பு , உங்களது உன்னத குணத்தை உலகிற்கு பிரதிபலிக்கும் சந்தர்ப்பமாக குறிப்பிடலாம். இது சந்தேகத்திற்கு இடமின்றி எதிர்கால சந்ததியினரை அறிவியல் மற்றும் தொழினுட்பத் துறைகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடைய ஊக்குவிக்கும். சூரியக் குடும்பத்திலுள்ள ஏனைய கிரகங்களை ஆராய்வதற்கான உங்கள் எதிர்கால இலக்கை அடைவதற்கு, உங்களுக்கும் அனைத்து விஞ்ஞானிகளுக்கும் நல்வாழ்த்துத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன்'' என்றார் ஜனாதிபதி.

## இந்திய உதவியுடன் பொருளாதார...

வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். திருகோணமலை விமானப்படை தளத்தில் நேற்று (24) நடைபெற்ற திருகோணமலை அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டத்தில் கலந்து கொண்டபோதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். மாவட்டத்தில் உள்ள அரச காணிகள் மற்றும் மகாவலி காணிகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பில், இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. 2019-2023 காலப்பகுதியில் இந்தக் காணிகளை வழங்குதல் குறித்து அறிக்கையொன்றை தமக்கு வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவித்தார். அபிவிருத்திச் செயன்முறையில் காணிகள் பிரதான பங்கென்றும், அதில் சரியான முகாமைத்துவம் பேணப்படாவிட்டால், எதிர்பார்க்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

போட்டிபோட்டுக்கொண்டு மத வழிபாட்டுத் தலங்கள் அமைப்பதை நிறுத்துமாறும், எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்கும் போது, ஆளுநர், மாவட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கிழக்கு மாகாணத்தின் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடவே இக்கூட்டம் கூட்டப்பட்டது. தற்போது திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான திட்டத்தை சர்பானா ஜுரோன் நிறுவனம் தயாரித்துள்ளது. இத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு திருகோணமலையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதனை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் வெருகல் முதல் பாணம, குமன கடற்கரையை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையை மேம்படுத்தெ கடற்கரையை பயன்படுத்த இதன் மூலம் எதிபார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், இப் பகுதியில் நவீன விவசாயத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும். மேலும் மகாவலி அதிகாரசபை மற்றும் காணித் திணைக்களத்தையும் இதில் இணைத்துக் கொள்ளல் அவசியம்.

குறிப்பாக காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து நாம் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதன் போது, மகாவலி காணிகள் குறித்து விசேட கவனம் செலுத்தி, அவற்றை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பது குறித்தும் கண்டறியப்பட வேண்டும்.

மகாவலி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 1985 திட்டத்தின் பிரகாரம், காணிகளை பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், கிழக்கு மாகாணத்தில் சில காணிகள் அமைச்சரவையின் அனுமதியின்றி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களுக்கும் அதிகளவான காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

1985 ஆம் ஆண்டு, மகாவலி அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது, எடின்பரோ பிரபு இங்கு வருகை தந்து வழங்கிய காணிகள், தற்போது வன ஜீவராசிகள் அமைச்சினால் காடுகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கையில் வனப்பரப்பு 32 வீதமாக பேணப்பட வேண்டும். அந்த நிலையில் ஏனைய காணிகள் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.இன்று சிங்கப்பூர் மற்றும் துபாய் போன்ற நாடுகள் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக அதிகளவு காணிகளைப் பயன்படுத்தியுள்ளன. அண்மையில் நான், சிங்கப்பூர் சென்றிருந்த போது அந்நாட்டு அரசாங்கம் எம்மிடம் அரிசியைக் கோரியது. கடந்த ஆண்டு நாம் அவர்களிடம் அரிசியைக் கேட்டதுபோன்று, இந்த ஆண்டு எங்களிடம் அவர்கள் அரிசி கேட்கிறார்கள். எனவே, நாட்டில் நவீன விவசாயத்தை உருவாக்கி, விவசாய உற்பத்திகள் மூலம் உலகப் பொருளாதாரத்தை வெல்வதற்கு நாம் செயற்பட வேண்டும்.

திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு நாம் முயற்சிப்போம். அதற்கு அரச அதிகாரிகள் உட்பட அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படுவார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

## விளையாட்டுத் துறைக்குள்...

திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். திருத்தப்பட்ட சட்டங்கள் மூலம் அனைத்து சங்கங்களுக்கும் யோசனைகளை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். அதேவேளை அரசியல் ரீதியில் பிளவு பட்டு செயற்பட்டு விளையாட்டுத் துறையை முன்னேற்ற முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

## சந்திரயான் 03 விண்கல வெற்றி...

சிறந்த விஞ்ஞானியான இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் 2020 இலக்கு என, இலக்கொன்றை முன் வைத்து அதனை நோக்கி செயல்பட்டவராவார். அவரின் கனவு தான் இன்று நிஜமாகியுள்ளது. அந்த வகையில் எந்த வேலைத் திட்டத்திற்கும் இலக்கு மிக அவசியமானதாகும்.இதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இது தொடர்பில் இந்தியாவுக்கு சபையில் நேற்று பாராட்டுக்களை தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, சந்திரயான் 3 விண்கலத்தை வெற்றிகரமாக சந்திரனில் தரையிறக்கிய இந்திய அரசாங்கத்திற்கு வாழ்த்து தெரிவிப்பதாக குறிப்பிட்டார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சந்திரயான் 3 விண்கலத்தை இந்தியா வெற்றிகரமாக சந்திரனில் தரையிறக்கியுள்ளது. ஜுலை (14) விண்ணில் ஏவப்பட்ட சந்திரயான் 3 தனது பயணத்தை முடித்துக்கொண்டு நிலவின் தென் துருவத்தை அடைந்துள்ளது. இதுவரை இவ்வாறு வெற்றிகரமாக விண்கலத்தை தரையிறக்கிய நாடு இந்தியா என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் சந்திராயன் 3 விண்கலம் மூலம் கொண்டு செல்லப்பட்ட விக்ரம் லேண்டர் சந்திரனில் தரையிறங்கியுள்ளது. இதன்படி சந்திரனின் தென்துருவத்தில் காலடி வைத்த முதலாவது நாடாக இந்தியா வரலாறு படைத்துள்ளது. அங்கு ரோவர் ஊடாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## அரிசி இறக்குமதி தற்போது...

பெரும் போகம் வெற்றியடைந்தது. வரட்சி இல்லாத ஏனைய மாகாணங்களில் அதிக அறுவடை கிடைத்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் தொழிற்சங்க உறவுகள் பிரிவின் ஏற்பாட்டில் (23) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற “விவசாயத்துறையின் நவீனமயமாக்கல் மற்றும் அதன் சவால்கள்” என்ற தலைப்பில் நடைபெற்ற துறைசார் நிபுணர் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் கூறியதாவது:

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்றபோது,விவசாயிகள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களை மீண்டும் விவசாய வயல் நிலத்துக்குக் கொண்டுவருவது மிகப்பெரிய சவாலாக இருந்தது.

அச்சமயம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பித்திருந்தன. 2,75,000 ஹெக்டெயாரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அந்நேரம் உரம் இருக்கவில்லை. தேவையில் லாமல் மக்களை பயமுறுத்துவதாக சிலர் குற்றம் சாட்டினாலும், சர்வதேச சமூகமும் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று அறிவித்திருந்தது.

எப்படியோ விவசாயியை மீண்டும் வயல் நிலங்களுக்கு அனுப்பினோம். அதன்படி, 10 வருடங்களின் பின்னர், சிறுபோகத்தில் 5,12,000 ஹெக்டெயாரில் பயிர்ச் செய்கை செய்வதற்கான வாய்ப்பு எமக்கு கிடைத்தது. பின்னர் பெரும் போகத்தில் 08 இலட்சம் ஹெக்டெயாரில் பயிர்ச்செய்கை செய்யப்பட்டது. அந்த ஆண்டில் 08 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால், இவ்வருடமும் அரிசியை இறக்குமதி செய்ய நேர்ந்தால், பாரிய பிரச்சினையை சந்திக்க வேண்டியிருக்கும். ஏனெனில் தற்போது இந்தியா அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது.

பெரும்போக அறுவடை வெற்றிகரமாக இடம்பெற்றதாலும் மூன்று வகையான உரங்களும் உரிய நேரத்தில் வழங்கப்படுகின்றமை மற்றும் நிதி நிவாரணம் வழங்கப்படுவதால் , எதிர்வரும் பெரும் போக அறுவடை வரை எங்களிடம் போதுமான அரிசி கையிருப்பு உள்ளது.

மேலும் தற்போது நிலவும் வரட்சியால் சுமார் 75 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் நாசமாகியுள்ளது. ஆனால், வரட்சி இல்லாத ஏனைய மாகாணங்களில் விளைச்சல் மிகவும் அதிகமான உள்ளது. எனவே, வெளிநாடுகளில் இருந்து அரிசி கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை.

# ஐந்தாண்டுகளில் மூன்றாவது உலகப் பொருளாதார சக்தியாக இந்தியா திகழும்

## மோடி நம்பிக்கை

அடுத்த ஐந்தாண்டு காலப் பகுதிக்குள் இந்தியா உலகின் மூன்றாவது பெரும் பொருளாதார நாடாக மாறும் என்றும் 130 மில்லியன் இந்தியர்கள் வறுமை நிலையில் இருந்து மீண்டிருப்பதால் மத்திய தர வர்க்கம் மேலும் பலமடையும் என எதிர்பார்ப்பதாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய சுதந்திரத் தினத்தன்று டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரையில் இவ்வாறு குறிப்பிட்ட பிரதமர், 2047ஆம் ஆண்டு இந்தியா தனது நூறாவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும்போது முற்றிலும் வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியா மாறியிருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

உலக பொருளாதார எதிர்வுகூறும் நிறுவனங்களான எஸ். அன்ட் பி மற்றும் மோர்கன் ஸ்டான்லி வெளியிட்ட தகவலில், 2030 ஆம் ஆண்டளவில் ஜெர்மனியையும் ஜப்பானையும் தாண்டிச் சென்று உலகின் மூன்றாவது பெரும் பொருளாதார சக்தியாக இந்தியா மிளிரும் என குறிப்பிட்டிருந்தது. இந்திய வர்த்தக நிறுவனங்கள் வெளிநாடுகளில் செய்யும் முதலீடுகள், உற்பத்தித்துறை முதலீடுகள், வலுப்பெறும் டிஜிட்டல் கட்டமைப்புகள், மாற்றுச் சக்தி வளத்தை பெறுவதில் காட்டப்படும் முனைப்பு என்பன இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான காரணங்களாக இவை சுட்டிக் காட்டியுள்ளன. கடந்த ஆண்டு இந்தியாவின் 3.5 டிரிலியன் பொருளாதாரம், இங்கிலாந்து பொருளாதார வளத்தைத் தாண்டி உலகின் ஐந்தாவது பெரும் பொருளாதார நாடு என்ற இடத்தைப் பிடித்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் ஆறு முதல் ஆறரை சதவீத வளர்ச்சியை பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுவதோடு உலகின் வேக வளர்ச்சி வீதத்தைக் கொண்ட நாடாகவும் திகழும் எனவும் எதிர்வு கூறப்படுகிறது.

கொவிட் தொற்றின் பின்னர் புதிய உலக ஏற்பாடு ஆரம்பித்திருப்பதாகவும் அதில் இந்தியா உலக சக்தியாக மாறும் என்றும் இந்தியப் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஓர்கெஸ்ட்ரா இசைப் பின்னணியுடன் வெளியான ஜனகனமன

## வெளியிட்டார் ரிக்கி கெஜ்

இசைக்காக மூன்றுமுறை கிரெமி விருதைப் பெற்ற இந்தியரான ரிக்கி கெஜ், தான் கேட்டுக்கொண்டதன்படி பிரபல ரோயல் பில்ஹார்மனிக் ஓர்கெஸ்ட்ரா இசைக் குழுவினால் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய கீதத்தை ட்விட்டரில் வெளியிட்டுள்ளார்.

நூறு இசைக்கருவிகளின் பக்கபலத்துடன் ரிக்கி கெஜ் பாடியுள்ள ஜனகனமன கீதத்தை செவிமடுத்த இந்தியப் பிரதமர், அதை அற்புதம் என்றும் ஒவ்வொரு இந்தியனையும் பெருமைப்படுத்துகிறது என்றும் பாராட்டியுள்ளார்.

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு இப்பாடசாலை வெளியிட்டுள்ள ரிக்கி கெஜ், தனக்கு மிக நெருக்கமான தேசிய கீதத்தை ஓர்கெஸ்ட்ரா இசை வடிவில் வெளியிட வேண்டும் என்ற விருப்பத்தை தமது குழுவிடம் தெரிவித்த போது அவர்கள் முழு ஒத்துழைப்பு தந்ததாகவும், ஒவ்வொரு இந்தியனுக்கும் பரிசாக இதை வழங்குவதாகவும் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இருநூறு ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்த வெள்ளையர்களுக்கு பிடித்தமான ரோயல் பில் ஹார்மனிக் ஓர்கெஸ்ட்ரா மூலம் ஜனகனமனவை இசைக்க வேண்டும் என்பது தனது நீண்டகால ஆவல் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

42 வயதான கெஜ், வட கரோலினாவில் பிறந்து பெங்களூருவில் வளர்ந்த இசைக் கலைஞரானவர்.

# சந்திரனில் தடம் பதித்த இந்தியாவின் விக்ரம், பிரக்யான் தென்துருவ கிண்ணக் குழிகளில் தண்ணீர் உள்ளதா? அறிய ஆவலாக இருப்பதாக அவதானிகள் தெரிவிப்பு

நிலவில் தனது விண்கலத்தை பத்திரமாகத் தரை இறக்கி ஒரு ஆய்வு ஊர்தியையும் சந்திரத் தரையில் ஓட விடுவது என்ற தனது பத்தாண்டு கால கனவை இந்தியா நேற்று முன்தினம் நனவாக்கிக் கொண்டது.

21ஆம் திகதி தரையிறங்கும் என எதிர்பார்க்கப்பட்ட ரஷ்ய லூனர் 25 விண்கலத்தின் இறங்குகலம், இறங்கும் வேகத்தை மட்டுப்படுத்தத் தவறியதன் விளைவாக, நிலவில் மோதி நொருங்கியதையடுத்து, நிலவின் தரையிறக்கும் பணி இஸ்ரோவுக்கு சுமை மிக்கதானது என்றும், இறுதியாக சவால்களை வெற்றிகண்டு சந்திரனில் விக்ரம், 23ஆம் திகதி நேர்த்தியாக தரை இறக்கப்பட்டது என்றும் இஸ்ரோ வட்டாரம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. இதன்மூலம் இந்தியா இரண்டு சவால்களை வெற்றி கொண்டுள்ளது என்று சுட்டிக்காட்டியிருக்கும் அவதானிகள், தென் துருவத்தில் தரை இறங்கிய முதல்நாடு என்ற பெருமையைப் பெற்றிருக்கும் இந்தியா, பெருமை மிக்க சந்திரவட்ட நாடுகள் குழுவில் நான்காவது உறுப்பினர் என்ற கௌரவத்தையும் அடைந்திருக்கிறது என்றும் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பெங்களூரு இஸ்ரோ தகவல் தொடர்பு நிலையம், விக்ரம் இறங்குகலத்தில் தரித்திருந்த பிரக்யான் ஊர்தி வெற்றிகரமாக தரையில் இறங்கி தென் துருவ மண்ணில் ஓடியது என்றும், இதன் மூலம் சந்திரயான் திட்டம் நூறுசதவீத வெற்றியைப் பெற்றுள்ளது என்றும் தன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. தோல்வியில் இருந்து வெற்றியை உருவாக்கிக் கொள்வது எப்படி என்பதற்கு இன்றைய தினம் ஒரு நல்ல உதாரணம் என்று தன் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்த பிரதமர் மோடி, முயன்றால் எல்லா நாடுகளுக்கும் இது சாத்தியமாகக் கூடியதே என்றும், நிலவுக்கு அப்பாலும் ஊடுருவுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜோஹன்னஸ்பேர்க் சென்றிருக்கும் பிரதமர் மோடி, அங்கிருந்தபடியே இஸ்ரோ கட்டுப்பாட்டு அறையுடன் நிகர்நிலையில் இணைந்து வாழ்த்து தெரிவித்தார். இஸ்ரோவில் முதலில் ஒலித்த கரவொலியும் கோஷங்களும் சரி நேரத்தில் இந்தியாவெங்கும் பாட்டு, நடனம், கோஷம், கரவொலி, வெடிச்சத்தம், வாண வேடிக்கை என்பதாக பரவியது.



இறக்குவானை பரியோவான் தேசிய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் Dr. Athira S. பிரதம அதிதியாக கலந்து கொண்டார். நிகழ்வில் கல்லூரி அதிபருடன் கலந்துரையாடியதோடு கலை நிழ்ச்சிகளையும் கண்டுகளித்தார்.

படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# மலையக கல்வி மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் ஸ்தாபகருக்கு ஞானதீப விருது

**மாவத்தகம தினகரன் நிருபர்**



கண்டி, குண்டசாலை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தை புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக மலையக கல்வி மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் ஸ்தாபகர் நடேஷன் சுந்தரேஷன் தெரிவித்தார்.

கண்டி குண்டசாலை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் ஞானதீப விருது வழங்கல் மற்றும் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் அதிபர் எஸ். சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மலையக கல்வி மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் ஸ்தாபகர் நடேஷன் சுந்தரேஷன் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,..

ஐந்து தமிழ் பாடசாலைகளைத் தெரிவு செய்து மின் பொறியியல் தொழில்நுட்ப ஸ்மாட் வகுப்பறைகளையும் ஏனைய பௌதீக வளங்களையும் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலத்தின் கேட்போர் கூடத்தினை புனர்நிர்மாணம் செய்வதுடன் முன்பள்ளிப் பாடசாலை ஒன்றையும் ஸ்தாபித்து அதற்கான கட்டட வளங்களையும் ஏனைய வளங்களையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board
புதன்கிழமை 2023.08.23 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5215 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,020,376.00
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 8 9 9 3 5 9

தன நிதானய — தேதி 2023/08/23 — சீட்டிழுப்பு இலக்கம் 1245 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,427,587.20
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 02 05 10 53 — விஷேசட ஆங்கில எழுத்து G
Double Chance இலக்கம் 18112

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3457 — சீட்டிழுப்பு திகதி 2023.08.23 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,294,870.80
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 17 20 25 55 — விசேட எழுத்து L
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 59935

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-08-23 — சீட்டிழுப்பு இலக்கம் 524 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,935,049.20
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 11 40 46 58 — விசேட இலக்கினம் மேஷம்

Lucky 7 — திகதி 23.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0041
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 9 2 9 4 6 0 — L7 இலக்கம் 1 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,070,364.40

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1563 — 23/08/2023 — 66516 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.405,172,324.00
ஆங்கில எழுத்து F — சுப்பர் இலக்கம் 13 — வெற்றி இலக்கங்கள் 07 62 64 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00



## அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பீடப்பட்ட நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும்: -

| இல. | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1. | திருமதி. மாரியஸ் ஈனிட் மதுரிகா ஜோசப் வென்னிங்கர் இலக்கம் 72, பன்சலை வீதி நாவல் | எகிப்து அரபுக் குடியரசிக்கான இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2 | திரு.வீரக்கொடி முதியன்சலாகே தர்மபால இலக்கம் 162/26/3, சமனல மாவத்தை 1ஆம் ஒழுங்கை, தலாஹேன மாலபே | பங்களாதேஷ் மக்கள் குடியரசிக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராகப் பெயர் குறிப்பிடப்பட்டவர் |

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, **“செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே”** என்ற விலாசத்திற்கு **2023 செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. **011-2777389** ஊடாக அல்லது **highposts_c@parliament.lk** எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது **(www.parliament.lk)**

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2023 ஆகஸ்ட் 25 ஆம் திகதி**



## விசேட அறிவித்தல்!

08.08.2023 முதல் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், தற்போதுள்ள DFCC ஜூனியர் பரிசு/வவுச்சர்/வெகுமதி திட்டத்திற்குப் பதிலாக மேம்படுத்தப்பட்ட DFCC ஜூனியர் பரிசு/வவுச்சர்/ வெகுமதி திட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து அனைத்து DFCC வங்கி வாடிக்கையாளர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகின்றது.

1. DFCC ஜூனியர் பரிசு/வவுச்சர் திட்டத்தின் கீழ் ரூ. 750,000/-, ரூ. 1,000,000/-, ரூ. 1,500,000/-, ரூ. 2,000,000/- மற்றும் ரூ. 5,000,000/- என ஐந்து புதிய ஜூனியர் பரிசு பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2. தரம் 5 புலமைப்பரிசில் வெகுமதி திட்டம், க.பொ.த (சா.த.) பரீட்சை வெகுமதித் திட்டம் மற்றும் 18ஆவது பிறந்த நாள் வெகுமதித் திட்டம் என 'ஜூனியர் வெகுமதிகள் திட்டத்தின்' கீழ் மூன்று புதிய வெகுமதி பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**மேலே உள்ள திட்டங்களுக்கு தகுதி பெறுவதற்கான தகைமைகள்**

**தரம் 5 புலமைப்பரிசில் வெகுமதி திட்டம் மற்றும் க.பொ.த (சா. த.) பரீட்சை வெகுமதித் திட்டம்**

* திட்டத்திற்குத் தகுதிபெற, தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த (சா.த.) பரீட்சை ஆரம்பிக்க முன், 12 காலண்டர் மாத தொடர்ச்சியான காலத்திற்கு ரூ. 20,000/- குறைந்தபட்ச ஜூனியர் கணக்கு மீதியைப் பேண வேண்டும்.
* தரம் 5 புலமைப்பரிசில் வெகுமதிக்கான தகுதி அளவுகோல் 150 மதிப்பெண்கள் ஆகும்.
* க.பொ.த (சா.த.) பரீட்சை வெகுமதிக்கான தகுதி அளவுகோல் 8 A (distinctions) அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும் (அதிகபட்சம் 10 பாடங்கள்).

**18ஆவது பிறந்த நாள் வெகுமதித் திட்டம்**

* 18ஆவது பிறந்த நாளுக்கு முன், 36 காலண்டர் மாத தொடர்ச்சியான காலத்திற்கு ரூ. 20,000/- குறைந்தபட்ச ஜூனியர் கணக்கு மீதியைப் பேண வேண்டும்.

**குறிப்புகள்**

i. 08.08.2023 க்கு முன் தங்கள் கணக்கைத் திறந்து, தேவையான தகுதிக்கான தகைமைகளைப் பராமரிக்கும் அனைத்து DFCC ஜூனியர் கணக்கு வைத்திருப்பவர்களும் 31.04.2024 வரை 'தற்போதைய ஜூனியர் தரம் 5 புலமைப்பரிசில் வெகுமதித் திட்டத்தின்' கீழ் வெகுமதிகளை அனுபவிக்கத் தகுதி பெறுவார்கள்.

ii. மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் தற்போதைய DFCC ஜூனியர் கணக்கு வைத்திருப்பவர்களும் புதிய ஜூனியர் வெகுமதி திட்டத்தின் கீழ் வெகுமதிகளை அனுபவிக்கத் தகுதி பெறுவார்கள்.

எந்த வித முன்னறிவித்தலும் இன்றி பரிசுகள், பரிசு வவுச்சர்கள், பண வெகுமதிகளில் மாற்றங்களை செய்ய வங்கிற்கு பூரண உரிமை உள்ளது.

**மேலதிக நிபந்தனைகளுக்கு 011 2350000 மூலம் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது உங்கள் அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விஜயம் செய்யுங்கள்.**

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0112 350000 www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# இறைவழிகாட்டலில் வாழ்வை ஒழுங்கமைத்தல்



உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் பூமிக்கான அல்லாஹ்வின் பிரதிநிதியாவான். அவன் உலகின் எந்த மூலையில், எந்தக் கண்டத்தில் பிறந்தாலும் அந்தப் பொறுப்புடனேயே பிறக்கின்றான். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது மனிதன் மீது கடமையாகும்.

இப்பொறுப்போடு பிறக்கும் மனிதனுக்கு பூமியில் வரையறுக்கப்பட்டுள்ள வாழ்வுக் காலமும் தெரிவுச் சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளன. அப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தேவையான இறை வழிகாட்டலும் அளிக்கப்பட்டுள்ளன. அத்தோடு மனிதன் இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக அவனுக்கு உதவி ஒத்துழைப்புக்களை நல்கவென அனைத்து படைப்புக்களும் வசப்படுத்திக் கொடுக்கப்பட்டும் உள்ளன.

அதனால் இப்பொறுப்பை உரிய ஒழுங்கில் உரிய நேர காலத்தில் நிறைவேற்றியாக வேண்டும். இதைவிடுத்து பூமியில் கிடைக்கப் பெற்றிருக்கும் வரையறுக்கப்பட்ட சுதந்திரத்தைப் பயன்படுத்தி எப்படியும் வாழலாம் என வரையறுக்கப்பட்ட வாழ்வுக் காலத்தைக் கழித்தால் அது நஷ்டத்தையும் கைசேதத்தையுமே தேடித் தரும்.

அல்லாஹுதஆலா மனிதனுக்கு நீண்டதொரு வாழ்க்கையை வழங்கியுள்ளான். அது ஏழு கட்டங்களைக் கொண்ட வாழ்க்கை அமைப்பாகும். அதன் ஒவ்வொரு கட்டமும் வித்தியாசமானதும் தனித்துவமானதும் ஆகும். அதில் ஒரு கட்டம் தான் உலக வாழ்க்கை. இவ்வாழ்வுக்கட்டத்திற்கு முன்னர் தாயின் கர்பப்பையில் சிறிது காலமும் ஆலமுல் அர்வாவில் குறிப்பிட்ட காலமும் மனிதன் கழித்திருக்கிறான். இக்கட்டங்களைக் கடந்த பின்னர் உலக வாழ்வில் பிரவேசித்திருக்கிறான். இதுவும் வரையறுக்கப்பட்ட வாழ்வுக்காலம் தான். இக்காலம் நிறைவுற்றதும் அடுத்த வாழ்வுக்கட்டத்திற்கு பயணித்தாக வேண்டும். மனிதன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவ்வாழ்வுக் கட்டத்திற்கு செல்வதைத் தவிர்க்க இயலாது. அது கப்ருடைய வாழ்வுக்கட்டம். அதுவும் குறிக்கப்பட்ட காலமே. அதன் பின்னர் மஹ்ஷர் மைதானம், இறுதித் தீர்ப்பு நாள் என்றபடி கடந்து அழிவே இல்லாத இன்பங்கள் நிறைந்த நிரந்தர சுவர்க்கம் அல்லது வேதனைகள் நிறைந்த நரக வாழ்வு என்றபடி தீர்மானமாகும்.

இவ்வாழ்வுக் கட்டங்களில் உலக வாழ்வுக் கட்டத்தில் தான் பூமிக்கான அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற பொறுப்பு, வரையறுக்கப்பட்ட தெரிவுச் சுதந்திரம், நன்மை தீமைகளைப் பிரித்தறியக்கூடிய பண்பு, ஆசாபாச உணர்வு என்பன வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த அனைத்து பண்புகள், தன்மைகளை இயல்பாகவே பெற்றுக்கொண்டிருக்கும் மனிதன் அடுத்துவரும் வாழ்வுக் கட்டங்களின் விமோசனத்திற்காகத் தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பைக் கொண்டவனாகவும் இருக்கிறான்.

முதல் மனிதரான ஆதம் (அலை) அவர்கள் மண்ணால் படைக்கப்பட்டு அல்லாஹ்வினால் ரூஹ் (உயிர்) வழங்கப்பட்டார்கள். அந்த முதல் மனிதரின் வழித்தோன்றலான மனிதனை ஆன்மா அல்லாஹ்வை நோக்கி இட்டுச் செல்லும் போது ஆசாபாசங்கள் அவனைப் பூமியோடு கட்டிப்போட முயற்சிக்கின்றன. இது ஒரு போராட்டமாகவே இடம்பெறுகிறது. இப்போராட்டத்தில் தமது அடுத்த வாழ்வுக்கட்டங்களில் வெற்றி பெறுபவதற்கு ஏற்ப உலக வாழ்வை அமைத்துக்கொள்வது அவசியம். அதற்கான ஒரே வழி அல்லாஹ்வின் கட்டளைகள், வழிகாட்டல்கள், நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு ஏற்ப வாழ்வை அமைத்துக் கொள்வதேயாகும்.

இருந்த போதிலும் பிறப்பிலேயே ஆசாபாச உணர்வை பெற்றுக்கொண்டவனாக விளங்கும் மனிதன் உலக இன்பங்களை விரும்பக்கூடியவனாகவும் நேசிக்கக்கூடியவனாகவும் இருந்து கொண்டிருக்கின்றான். அந்த உலக இன்பங்களும் ஆசாபாசங்களும் அவனை மதிமயக்கக்கூடியனவாகவும் தம் வாழ்வின் நோக்கத்தை மறக்கடிக்கக்கூடியனவாகவும் உள்ளன.

குறிப்பாக மனைவி, பிள்ளைகள், தங்கம், வெள்ளி, சொத்து, செல்வங்கள், கால்நடைகள், பயிர்செய்கை உள்ளிட்டவற்றை மனிதன் அதிகம் விரும்புவான், நேசிப்பான். இந்த ஆசைகளும் இன்பங்களும் இயல்பானவை. மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் பாதுகாப்புக்கும் மனிதன் நிறைவேற்ற வேண்டிய அடிப்படையான பணிக்காக அல்லாஹ்வினால் வழங்கப்பட்டவையே அவை. மனித வாழ்வு நிலை பெறவும் முன்னேற்றமடையவும் அவை அவசியமானவை. அது அவனுக்கு பிரியமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதனை இஸ்லாம் மறுக்கவில்லை. அது வெறுக்கத்தக்கதோ, அறுவறுப்பானதோ அல்ல.

அல்லாஹுதஆலாவே தன் அருள் மறையில், 'பெண்கள், ஆண் பிள்ளைகள், தங்கம், வெள்ளிகளின் பெரும் குவியல்கள், உயர்ந்த குதிரைகள், (ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைகள், பயிர் நிலங்கள் ஆகியவற்றை விரும்புவது மனிதனுக்கு அழகாக்கப்பட்டுள்ளது'. (03:14)

என்று குறிப்பிட்டு வைத்திருக்கிறான்.

இவ்வசனத்தின் படி மனிதன் இவற்றை இயல்பாகவே விரும்பக்கூடியவனாகவும் நேசிக்கக்கூடியவனாகவும் இருக்கின்றான். ஆனால் அந்த உலக இன்பங்களிலும் ஆசாபாசங்களிலும் தம் நிலை மறந்து அவன் மூழ்கிவிடலாகாது. அவை அவனை அல்லாஹ்விடமிருந்து தூரமாக்கிடவும் இடமளிக்கவும் கூடாது. ஏனெனில் மனித வாழ்க்கையில் அவற்றை விடக் கண்ணியமானதும் தூய்மையானதுமான இன்பங்களை அவை மிகைத்துவிட முடியாது. அந்த இன்பங்கள் சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வினால் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பவையாகும்.

அதனால் இவ்வசனத்தின் இறுதிப்பகுதியில், 'எனினும் இவை (பெண்கள், ஆண் பிள்ளைகள், தங்கம், வெள்ளிகளின் பெரும் குவியல்கள், உயர்ந்த குதிரைகள், {ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைகள் பயிர் நிலங்கள்} (அனைத்தும் இவ்வுலக வாழ்க்கையின் (அற்ப) இன்பங்களே. அல்லாஹ்விடத்திலோ (நிலையான) அழகிய தங்கிடமுண்டு (3:14) என்றும் அல்லாஹ் குறிப்பிட்டிருக்கின்றான்.

அது தான் முற்றிலும் உண்மையானது. அல்லாஹ்விடம் தான் நிலையான அழகிய தங்குமிடம் இருக்கிறது. அதனை அல்லாஹ் அடுத்த வசனத்திலேயே, '(நபியே.. மனிதர்களை நோக்கி) நீர் கூறுவீராக... இவற்றை விட மேலானதொன்றை நான் உங்களுக்கு அறிவிக்கவா? (இறைவனுக்குப்) பயந்து நடக்கின்றவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடத்தில் சுவர்க்கங்கள் உண்டு. அவற்றில் நீரருவிகள் (தொடர்ந்து) ஓடிக்கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கி விடுவார்கள். (அங்கு அவர்களுக்கு) பரிசுத்தமான மனைவிகளும் உண்டு. இன்னும் அல்லாஹ்வின் திருப்பொருத்தமும் கிடைக்கும். அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்குபவன் ஆவான். (3:15) என்று குறிப்பிட்டிருக்கிறான்.

அதனால் உலகின் அற்ப இன்பங்களுக்காக எமது நிரந்தர வாழ்வில் கைசேதத்தையோ நஷ்டத்தையோ தேடிக்கொள்ள முடியாது. எமது இலக்கும் நோக்கும் அல்லாஹ்வின் திருப்தியாக அமைய வேண்டும். அதுவே நிரந்தர இன்பத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றுத்தரும். அதற்கேற்ப இவ் உலக வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும். அல்லாஹ் தயார்படுத்தி வைத்துள்ள இன்பங்களே நிரந்தரமானவை. அதுவே மனித வாழ்வுக்கு விமோசனம் பெற்றுத்தரக்கூடியவை.

அதைவிடுத்து அல்லாஹ் வாக்களித்துள்ள உன்னத உலகின் பக்கம் மனித உள்ளம் ஆவல் கொள்ளாது, அல்லாஹ்விடம் இருக்கின்ற தூய்மையானவற்றையும் மிகச் சிறந்தவற்றையும் விரும்பவில்லை என்றால் மனிதனை அவை தவறான பாதையின் பக்கம் இட்டுச் சென்றுவிடும்.

உலக இன்பங்களிலும் உள்ளத்தின் ஆசாபாசங்களிலும் மூழ்கிவிடுவது மனிதனை சிந்திக்கவிடாமலும் படிப்பினைகள் பெறவிடாமலும் தடுத்துவிடும். உலகில் கிடைக்கப் பெறும் இன்பங்களில் மதிமயங்கிடச் செய்துவிடும். அது அல்லாஹ் வாக்களித்துள்ள உன்னத உலகை மறைக்கும் திரையாகவே இருக்கும்.

அதன் விளைவாக அவர்களது உள்ளங்கள் இறுகி உலக இன்பங்களுக்கு அப்பால் எதுவும் இல்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடும். அத்தோடு மனிதன் இவ் உலகில் நிறைவேற்ற வேண்டிய பணிகளையும் மறக்கடித்துவிடும்.

அப்படியிருந்தும் உலக இன்பங்களை விரும்பும் பண்பை முற்றாக துறந்துவிடுமாறோ தவிர்த்துக் கொள்ளுமாறோ இஸ்லாம் கூறவில்லை. மாறாக அவற்றை ஒழுங்குபடுத்தி பேணுதலோடு வாழ்வொழுங்கை அமைத்துக்கொள்ளுமாறு தான் கூறுகிறது.

உலக இன்பங்களுக்கும் ஆசாபாசங்களுக்கும் மனிதன் அடிமையாகிவிடக்கூடாது என்பது இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும். அப்போது தான் ஆன்மாவைப் பலப்படுத்துவதன் பக்கமும் உன்னதமான உலகின் பக்கமும் மனிதனால் கவனம் செலுத்தக்கூடியதாக இருக்கும்.

உலகின் அற்ப இன்பங்களில் மூழ்கி தன்னிலை மறந்து விடாது தம்மை நிர்வகித்து, தம் மனித தன்மையைப் பாதுகாத்துக் கொண்டவர்கள் நிரந்தரமான மறு உலகில் அல்லாஹ் வாக்களித்துள்ள விபரிக்க முடியாத இன்பங்களை அடைந்து கொள்வார்கள். அதுவே ஒவ்வொருவரதும் இலக்காகவும் நோக்காகவும் இருக்க வேண்டும் என்றால் அது மிகையாகாது.

மர்லின் மரிக்கார்...

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# சோதனைகளின் போது...

சோதனை என்பது நம்மைச்சுற்றி இருக்கவே செய்கிறது. சோதனைகளிலிருந்து இறைத்தூதர்களும், இறைநேசர்களும் தப்பிக்கவில்லை. எனவே இறைவன் நமக்கு வழங்கும் சோதனைகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனந்தமாக வாழ்ந்து வரும் வாழ்வில் இடையே திடீரென சிரமங்கள் சில வருவதுண்டு. துன்பம் வந்தவுடன் ஏனோ மனிதன் சட்டென துவண்டு போய் விடுகிறான். அதை எதிர்கொள்வதற்கு அவனால் முடிவதில்லை.

இது தொடர்பில் அல் குர்ஆன், '(நம்பிக்கையாளர்களே) பயம், பசி மேலும் பொருட்கள், உயிர்கள், கனிவர்க்கங்கள் ஆகியவைகளை கொண்டு நிச்சயமாக நாம் உங்களை சோதிப்போம். (நபியே... இச்சோதனைகளால் ஏற்படும் கஷ்டங்களை) சகித்து கொண்டிருப்பவர்களுக்கு நீங்கள் நற்செய்தி கூறுங்கள். (சோதனைக்குள்ளாகும்) அவர்கள் தங்களுக்கு எத்தகைய துன்பம் ஏற்பட்ட போதிலும் நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம். நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம்' என கூறுவார்கள்.

(அல் குர்ஆன் 2:155,156)

உங்களுடைய பொருள்களும், உங்களுடைய சந்ததிகளும் (உங்களுக்குப்) பெரும் சோதனையாக இருக்கின்றன என்பதையும் நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் தான் (உங்களுக்கு) மகத்தான வெகுமதி உண்டு என்பதையும் நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

(அல் குர்ஆன் 8:28)

ஒருமுறை நபி(ஸல்) அவர்கள் 'ஆச்சரியம் தான். ஒரு இறைவாசிக்கு (நல்லதோ, கெட்டதோ) என்ன ஏற்பட்டாலும் அவனுக்கு நல்லது தான். எப்படி என்றால் அவனுக்கு நல்லது நடந்தால் நன்றி செலுத்துவான். அது அவனுக்கு நல்லது தானே. அவனுக்கு கெட்டது நடந்தால் பொறுமையாக இருப்பான். இதுவும் அவனுக்கு நல்லது தானே'.என்று கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

ஆகவே சோதனைகளைக் கண்டு நாம் சுருண்டு விடத்தேவையில்லை. அதை பக்குவமாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி சோதனைகள் வரும் நேரத்தில் நாம் சொல்ல வேண்டியதெல்லாம் 'இன்னா லில்லாஹிவ இன்னா இலைஹி ராஜிஊன்' (நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம். நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம் என்பதைத் தவிர வேறில்லை). 'இன்னாலில்லாஹி' என்பது நாம் மரணச்செய்தியை கேட்கும் போது மட்டும் கூற வேண்டிய வார்த்தையல்ல. சிறுசிறு சிக்கல்கள், சிரமங்கள், சங்கடங்கள் என சோதனைகள் நம் வாழ்வில் நிகழும் போதெல்லாம் சொல்ல வேண்டிய ஒரு சொல் தான் அது. அப்படி கூறுவதன் மூலம் அல்லாஹ் விரைவில் நமக்கு நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்திக் தருவான். அதனால் சோதனைகள் எதுவானலும் அவற்றை மனப்பூர்வமாக ஏற்று நற்சாதனைகளாக மாற்றிடுவோம்.

பிந்த் இஸ்மாயீல்...

# அமானிதம் பேணுவோம்

அமானிதம் எனும் பாதுகாப்பு தன்மை அனைவரிடமும் இருக்க வேண்டிய ஒன்று. குறிப்பாக ரமழான் நோன்புகள் ஒவ்வொன்றும் நமக்கு அமானிதம் தான். இது குறித்து அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது, 'நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்புவித்து விட வேண்டுமென்றும், மனிதர்களிடையே தீர்ப்பு கூறினால் நியாயமாகவே தீர்ப்பு கூறுதல் வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகிறான், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு(இதில்) மிகவும் சிறந்த உபதேசம் செய்கிறான். நிச்சயாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கின்றான்.

(அல் குர்ஆன் 4:58)

எனவே அமானிதம் என்பது நமக்கு மிகவும் முக்கியமான ஒன்று. ஒருவரிடம் நம்பத்தன்மை இல்லையென்றால் அவரிடம் நாம் எப்படி எதார்த்தத்துடன் நடந்து கொள்ள முடியும்? எனவே தான் இந்த அமானிதம் முதல் முக்கியத்துவம் பெறுகிறது. இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள், 'நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று, ஒன்று பேசினால் பொய் பேசுவான், இரண்டு வாக்களித்தால் மாறுசெய்வான், மூன்று நம்பிக்கை வைத்தால் மோசடி செய்வான்.

(ஆதாரம்: புஹாரி)

எனவே நம்பிக்கை என்பது நமக்கு மிகமிக முக்கியமான ஒன்று. அந்த நம்பிக்கையையும் நோன்பு கற்றுத் தரக்கூடியதாக உள்ளது. ஒருவர் நோன்பு நோற்கிறார். அவர் நினைத்தால் யாருக்கும் தெரியாமல் உண்ணலாம். பருகலாம். ஆனால் அவர் அப்படியெல்லாம் செய்வதில்லை. காரணம் அல்லாஹ் தன்னை நம்பி இந்த நோன்பை ஒப்படைத்துள்ளான். அதை நாம் சரியாக முறையாக நிறைவேற்ற வேண்டும் என்ற அவனது அமானிதத் தன்மை தான். இந்த தன்மை தான் இன்றைக்கு மிக அவசியமானதாக இருக்கிறது.

நட்பு, கடன், கல்வி, குடும்பம், வணிகம் என அனைத்திலும் நம்பகத்தனம் அவசியமாகிறது. அவற்றில் சற்று சந்தேகம் வந்து விட்டால் பிறகு அது நீடித்து நிலைப்பது என்பது முடியாத ஒன்று தான், ஆகவே தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ' அமானிதத் தன்மை இல்லாதவர் ஈமான் எனும் இறைவிசுவாச மற்றவர். ஒரு முஸ்லீமுக்கு இறை விசுவாசம் என்பது முக்கியமான ஒன்று. அதன் இருப்பை அவரது அமானித தன்மை தான் தீர்மானிக்கிறது. இப்படியானால் ஒரு முஸ்லிமிடம் கட்டாயம் அமானிதம் இருக்க வேண்டும் என்பதை விட அந்த அமானிதத்துடன் இருப்பவர் தான் முழு முஸ்லிமாக இருக்க முடியும் என்பதையும் நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது.

இன்றைக்கு எல்லாத்துறைகளிலும் மோசடிகள் பெருகிப்போனதற்கு அமானிதங்கள் அனைத்து குறைந்து போனதும் அழிந்து போனதும் தான் காரணம். அதனால் நமது ஈமானை அடையாளப்படுத்தும் மனித குலத்தை நேர்மைப்படுத்தும் அமானிதத்தை ஒருபோதும் நாம் கைவிடக்கூடாது.

அப்துல் ரஹ்மான்...

# மகத்துவம் மிக்க ஸபர் மாதம்

இஸ்லாமிய வருடத்தின் இரண்டாவது மாதமே ஸபர் ஆகும். இது ஸபர் முளப்பர் என்ற வார்த்தை கொண்டும் அழைக்கப்படுகிறது. ஸபர் ஒரு வெற்றி மாதமாகும். இருந்தும் சிலர் இதனைப் பீடை மாதம் எனக் கருதுகின்றனர். இதற்கு நபி (ஸல்) அவர்கள் ஜாஹிலிய்யா காலத்தில் வாழ்ந்த மக்கள் ஸபர் மாதத்தை பீடை மாதமாக கருதினார்கள். அவ்வாறு கருதுவது தவறு என்று கூறினார்கள். (ஆதாரம்: அபூதாவூத்)

இஸ்லாமிய வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்தது நபி (ஸல்) அவர்களின் முதலாவது ஹிஜ்ரத் பயணமாகும். இஸ்லாம் இவ்வுலகில் உறுதியாக கால் பதிக்க இறைவனின் நாட்டத் தோடு நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத்தே காரணம் என்றால் அது மிகையாகாது. நபி (ஸல்) அவர்கள் தம் தோழர் அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்களோடு ஸபர் மாதம் 27 ஆவது நாளில் தான் அத்தகைய புனிதமிக்க தியாகப் பயணத்தை மேற்கொண்டார்கள்.

மக்காவில் இருந்த வரை பொறுமையை மேற்கொள்ளுங்கள் என்பதாக அநியாயக்காரர்களுக்கு எதிராக கைகள் கட்டப்பட்டிருந்த ஸஹாபாக்களுக்கு எதிரிகளின் அத்துமீறலை தடுக்கப் புனிதப் போர் செய்யும் அனுமதியை அல் குர்ஆனின் 22ஆவது அத்தியாயம் 39ஆவது இறை வசனத்தின் மூலம் முதன் முதலில் ஹிஜ்ரி 02ஆம் ஆண்டு ஸபர் மாதத்தில்தான் அல்லாஹுதஆலா வழங்கினான்.

அதே வருடம் ஸபர் மாதம் பன்னிரண்டாம் நாள் இஸ்லாமின் முதல் புனிதப் போர் நடைபெறவிருந்த 'அப்வா' எனுமிடத்திற்கு முஸ்லிம்கள் சென்றார்கள். ஆனால் யுத்தம் நடைபெறவில்லை. இப்பயணத்தில் பனூ ழமிரா எனும் கூட்டத்தாருடன் நபியவர்கள் ஒப்பந்தம் செய்து மதீனா திரும்பினார்கள்.

நபி (ஸல்) அவர்களின் மகளார் பாத்திமா (ரழி) அவர்களுக்கும் அலி (ரழி) அவர்களுக்கும் திருமணம் நடந்ததும் ஹிஜ்ரி 02 ஆண்டு ஸபர் மாதத்தில் தான். அப்பொழுது பாத்திமா (ரழி) அவர்களுக்கு வயது 19, அலி (ரழி) அவர்களுக்கு 24 வயது ஆகும்.

யமாமாவின் அதிபதி துமாமா பின் உஸால் ( ரழி) அவர்கள் ஹிஜ்ரி 06 ஆண்டு முஹர்ரம் அல்லது ஸபர் மாதத்தில் தான் இஸ்லாத்தைத் தழுவினார்கள். துமாமா ஒரு படை நடவடிக்கையில் கைதியாக பிடிக்கப்பட்டார்கள். அவர் மதீனாவுக்கு கொண்டு வரப்பட்டு மஸ்ஜிதுந் நபவீயின் தூணில் கட்டி வைக்கப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் அவரை அவிழ்த்து விடுமாறு உத்தரவிட்டார்கள். துமாமா (ரழி) அவர்கள் விடுதலையாகிச் சென்று குளித்து விட்டு மீண்டும் நபியவர்களிடம் வந்து கலிமா சொல்லி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

ஹிஜ்ரி 7ஆம் ஆண்டு முஹர்ரம், ஸபர் மாதத்திற்கிடையில் யமனிலிருந்து தூஸ் கோத்திரத்தினர் நபியவர்களிடம் வந்தார்கள். அபூஹுரைரா (ரழி) அவர்களும் துஃபைல் பின் அம்ர் (ரழி) அவர்களும் இதே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களே. இச்சந்திப்பின் மூலம் 70 அல்லது 80 தூஸ் குடும்பத்தைச் சார்ந்த 400 பேர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர்.

ஹிஜ்ரி 8ஆம் ஆண்டு ஸபர் மாதம் அம்ர் பின் ஆஸ் (ரழி), காலித் பின் வலீத் (ரழி) ,உதுமான் பின் அபீ தல்ஹா (ரழி) ஆகியோர் மதீனா வந்து நபியவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தை தழுவினார்கள்.

ஹிஜ்ரி 9ஆம் ஆண்டு ஸபர் மாதத்தில் யமனில் இருந்து பனு உத்ரா என்ற கோத்திரத்தைச் சார்ந்த 12 பேர் கொண்ட ஒரு குழு வந்தது. இக்குழுவினர் அனைவரும் நபியவர்களை சந்தித்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு திரும்பினர்.

மதீனாவிலிருந்து தொலைதூரத்தில் உள்ள பலமான கோட்டை நகரம் கைபர். அங்கு வசித்து வந்த யூதர்கள் இஸ்லாம் மற்றும் இஸ்லாமியர்களுக்கு அச்சுறுத்தலாகவே இருந்து வந்தனர். ஆகையால் ஹிஜ்ரி 7ல் முஹர்ரம் மாதத்தின் இறுதியில் நபி (ஸல்) அவர்கள் கைபர் கோட்டையை முற்றுகையிட்டார்கள். நீண்ட முற்றுகைக்குப் பிறகு ஸபர் மாதத்தில் கோட்டை வெற்றி கொள்ளப்பட்டது.

அதே வருடத்தின் ஸபர் மாதத்தில் தான் கைபருக்கும் மதீனாவுக்கும் இடையேயுள்ள 'வாதியே குரா' எனும் ஊரில் உள்ள யூதர்களின் சூழ்ச்சியை முறியடிப்பதற்காக அவர்களை எதிர்த்து வெற்றி கண்டு பெரும் கனீமத் பொருட்களுடன் நாயகமும், அவர்களின் தோழர்களும் வெற்றி வீரர்களாக மதீனா திரும்பினார்கள்.

ஹிஜ்ரி 5ஆம் ஆண்டு ஸபர் மாதம் (கி.பி 626 ஜூன்) ஜைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் திருமணம் முடித்தார்கள்.

ஹிஜ்ரி 7ம் ஆண்டு ஸபர் மாதம் நபி (ஸல்) அவர்கள் ஸபிய்யா (ரழி) அவர்களை திருமணம் செய்து கொண்டார்கள். கைபர் யுத்தத்தில் ஸபிய்யா கைதியாக பிடிக்கப்பட்டார். தலைவரின் மகளாக இருந்ததால் யூதர்கள் மனமகிழ்ந்து இஸ்லாத்தை தழுவலாம் அல்லது முஸ்லிம்களுடன் நட்புறவுடன் நடந்து கொள்ளலாம் என்பதற்காக திருமணம் செய்து கொண்டார்கள். அதே வருடத்தில் ஸபர் மாதத்தில் தான் தவ்ஸ் கூட்டத்தை சேர்ந்த சிலர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாத்தில் இணைந்தார்கள். அதிகமான நபிமொழிகளை அறிவித்துள்ள அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் இந்த தவ்ஸ் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹிஜ்ரி 2ம் ஆண்டு ஸபர் மாதத்தில் தான் அப்வா அல்லது வத்தான் யுத்தத்திற்காக நபியவர்கள் புறப்பட்டார்கள். குறைஷிகளின் வியாபாரக் கூட்டம் ஷாமிலிருந்து வந்து கொண்டிருந்தது. அவர்களை எதிர்கொள்வதற்காக நபியவர்கள் 60 முஹாஜிரீன்களுடன் சென்றார்கள். இதில் அன்ஸாரிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை. இதுவே நபியவர்கள் கலந்து கொண்ட முதல் புனித போராகும். சண்டை எதுவும் நடக்கவில்லை. எதிரிகள் தப்பித்து விட்டனர். எனினும் இப்பயணத்தில் பனூ ளம்ரா என்ற கோத்திரத்தாருடன் நபியவர்கள் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

ஹிஜ்ரி 7ம் ஆண்டு ஸபர் மாதம் வாதில் 'குரா ' யுத்தம் நடந்தது. கைபர் யுத்தம் முடிந்து திரும்பும் போது இவர்களுடைய கோட்டை முற்றுகையிடப்பட்டது. இங்கும் இஸ்லாத்தை அழிக்க முற்பட்டுக் கொண்டிருந்த யூதர்கள் இருந்தனர். நான்கு நாள் முற்றுகைக்குப் பின் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது.

இவ்வாறு சிறப்பும் மகத்துவமும் மிக்கதே ஸபர் மாதமாகும்.

மௌலவி
எம்.யூ.எம். வாலிஹ்...
(அல் அஸ்ஹரி), வெலிகம



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

01. உருவிலுள்ள பொருட்களுடன் தொடர்புடைய செயல்கள் சரியான ஒழுங்கிலுள்ள விடையை தெரிவு செய்க.



i. படித்தல், பயணித்தல், சமைத்தல்
ii. அமர்தல், பயணித்தல், வெட்டுதல்
iii. அமர்தல், ஓட்டுதல், சமைத்தல்

02. ஒரு கடிகாரம் தற்போது மணி 12ஐக் காட்டுகிறது. இன்னும் 24 மணித்தியாலங்களின் பின் அக்கடிகாரம் காட்டும் நேரமென்ன?
i. 12 மணி ii. 6 மணி iii. 8 மணி

03. ஒரு வட்டவடிவான காணியை சுற்றி 30 கம்பங்கள் நடப்பட்டன. அக் கம்பங்களுக்கு இடையேயுள்ள இடைவெளிகள் எத்தனை?
i. 30 ii. 29 iii. 31

04. 
இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
i. 9
ii. 8
iii. 6

05. கார்த்திகாவின் உயரம் 2m 30cm தனுக்ஷனின் உயரம் 2m 25cm செர்வினின் உயரம் 1m 77cm இவர்கள் மூவரினது உயரங்களின் மொத்த கூட்டுத்தொகை யாது?
i. 6m 32cm ii. 6m 27cm iii. 6m 20cm

06. | 260 | 800 |
|---|---|
| 174 | |
| 380 | 960 |

இக்கூட்டினுள் உள்ள எண்களில் 4 ஆல் வகுபடாத எண்களின் எண்ணிக்கை யாது?
i. 1 ii. 2 iii. 3

07. இவ்வுருவின் சுற்றளவு யாது?
i. 14 cm
ii. 28 cm
iii. 32 cm




08. 
கூட்டினுள் உள்ள உருக்களின் இரண்டு மடங்கிலிருந்து 10 ஐக் கழித்து வருகின்ற விடையை உரோமன் எண்ணில் எழுதுக.
i. IX ii. XVI iii. VI

09. 7 0 9 0 4 இக்கூட்டிலுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணானது?
i. 00479 ii. 40079 iii. 47900

10. 

இந்த முக்கோண கம்பியை வளைத்து சதுரமொன்றினை உருவாக்கினால் அச்சதுரத்தின் ஒரு பக்க நீளம் எவ்வளவு?
i. 6 cm ii. 8 cm iii. 9 cm



**மேலேயுள்ள உருவினை அவதானித்த கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

11. வீட்டிலிருந்து மரத்தை நோக்கி செல்லும் போது எத்தனை தடவை கிழக்கு நோக்கி திரும்ப வேண்டும்?
i. 3 தடவை ii. 4 தடவை iii. 5 தடவை

12. வீட்டிலிருந்து மரத்தை நோக்கி பயணிக்கும் போது அதிக தடவை திரும்பிய திசை எது?
i. கிழக்கு ii. வடக்கு iii. தெற்கு

13. இப்பயணத்தின் போது ஒரேயளவான தடவைகள் திரும்பிய திசைகள் எவை?
i. மேற்கும் தெற்கும் ii. மேற்கும் கிழக்கும் iii. மேற்கும் வடக்கும்

14.  = 15 எனில்

 இன் பெறுமதி யாது?
i. 6 ii. 5 iii. 3

15. | 6 | 7 |
|---|---|
| 35 | |

| 5 | 8 |
|---|---|
| 32 | |

| 9 | 4 |
|---|---|
| ? | |

i. 36 ii. 32 iii. 30

16. கடிகார முகமொன்றில் செங்கோணத்தை விட சிறிய கோணத்தை உருவாக்கும் நேரமானது?
i. 3 மணி ii. 2 மணி iii. 2 மணி 45 நிமிடம்

17. இருபதாயிரத்து இருநூற்று முப்பத்திரண்டு இதனை பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது பெறப்படும் எண்களாவன?
i. 20232 ii. 23202 iii. 232002

18. இலக்கம் 1 தொடக்கம் 100 வரை எழுதும்போது இலக்கம் 3 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
i. 21 ii. 20 iii. 19

19. 10க்கு அடுத்துள்ள இரண்டால் பிரிபடும் எண்ணுடன் 20க்கு அடுத்துள் மூன்றால் பிரிபடும் எண்ணை கூட்டினால் கிடைப்பது?
i. 36 ii. 34 iii. 33

20. எந்த எண்ணின் 5 மடங்குடன் 50ஐக் கூட்டினால் 70 விடையாகக் கிடைக்கும்?
i. 4 ii. 5 iii. 6

21. 

இதிலுள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 50 ii. 55 iii. 60

22. சதுரங்களுக்கு கோணங்கள் உண்டு. ஆனால் இவ்வுருவுக்கு கோணங்கள் இல்லை எனவே இது ஒரு?
i. வட்டம் ii. உருளை iii. சரியாக கூறமுடியாது

23. 

i. 29 ii. 49 iii. 17

24. ஒரு புகையிரதம் 45 km தூரத்திலிருந்து 50 km தூரம் வரை பயணிப்பதற்கு 25 நிமிடங்கள் எடுத்தது. புகையிரதம் அதே வேகத்தில் இன்னும் 12 km செல்ல வேண்டுமானால் எவ்வளவு நேரம் எடுக்கும்?
i. 30 நிமிடங்கள் ii. 1 மணித்தியாலம் iii. 1 மணி 30 நிமிடங்கள்

25. 2013ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனில் 2015ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி என்ன கிழமையாகும்?
i. திங்கட்கிழமை ii. சனிக்கிழமை iii. வெள்ளிக்கிழமை

26. 
இதிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 10
ii. 12
iii. 14

27. நியம நேரத்தைக் காட்டும் கடிகார முகமொன்றில் 00 : 00 இவ்வாறு காட்டப்பட்டது. இன்னும் 12 மணித்தியாலங்களின் பின் நேரம் என்ன?
i. 12 : 00 ii. 24 : 00 iii. 00 : 00

28. 505 cm இதனை m, cm இல் எழுதினால்
i. 50m 50 cm ii. 5m 5cm iii. 50m 5cm

29. மீனவனுக்கு கடல் எனில் உழவனுக்கு
i. கலப்பை ii. வயல் iii. மாடு

30. ஒரு புத்தகத்தின் விலை ரூபாய் 250.00 ஆனால் 10 புத்தகங்கள் வாங்கினால் ஒரு புத்தகத்திற்கு ரூபாய் 10.00 குறைப்பதாக கடைக்காரர் கூறினார். சுதன் 10 புத்தகங்கள் வாங்கினால் அவன் கடைக்காரருக்கு கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?
i. ரூபாய் 2500.00 ii. ரூபாய் 2000.00 iii. ரூபாய் 2400.00

31. 850 மாம்பழங்களில் 3/10 மடங்கு அழுகிவிட்டது. மிகுதியாக உள்ள மாம்பழங்கள் எத்தனை?
i. 595 ii. 585 iii. 555

32. 50 - ? x 3 = 75
i. 20 ii. 25 iii. 30

33. 20, 40, 50, 60, 70, 80, 100 மேலே கொடுக்கப்பட்ட எண்களுள் ஒரு முறையான எண் கோலமொன்று உருவாக வேண்டுமானால் இதிலிருந்து நீக்கப்பட வேண்டிய எண்கள் எவை?
i. 60, 70 ii. 70, 80 iii. 50, 70

34. 10 மனிதர்கள் சேர்ந்து 6 நாட்களில் ஒரு வேலையை முடித்தனர் எனின் அவ்வேலையை 12 மனிதர்கள் சேர்ந்து எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?
i. 5 நாட்களில் ii. 4 நாட்களில் iii. 3 நாட்களில்

35. 3699 + 245 = ………… பெறப்படும் பெறுமதியை சொற்களில் எழுதினால்
i. மூவாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து நான்கு
ii. மூவாயிரத்து அறுநூற்று தொண்ணூற்றொன்பது
iii. மூவாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது

36. 1925ஆம் ஆண்டுடன் 50 ஆண்டுகளை கூட்டினால் கிடைக்கும் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு?
i. 18ஆம் நூற்றாண்டு ii. 19ஆம் நூற்றாண்டு iii. 20ஆம் நூற்றாண்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

(00 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

37. ஒரு எண்ணும் அதன் பன்னிரண்டு மடங்கும் சேர்ந்தால் 104 எனில் அவ்வெண் யாது?
i. 7 ii. 8 iii. 9

38. பின்வருவனவற்றுள் எப்போதும் உண்மையான கூற்றானது
i. பலமான காற்று வீசினால் மரங்கள் முறியும்
ii. இரவில் சந்திரன் தோன்றும்
iii. சூரியன் கிழக்கில் உதிக்கும்

39. ஒரு செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தின் இருமடங்கு. அந்த செவ்வகத்தின் சுற்றளவு 36cm எனின் அதன் நீளம் யாது?
i. 6 cm ii. 8 cm iii. 12 cm

40. 3kg அரிசி ரூபாய் 1080.00 எனில் 1kg அரிசி எவ்வளவு ரூபாய்?
i. ரூபாய் 360.00 ii. ரூபாய் 400.00 iii. ரூபாய் 420.00

## கடந்த வார (18.08.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

**I.**
1. ஒருவரின் ஒரு நாளைய நிகழ்வினை பதிவு செய்தல்
2. டைஸ்
3. நாட்குறிப்பு
4. நாட்குறிப்பு
5. நாள்
6. i. வேலை ii. தினம்

**II.**
7. மருந்து
8. i. ஐயோ! எனக்கு நீச்சல் தெரியாதே!
ii. உனக்கு பாடத் தெரியுமா?
9. i. புதல்வி ii. உத்தமி iii. தமக்கை iv. புத்திரி
10. சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்துக.
11. ஒற்றுமையே பலம்
12. கட்டுக்கதை
13. வேட்பாளர்
14. i. மட்குடம் ii. மாங்காய்
15. சுதன் நன்றாக படித்ததால் பரீட்சையில் வெற்றி பெற்றான்
16. i. சிப்பம் ii. வடலி
17. குயில்கள் இனிமையாக கூவும்
18. நான் சாப்பிட்டேனா?

**III.**
19. i. நாங்கள் காற்பந்து விளையாடுகிறோம்.
ii. அவை அழகான பூக்கள்
20. i. பரிகனகய ii. ஹூவா

**IV.**
21. i. மூவாயிரத்து நானூற்று இருபத்திரண்டு
ii. 3420
22. 30 நிமிடங்கள்
23. எண்ணற்றவை
24. X
25. i. 0.4 ii. 6/10
26. 3
27. 200
28. சமபக்க முக்கோணி
29. 100

**V.**
30. 2
31. 3
32. 3
33. 3
34. 1
35. 2
36. 1
37. 3
38. 2
39. 3
40. 1
41. 1
42. 3
43. 1
44. 3
45. 1
46. 2
47. 3
48. 2
49. 1
50. 3
51. 1
52. 2
53. 1
54. 1
55. 2
56. 3
57. 2
58. 3
59. 1

தோணிக்கல் இரட்டைக்கொலை;

# சந்தேகநபர்களின் வங்கிக்கணக்கை சோதிக்க நீதிமன்றம் அனுமதி

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, தோணிக்கல் பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பான சந்தேகநபர்கள் மற்றும் தேடப்படும் நபர்களின் வங்கிக்கணக்குகளை சோதிக்க குற்றப் புலனாய்வு திணைக்களத்தினருக்கு அனுமதி வழங்கியுள்ள வவுனியா மாவட்ட நீதிமன்றம், இவர்கள் வெளிநாடு செல்ல தடை விதித்து, இவர்களின் கடவுச்சீட்டுகளை முடக்குவதற்கும் நேற்று வியாழக்கிழமை (24) உத்தரவிட்டுள்ளது.

இச்சந்தேகநபர்கள் தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் நிலையில்,

நேற்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு திகதியிடப்பட்டிருந்த போதும், அடையாள அணிவகுப்புக்கு உரிய நபர் சிகிச்சை பெற்றுவருவதால், இந்த வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் 7ஆம் திகதி முன்னெடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த இரட்டைக் கொலை தொடர்பாக வவுனியா சிறைச்சாலையிலுள்ள பிரதான சந்தேகநபரிடமிருந்து கையடக்கத் தொலைபேசியொன்று நேற்று அதிகாலை மீட்கப்பட்டதுடன், தினமும் 90 நிமிடங்கள் உள்ளடங்கலாக 35 தடவைகள் பெண்ணொருவருடன் இச்சந்தேகநபர் உரையாடியமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக நீதிமன்றத்துக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

கடந்த மாதம் 23ஆம் திகதி அதிகாலை தோணிக்கல்லிலுள்ள வீடொன்றில் வாள் வீசி தாக்கியதுடன், அவ்வீட்டுக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்த சம்பவத்தில் இளம் கணவன், மனைவி ஆகிய இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதான சந்தேகநபர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதை தொடர்ந்து,

பிரதான சந்தேகநபர் உட்பட 5 பேர் வவுனியா சிறையிலும், ஒருவர் அநுராதபுரம் சிறையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், வவுனியா சிறையிலுள்ள பிரதான சந்தேகநபர் கையடக்கத் தொலைபேசி பாவித்தமை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினருக்கு தெரியவந்தது.

இது தொடர்பாக வவுனியா சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் கவனத்துக்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கொண்டு வந்ததையடுத்து, சிறையில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டு, பிரதான சந்தேகநபரிடமிருந்து கையடக்கத் தொலைபேசி மீட்கப்பட்டது.

இந்த கையடக்கத் தொலைபேசியினூடாக 3,292 வெளிச்செல்லும் அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவற்றில் 3 அழைப்புகள் இவரது மனைவிக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிறிதொரு பெண்ணொருவருக்கு 35 தடவைகள் அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுஉரையாடியமைதெரியவந்துள்ளதாக, குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணை மேற்கொள்வதற்கு நீதிமன்றத்திடம் அனுமதி பெற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## வடக்கின் உதயம்

# குருந்தூர்மலை விவகாரத்தை அமெ. உன்னிப்பாக அவதானிக்கிறது

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்

**யாழ். விசேட, யாழ்ப்பாணம் குறூப் நிருபர்கள்**

குருந்தூர்மலை விவகாரத்தை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருப்பதாக, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் (23) விஜயம் செய்த அவர், பல்வேறு தரப்பினரையும் சந்தித்ததுடன், அன்றையதினம் மாலை தனியார் விடுதியொன்றில் ஊடகவியலாளர்களை சந்தித்துக் கலந்துரையாடிய போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார். இச்சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

"குருந்தூர்மலை விவகாரத்தில் சட்டப் பிரச்சினை, காணிப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை ஆகிய 3 விடயங்கள் உள்ளடங்கியுள்ளதால், இதொரு சிக்கலான விடயம். இந்த விடயத்தைக் கவனமாக கையாள வேண்டுமென்பதுடன், இந்த விடயத்தை இலங்கை அரசாங்கம் எவ்வாறு கையாள்கிறதென்பதை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறோம்.

இந்தச் சிக்கலுக்கு இலங்கை அரசாங்கம் மிக விரைவில் அமைதியான தீர்வைக் காண வேண்டுமெனவும் இல்லாவிடின், இதொரு பாரிய பிரச்சினையாக உருவெடுக்கும். இந்தப் பிரச்சினையை விரைந்து தீர்ப்பதற்கு அமெரிக்க அழுத்தம் வழங்கும்" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய வடமாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகள் தொடர்பாக மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் வடக்கின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும், வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுடனான சந்திப்பின்போது தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

# நல்லூர் மூத்த விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் புதன்கிழமை (23) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து விநாயகப்பெருமான் வீதி வலம் வந்தார்.

பிரதான கும்பங்கள் எடுத்துவரப்பட்டு பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது.

இதன் பின்னர், ஆலயத்தில் நாட்டியாஞ்சலி நிகழ்வும் நடைபெற்றது.



நெடுந்தீவு- குறிகட்டுவான்

# குமுதினிப்படகு சேவை மீண்டும் ஆரம்பம்

**யாழ்.விசேட நிருபர்**



பழுதடைந்திருந்த குமுதினிப்படகு திருத்தியமைக்கப்பட்டதை தொடர்ந்து, யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான குமுதினிப்படகு சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குமுதினிப்படகானது திருத்தவேலையின் பின்னர் குறிகாட்டுவானில் தரித்து விடப்பட்டிருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் (23) புதன்கிழமை மாலை குறிகாட்டுவானிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு நெடுந்தீவுக்கு புறப்பட்ட குமுதினிப்படகு, நேற்று வியாழக்கிழமை (24) காலை 7.00 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு தனது பயணத்தை மீண்டும் ஆரம்பித்தது.

குமுதினிப்படகானது அடிக்கடி செயலிழந்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருத்தியமைக்கப்பட்டது.

1968ஆம் ஆண்டு முதல் குமுதினிப்படகு தனது சேவையை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் 8 ஆயிரம் குடும்பங்கள் குடிநீரின்றி சிரமம்

## நீரை சிக்கனமாக பயன்படுத்த யாழ். அரச அதிபர் வேண்டுகோள்

**யாழ். விசேட நிருபர்**

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவுகின்ற வரட்சியான காலநிலை காரணமாக 22 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் 8 ஆயிரம் குடும்பங்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளதாக, அம்மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

ஆ கையினால், வரட்சி நிலைமை யை கவனத்திற்கொண்டு நீரை சிக்கனமாக பயன்படு த்துமாறும் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்ட அவ ர், கிணறுகளில் நீர்மட்டம் குறைந்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மருதங்கேணி, சங்கானை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள பொதுமக்கள் வரட்சியால் அதிக பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இவ்வாறு குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு குடிநீர் விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் உள்ளிட்டவர்களின் தரவுகளை பிரதேச செயலகங்களினூடாக சேகரிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு ஒருதொகை மருந்துகள் கையளிப்பு



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழியங்கும் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் சுமார் 40 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியசாலை அபிவிருத்தி சபையெனத் தெரிவிக்கப்படும் தொண்டு அமைப்பின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை (23) கையளித்து வைக்கப்பட்டது.

இவற்றை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ரி.விநோதனிடம் மேற்படி தொண்டு அமைப்பின் தலைவர் சுபேதி தேரர் கையளித்து வைத்தார்.

இம்மருந்துகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான நிதி உதவி மற்றும் அனுசரணையை வெளிநாடுகளில் உள்ளவர்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில்

## இணையவழி குற்றங்களை தடுக்க மட்டக்களப்பில் விழிப்புணர்வு



**கல்லடி குறூப் நிருபர்**

அதிகரித்துவரும் இணையவழி குற்றங்கள், வன்முறைகளைத் தடுக்கும் நோக்கில், அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பில் புதன்கிழமை (23) இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இவ் விழிப்புணர்வு ஊர்வலம், கல்லடி பாலத்திலிருந்து ஆரம்பமாகி காந்தி பூங்காவில் நிறைவு பெற்றது.

நாட்டில் அதிகரித்து வரும் இணைய வழி வன்முறை தொடர்பாக இளைஞர் மற்றும் யுவதிகளுக்கான விழிப்புணர்வு செயலமர்வுகளும் அருவி பெண்கள் வலையமைப்பினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் முதல் கட்டமாக 60 இளைஞர்களுக்கான இணைய பாதுகாப்பு பயிற்சி நெறி (cyber security TOT training) வழங்கப்பட்டுள்ளதுடன், இணைய வழி குற்றங்களில் இருந்து பாதுகாப்பாகவும் விழிப்புணர்வாகவும் இருப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் இம்மாபெரும் வீதியோர விழிப்புணர்வு மேற் கொள்ளப்பட்டது.

இவ்வூர்வலத்தில் அதிகளவான இளைஞர், யுவதிகள், பெண்கள் என பலரும் கலந்து கொண்டதுடன், இணையவழிக் குற்றங்களைத் தடுக்கும் வாசகங்கள் கொண்ட விழிப்புணர்வு பதாகைகள், விழிப்புணர்வு சமிக்ஞைகள், காட்சிப்படுத்தப்பட்ட ஊர்தி என்பன இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



நாவிதன்வெளி வேப்பையடி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக நிகழ்வு இடம் பெற்றபோது... (படம்: மணல்சேனை நிருபர்)

## மோ.சைக்கிள் விபத்தில் இளம் ஆசிரியர் பலி



வாழைச்சேனை - புனாணை பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் ஆசிரியர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இவ்விபத்து நேற்று வியாழக்கிழமை (24) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி கல்விக் கோட்ட ரிதிதென்னை இக்ராஹ் வித்தியாலயத்தில் ஆங்கிலப் பாட ஆசிரியரான இவர், ரிதிதென்னையிலிருந்து ஓட்டமாவடி நோக்கி தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது எதிரே வந்த பஸ் வண்டியில் மோதி சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

அண்மையில் ஆங்கிலப் பாட ஆசிரியர் நியமனம் பெற்ற இவர், ஓட்டமாவடி 3 ஆம் வட்டாரத்தில் வசித்து வந்த எஸ்.எச்.எம்.அஸாம் (வயது 25) என்பவராவார்.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்த மற்றையவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த இளம் ஆசிரியரின் உடல் வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

## சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**



அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ. எம். இஸ்ஸதீன் தெரிவித்தார்.

உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்களால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பன திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், பொருட்கள், காலவதியான பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு வருவதாடு, உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

## வரட்சியால் கால்நடைகள் பாதிப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் கடுமையான வரட்சியால் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

குடிநீரின்றி, உணவின்றி கால்நடைகள் தவிப்பதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், தம்பலகாமம் கிண்ணியா பகுதியில் கால்நடை வளர்ப்பு அதிகமாக உள்ளதால், சிறு குளங்கள் வறண்டுள்ளதால் மாடுகளுக்கு தேவையான நீர் இல்லாததால் பெரும் சிக்கல் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். வறண்ட மேய்ச்சல் நிலங்களுக்கு தீ வைக்க வேண்டாம் என சம்பந்தப்பட்ட பகுதி விவசாய அதிகாரிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடும் வறட்சியால் நீர் பற்றாக்குறையால் தினசரி பால் உற்பத்தியும் குறைந்துள்ளதாக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## யானைகளால் அச்சம்; பற்றைக் காடுகள் துப்புரவு

**மூதூர் தினகரன் நிருபர்**



மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மேற்கு கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் உப்புக்காச்சிமடு கரையோர மக்கள், யானைகளிடம் இருந்து பயிர்கள் மற்றும் குடியிருப்புக்களை பாதுகாக்கும் முகமாக ஆற்றங்கரை ஓரமாக உள்ள பற்றைக்காடுகள் மற்றும் செடிகொடிகளை வெட்டி அகற்றும் பணியில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அடிக்கடி பண்வெட்டான், பால்துறை மற்றும் இறால்குழியை அண்டிய காடுகளில் இருந்து இறால்குழி ஆற்றை கடந்து வரும் யானைகள் ஆற்றங்கரை பற்றைக்காடுகளில் மறைந்து நிற்பதால், இக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் இரவில் போக்குவரத்து செய்ய அச்சப்படுகின்றனர். இந்நிலையில் யானைகள் மறைந்து நிற்கும் பற்றைகள், செடிகொடிகளை அகற்றி கரையோரமாக இக் கிராம மக்கள் துப்புரவு செய்து வருகின்றனர்.

## அன்னமலை வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் தீ மிதிப்பு



**சவளக்கடை குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் பழைமை வாய்ந்த ஆலயங்களின் ஒன்றான அன்னமலை அருள்மிகு ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார மஹோற்சவ பெருவிழாவின் இறுதி நாள் தீ மிதிப்பு வைபவம் புதன்கிழமை (23) சிறப்பாக இடம்பெற்றது.

அன்னமலை அருள்மிகு ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் அலங்கார மஹோற்சவ பெருவிழா கடந்த செவ்வாய்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, 08 தினங்களாக மஹோற்சவகால கிரியைகள் நடைபெற்றதுடன் , இறுதிநாள் தீ மிதித்தல், அம்பாளுக்கு பாளை சாத்துதல், அதனை தொடர்ந்து மங்கள வாழ்த்து பாடலுடன் உற்சவம் இனிதே நிறைவுபெற்றது. தீ மிதிப்பு வைபவத்தில் பெரும் திரளான பக்த அடியர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.



தென்னை பயிர் செய்கை சபையினால் "ஸ்ரீ சம்பத் புதிய இல்லம்" திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இலவச தென்னங்கன்று வழங்கும் நிகழ்வு பிரதேச சபை வளாகத்தில் இடம்பெற்றது. பிரதேச சபையின் செயலாளர் எம். ஏ. கே முஹம்மட் உத்தியோகத்தர் ஒருவருக்கு தென்னங்கண்று வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (படம்: இறக்காமம் தினகரன் நிருபர்)

அமைச்சர் நஸீர் அஹமட்டின் முயற்சியினால்

## மீராவோடை வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸ் வண்டி கையளிப்பு



மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பிரதேச வைத்தியசாலைக்குரிய அம்பியூலன்ஸ் வண்டி, திருத்த வேலைக்காக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. நீண்ட நாட்களாகியும் திருத்த வேலைகள் முடிவடைந்து மீண்டும் அம்பியூலன்ஸ் வண்டி ஒப்படைக்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

இதனால் வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக நோயாளிகளை இடமாற்றம் செய்வது மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருந்தை அவதானிக்க முடிந்தது.

மேற்படி விடயம் தொடர்பாக மீராவோடை ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தனர். இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் நஸீர் அஹமட், உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து, அம்பியூலன்ஸ் வண்டி செவ்வாய்க்கிழமை (23) மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பணிப்பாளரினால் மீண்டும் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர் நிப்ராஸ் மற்றும் மீராவோடை ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

## வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆடுகள் கையளிப்பு

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று ஆலிம் நகர் கிராமத்தில் "கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஆடு வளர்ப்புத் திட்டம்" எனும் தொனிப்பொருளில் ஆடு வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்றது. பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். ஆகிர், மிருக வைத்திய அதிகாரிகளான றிப்கான், சஜீனா, கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ .சஹர்பான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எல். தையூப், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பெரிய நீலாவணை மயானத்தில் அஞ்சலி மண்டபம் நிர்மாணிப்பு

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெரியநீலாவணை கிராமத்தில், அமைந்துள்ள இந்து மயானத்தில் இறந்தவர்களின் உடலை வைத்து இறுதி மரியாதை செலுத்தும் வகையில் அஞ்சலி மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெரியநீலாவணையைச் சேர்ந்த அமரத்துவமடைந்த சமூக ஆர்வலர் செல்வரெட்ணம் நவரெட்ணம் ஞாபகார்த்தமாக அவரின் புதல்வர் நவரெட்ணம் ருக்மாங்கதன் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் பெரிய நீலாவணை நெக்ஸ்ட் ஸ்ரப் அமைப்பினரின் அனுசரணையில், இவ் அஞ்சலி மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு, திருமதி நவரெட்ணம் விஜயலட்சுமியினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை (23) நடைபெற்ற இந் நிகழ்வில் பெரிய நீலாவணையின் ஆலய நிருவாகங்கள், விளையாட்டு கழகங்கள் மற்றும் பொது அமைப்புக்கள், அபிவிருத்தி சங்கங்கள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## களுவாஞ்சிக்குடியில் பழ மர தோட்டம் அமைக்க நடவடிக்கை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மரநடுகை திட்டத்தின் கீழ், பழமர தோட்டம் அமைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (22) பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் குருக்கள் மடம் அசீசி சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது.

இப் பழ மர தோட்டம் அமைக்கும் நிகழ்வில் 80 பயன்தரும் மா, தோடை, மாதுளை, கொய்யா போன்ற பழ மரக் கன்றுகள் மற்றும் தென்னை மரங்களும் நடுகை செய்யப்பட்டன .

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மலராஜ், அருட்சகோதரர் ஜெகன், அருட்தந்தை அம்றோஸ், நன்னிலம் சமூக நிறுவனத்தின் உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் இல்ல மாணவர்கள் என பலர் பங்கேற்றனர்.




# பலாங்கொடையில் வீடுகளுக்கு மின்சார இணைப்புகளை வழங்குவதில் தாமதம்

## மின் உபகரணங்களுக்கு தட்டுப்பாடு



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை பிரதேசத்தில் வீடுகளுக்கு புதிதாக மின்சார இணைப்புகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் 500 பேருக்கும் மேற்பட்ட மக்கள் புதிய மின்சார இணைப்புகளுக்கு விண்ணப்பித்துள்ள போதிலும் இவர்களது மின்சார தேவை இதுவரை நிறைவேறவில்லையென தெரிவிக்கின்றனர். மின் இணைப்பை பெறுவதற்காக இவர்கள் அடிக்கடி மின்சாரசபை காரியாலயத்துக்கும் வேறு இடங்களுக்கும் சென்று முறையிட்டு வருகின்றனர். இதனால் தமது வீடுகளுக்கான மின் இணைப்பை புத்தாண்டுக்கு முன்னர் பெற்றுத் தருமாறு இவர்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

இவ்விடயமாக பலாங்கொடை நிறைவேற்று பொறியியலாளர் காரியாலய அதிகாரிகளிடம் வினவிய போது மின்சார இணைப்புகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்வதாகவும் இவற்றுக்கு இணைப்பை வழங்குவதற்கு தேவையான மின்சார இணைப்பு வயர்கள், கம்பிகள், மீற்றர் போர்ட் ஆகிய உபகரணங்கள் நீண்டகாலமாக கிடைக்காமையால் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும் இவை வந்து சேர்ந்தவுடன் வீடுகளுக்கான மின்சார இணைப்பை துரிதமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பஸ்ஸின் டயர் கழன்று விபத்து



மொனராகலையிலிருந்து பதுளை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியொன்று பசறை படல் கும்புற கமேவெல தோட்டத்துக்கு அருகில் விபத்துக்குள்ளாகியது. பஸ் வண்டியின் டயர் கழன்று விழுந்தமையால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் இதில் உயிர்சேதம் ஏற்படவில்லை. பஸ்சில் 20ற்கும் மேற்பட்ட பயணிகள் சென்றுள்ளனர். சாரதியின் சாதுரியத்தால் பெரும் உயிர் சேதமோ, பொருள் சேதமோ ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான பஸ்சின் படத்தை இங்கு காணலாம்.

# சர்வதேச குத்துச்சண்டை தினம் அனுஷ்டிப்பு

(கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

கண்டி புனித சில்வெஸ்டஸ் கல்லூரி பழைய மாணவர் விளையாட்டு கழகத்தின் அனுசரணையுடன் சர்வதேச குத்துச்சண்டை தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்டி தலதா வீதியிலுள்ள டொரின்டன் கூரைப் பூங்காவில் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

முன்னாள் குத்துச் சண்டை வீரர்கள், தற்போதைய வீரர்கள், பாடசாலை மட்ட வீரர்கள், குத்துச் சண்டை சம்மேளன உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். தொடர்ந்தும் பல தடவைகள் குத்துச்சண்டை கேடயத்தை வெற்றிப்பெற்ற கண்டி புனித சில்வெஸ்டஸ் கல்லூரிக்கு சர்வதேச குத்துச்சண்டை நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய கல்லூரி சார்பில் குத்துச்சண்டை பழைய மாணவர்களும், விளையாட்டுக் கழகமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளது.

# இளம் தாயொருவர், தெப்பக்குளத்தில் குதித்து உயிரிழப்பு



(ஹற்றன் சுழற்சி நிருபர்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை, லோகி தோட்டத்தைச் சேர்ந்த இளம் தாயொருவர், தெப்பக்குளத்தில் குதித்து உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் நேற்றுமுன்தினம் (23) காலை மீட்கப்பட்டுள்ளது. அவரின் ஒரு வயது குழந்தைக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை தகவல் கிடைக்கவில்லை.

இது குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். லோகி தோட்டத்தைச் சேர்ந்த மகாமணி தயானி (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஐந்து பக்கத்தில் கடிதமொன்றையும் அவர் எழுதியுள்ளார். கடிதம், திருமண பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றை தெப்பக்குளத்துக்கு அருகில் வைத்துவிட்டு குதித்துள்ளார். தன்னையும், தனது குழந்தையையும் கணவரின் குடும்பத்தினர் துன்புறுத்துவதாக அக்கடிதத்தில் எழுதப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கவிதைநூல் வெளியீட்டு விழா

ஊவா தமிழ் இலக்கியப் பேரவையின் அனுசரணையில். பசறை நூலக கேட்போர் கூடத்தில், எதிர்வரும் 26 ஆம் திகதி, சனிக்கிழமை, முற்பகல் 9 மணிக்கு, கலைச்சுடர் காவத்தையூர் பழனியாண்டி கனகராஜாவின் எண்ணங்களின் வண்ணங்கள் எனும் கவிதைநூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஊவா தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவர் கலாபூஷணம் அருண் தியாகு தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.அரவிந்த குமாரும் கௌரவ அதிதிகளாக சிரேஷ்ட சட்டத்தரணி பதுளை திரு.சேனாதிராஜா, சிரேஷ்ட விரிவுரையாளர் பீ.ஆறுமுகம், திரு.வீ.திருலோகசங்கர் அதிபர்.திரு. எஸ்.ராஜேந்திரா ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் முக்கிய அம்சங்களாக வரவேற்பு நடனம், தனி நடனங்கள், குழுநடனம், வாழ்த்துப்பாக்கள், வாழ்த்துரைகள், ஏற்புரை, கருத்துரை, பாடல்,நாட்டார் பாடல் மற்றும் பல்வேறு சிறப்புரைகள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வடகிழக்கு மற்றும் மலையக பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்காக வெளிநாட்டு குழுவொன்று அண்மையில் இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரை சந்தித்தது. இதன்போது அமைச்சின் திட்டமிடல் பிரிவின் மேலதிகசெயலாளர், பொறியியலாளர் மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# குருவிட்ட பிரதேசத்தில் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு தமிழ்மொழி பயிற்சிகள்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

குருவிட்ட பிரதேச செயலக பிரிவிலுள்ள ஆரம்ப பாடசாலை மற்றும் அறநெறி பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு 12 நாட்கள் தமிழ் மொழி பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குருவிட்ட பிரதேச செயலக காரியாலயத்தின் மூலம் இவ்வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இம்மாதம் 31 ஆம் திகதி வரை மலவ பௌத்த விகாரையில் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.




தமிழ் மொழியை கற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள ஆரம்ப பாடசாலை மற்றும் அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்கின்றனர். இனங்களுக்கிடையே ஒற்றுமையை உறுதிப்படுத்துவதே இவ்வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். இலவசமாக நடத்தப்பட்டு வரும் தமிழ் மொழி பயிற்சி வேலை திட்டத்துக்கு நிதிபங்களிப்பை தமிழ் மொழி சிறப்பு பயிற்சியாளர்களான எஸ். சுந்தரலிங்கம் மற்றும் பி.பேகம் ஆகியோர் வழங்கிவருகின்றனர். தமிழ் மொழியை கற்றுக் கொள்வதுடன் தமிழ் மக்களுடன் கலந்துரையாடுவது மற்றும் அவர்களது பழக்கவழக்கங்கள் பற்றியும் இந்த பயிற்சியின் போது கற்றுக் கொடுக்கப்படவுள்ளது. பயிற்சியின் பின்னர் பயிற்சியாளர்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்களை சந்தித்து அவர்களுடன் உரையாடுவதற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கடும் வரட்சி; வெளித்தெரியும் பழைய மஸ்கெலியா நகரம்

ஹற்றன் சுழற்சி நிருபர்)



நாட்டில் நிலவும் கடும் வரட்சியால் மலையகத்திலுள்ள நீர்த்தேக்கங்கள், ஆறுகள் மற்றும் குளங்களின் நீர் மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது.

சில பகுதிகளில் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், விவசாய நடவடிக்கைகளுக்கு நீரை பெறுவதில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடும் வரட்சியால் தேயிலை விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது, கடும் சிரமத்துக்கு மத்தியிலேயே கொழுந்து கொய்து வருவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். வரட்சியான காலநிலையால் காசல்ரீ மற்றும் மவுசாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மேலும் குறைவடைந்துள்ளது. அத்துடன், மவுசாக்கலை நீர்த்தேக்கம் அமைக்கும்போது நீருக்குள் சங்கமமான பழைய மஸ்கெலியா நகரத்தின் இருப்பிடங்கள், புராதன கோயில், விகாரை, பாலங்கள் உட்பட பல்வேறுபட்ட ஞாபக சின்னங்கள் தற்போது வெளியில் தோன்றுகின்றன. பெருமளவானவர்கள் இதனை பார்வையிட்டும் வருகின்றனர். அதேவேளை, மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் மனித செயற்பாடுகளால் காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

# கொரிய பல்கலை மாணவர்கள் நுவரெலியாவுக்கு விஜயம்



கொரிய நாட்டு பல்கலைக்கழக மாணவர்கள் நுவரெலியாவுக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்ததுடன் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நுவரெலியா மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்த கொரியா பல்கலைக்கழக மாணவர்களை நுவரெலியா மாவட்டச் செயலாளர் நந்தன கலபட வரவேற்றதோடு அங்கு நடைபெற்ற கலந்துரையாடலின் போது நுவரெலியா மாவட்டம் பற்றிய அடிப்படை விபரங்களை தெளிவுப்படுத்தினார்.

அதன்பின்னர் கொரியா பல்கலைக்கழக மாணவர்கள் மாவட்ட செயலாளரிடம் தாம் ஒரு வார காலத்திற்குள் செயற்படுத்த எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தினர். செமால் அறக்கட்டளையின் இலங்கைப் பணிப்பாளர் சோய் சன், மேலதிக மாவட்டச் செயலாளர் திருமதி.சுஜிவா போதிமான்ன மற்றும் களனிப் பல்கலைக்கழக மொழிக் கற்கைப் பிரிவு மாணவர்கள் ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.





தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட நடன போட்டியில் கினிகத்தேனை கடவளை விக்னேஸ்வரா கல்லூரி மாணவர்கள் முதலிடத்தை பெற்று தேசிய மட்ட நடன போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

(படங்கள் கினிகத்தேனை தினகரன் நிருபர்)

# சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீர்க்கசிவு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சமனலவெவ நீர்த்தேக்கத்தில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவுக்கான காரணத்தை தேடும் பணியில் அதன் பொறியியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளதால் நீர்க்கசிவுக்கான காரணத்தை இலகுவாக கண்டறிய முடியுமெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். கசிவு கண்டுபிடிக்கப்பட்டால் நீர்த்தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள உடவளவ நீர்த்தேக்கத்தை நம்பி விவசாயம் செய்யும் மகாவலி விவசாய நிலங்களுக்கான நீரை இலகுவாக விநியோகிக்க முடியுமெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் 18 ஆவது ஆண்டில் தடம்பதிக்கிறது

மலையக இளைஞர்களால் உருவாக்கப்பட்டு கொழும்பு செட்டியார் தெருவை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் 17 வருடங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து நாளை சனிக்கிழமை (26) அதன் 18 ஆவது வருடத்தில் தடம்பதிக்கின்றது.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 18 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் மன்றத்தின் சிறப்பான பணிகளுக்கு இறைஆசி வேண்டி நாளை சனிக்கிழமை செட்டியார் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் தலைவர் எம். தேவராசன் தலைமையில் இடம்பெறவுள்ள விஷேட பூசை வழிபாடுகளில் மன்றத்தின் போஷகர்கள் உட்பட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிப்பிக்கவுள்ளார்கள் என்று உபதலைவர் ஏ. எஸ். ஞானம் தெரிவித்துள்ளார்.

' கல்விக்கு கரம் கொடுப்போம்', 'வீட்டுக்கு ஒரு பட்டதாரியை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளில் மலையகக் கல்வி அபிவிருத்திக்கு உதவும் வகையில் தரம் – 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு முன்னோடிப்பரீட்சைகளைநடத்துவதற்கான வினாப்பத்திரங்கள், கையேடுகள் முதலானவற்றை அச்சிட்டு இலவசமாக விநியோகித்தும், செயலமர்வுகளை நடத்தியும் ஊக்குவித்து வந்துள்ளதோடு, பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி கல்வி பயின்று வரும் வசதி குறைந்த மாணவர்களுக்கு மாதாந்த புலமைப் பரிசிலும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், மாணவர்களின் விளையாட்டு முயற்சிகள், பாடசாலைகளுக்குத் தேவையான போட்டோ பிரதி இயந்திரம், கணனி வசதிகள், மாணவர்களுக்கு சீருடைகள், புத்தகப் பைகள், பாதணிகள், கற்றல் உபகரணங்கள் முதலானவற்றையும் வழங்கி ஊக்குவித்து வந்துள்ளது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் அண்மையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் You tube மற்றும் Website வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. விரைவில் ஆண்டு விழாவைக் விமரிசையாகக் கொண்டாட புதிய வேலைத் திட்டங்களுடன் விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 17 ஆண்டுகளாக மன்றத்தின் வளர்ச்சிக்கும், பணிகளுக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பும் பங்களிப்பும் வழங்கி வரும் போஷகர்கள், நிர்வாகக் குழுவினர், செயலாளர், பொருளாளர், ஆலோசகர்கள், பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஊடகத் துறையினர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் நன்றியறிதலோடு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும், எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எதிர் பார்ப்பதாகவும் உபதலைவர் ஏ.எஸ். ஞானம் தெரிவித்துள்ளார்.

—ஏ.எஸ்.ஞானம்
(உபதலைவர்)

# மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச குர்ஆன் மனனப் போட்டி மக்கா நகரில் இன்று 25 ஆம் திகதி ஆரம்பம்

சவுதி அரேபியாவின் மறைந்த மன்னர் அப்துல் அஸீஸின் பெயரிலான சர்வதேச அல் குர்ஆன் மனனப் போட்டி இன்று 25 ஆம் திகதி மக்காமா நகரில் ஆரம்பமாகிறது. இப்போட்டி நிகழ்ச்சிகள் தொடராகப் பத்து நாட்கள் நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இறுதி நாளன்று பரிசில்கள் வழங்கப்படும். இலங்கை உட்பட 117 நாடுகளில் இருந்து அல் குர்ஆனை மனனம் செய்த 166 போட்டியாளர்கள் இம்முறை இப்போட்டியில் பங்குபற்றுகின்றனர்.

இப்போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்களை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் சவுதி அரேபியா மேற்கொண்டுள்ளது. இலங்கை நாணயப்படி 40 கோடி ரூபாவை பரிசில்களுக்காக ஒதுக்கீடு செய்துள்ள சவுதி அரேபியா, இப்போட்டியில் முதலாமிடத்தைப் பெறும் அதிர்ஷ்டசாலிக்கு 05 கோடி ரூபாவை வழங்க உள்ளது.

இரு புனித பள்ளிவாசல்களின் காவலரான சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸின் நேரடி பங்குபற்றுதல்களுடன் இஸ்லாமிய கலாசார அமைச்சர் அப்துல் லதீப் ஆல் ஷைக்கின் கண்காணிப்பில் இன்று ஆரம்பமாகும் சர்வதேச குர்ஆன் மனனப் போட்டி 43 ஆவது தடவையாக நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. அல் குர்ஆனுக்கும் குர்ஆனை மனனம் செய்தவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய அனைத்து கண்ணியங்களையும் கௌரவங்களையும் சவுதி அரேபிய அரசாங்கம் அன்று தொட்டு வழங்கி வருக்கிறது. அல் குர்ஆனின் மகத்துவத்தை உலகறியச் செய்யும் மகத்தான பணியை சவுதி அரேபிய அரசு தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறது. இதன் நிமித்தம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிராந்திய நாடுகளிலும் மாத்திரமல்லாமல் சர்வதேச மட்டத்திலும் அல் குர்ஆன் மனனப் போட்டிகளை நடாத்தி வருகிறது.



அந்த வகையில் இன்று மக்காவில் சர்வதேச குர்ஆன் மனனப் போட்டி ஆரம்பமாகின்றது. அதேநேரம் சவுதி அரேபியாவின் நீண்ட கால நட்பு நாடுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கையில் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் ஊடாக கடந்த மாதம் தேசிய மட்ட அல் குர்ஆன் மனனப் போட்டி முதற்தடவையாக நடாத்தப்பட்டன. சவுதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சின் மாபெரும் பரிசுத் தொகையிலான இப்போட்டி இந்நாட்டில் நடத்தப்படுவதற்கான ஒத்துழைப்பையும் ஏற்பாடுகளையும் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் அல் கஹ்தானி மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் பங்குபற்றிய அல் குர்ஆனை மனனம் செய்த ஹாபிழ்கள் ஒன்றரைக் கோடி ரூபாக்கும் மேல் பெறுமதிமிக்க பரிசில்களை வென்றெடுத்தனர்.

இது போன்ற குர்ஆன் மனனப் போட்டிகளை சவுதி அரேபிய அரசாங்கம் தேசிய, சர்வதேச ரீதியில் நடாத்தி உலக மக்களது நன்மதிப்பைப் பெற்றுள்ளது. உலகில் குர்ஆனை மனனம் செய்த ஹாபிழ்களுக்கு இப்போட்டியில் கலந்து கொள்ளவும் இலவசமாக புனித மக்காவை தரிசிக்கவும் புனித உம்ராவை நிறைவேற்றவும் வெற்றி பெறும் போது பெறுமதியான பரிசுகள் கிடைக்கவும் வழியமைத்துக் கொடுக்கிறது சவுதி அரேபியா.

இதனால் சவுதி அரேபியாவின் இம்மகத்தான செயலினால் உலகில் உள்ள ஒவ்வொரு முஸ்லிமும் மிக்க மகிழ்ச்சிடைகின்றனர். பலரது நீண்ட நாள் கனவு இதன் மூலம் நிறைவேறுகிறது எனலாம். ஆகவே இம்முறை இலங்கை சார்பாக புனித மக்காவுக்குச் செல்லும் போட்டியாளர் முதல் பரிசை வென்று நாட்டுக்கும் நாட்டு முஸ்லிம்களுக்கும் கௌரவத்தைப் பெற்றுக்கொடுக்க எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிய வேண்டும் எனவும் இப்போட்டி புனித மக்காவில் சிறப்பாக நடைபெற வேண்டும் எனவும் இப்போட்டியை சகல செலவுகளுடனும் நடாத்தும் சவுதி அரேபிய மன்னர், இளவரசர், இஸ்லாமிய விவகார அமைச்சர் மற்றும் சவுதி அரேபிய அரசுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்தனை புரிகின்றேன்.





– மௌலவி
எம்.எச்.ஷேஹுத்தீன் மதனி (பி.ஏ)
பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு

# 'உயிரை விட நட்பை மேலாக மதித்தவர் பேராசிரியர் ஹஸ்புல்லா'

போராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் மறைந்த எம். எச். ஹஸ்புல்லாஹ்வின் ஐந்தாண்டு நினைவு தினம் (25.08.2023) இன்றாகும். இது தொடர்பான கலந்துரையாடல் மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் விஷேட கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

எனது நெருக்கமான நண்பர்களுள் முதன்மையானவர் பேராசிரியர் எம். எச். ஹஸ்புல்லாஹ் ஆவார். 1970 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கழைக் கழகத்தில் அனுமதிக்கப்பட்ட முதல் நாளே ஹஸ்புல்லாஹ், என் உள்ளத்திலும் உணர்விலும் இணைந்துகொண்டார். ஜே.பி மண்டபம் என்றழைக் கப்படும் ஜேம்ஸ் பீரிஸ் விடுதியில், நாங்கள் இருவரும் ஒரே அறையில் தங்கினோம்.

ஹஸ்புல்லாஹ் கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டிலும் பிரகாசித்தார். பல விளையாட்டுப் போட்டிகளுக்கு, அவரை அழைத்துச்செல்ல பலர் போட்டியிட்டனர். இரண்டாவது வருட கல்வி ஆண்டில், நானும் ஹஸ்புல்லாஹ்வும் பெனிதெனியாவில் ஒரே அறையில் இருந்தோம்.

முதலாவது வருட இறுதிப் பகுதியில், புவியியல் பாடத்தில் ஹஸ்புல்லாஹ் அதிக ஆர்வம் காட்டினார். அவரது புவியியல் ஆர்வத்தைத இனங்கண்டு, அவரைப் பிரகாசிக்க வைத்தவர் கலாநிதி ஜோர்ஜ் தம்பையா பிள்ளை ஆவார்.

அந்த அறையிலே சுவரில், நான்கு புவியியல் கோட்பாடுகள் வரையப் பட்டிருந்தன. முதன் மூன்று கோட்பாடுகளும் புகழ்பெற்ற புவியியல் அறிஞர்களின் கோட்பாடுகளாகும். நான்காவது கோட்பாட்டுக்கு தலைப்பாக 'ஹஸ்புல்லாஹ்வின் கோட்பாடு' என்று எழுதப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் ஹஸ்புல்லாஹ் புவியியல் அறிஞராக வருவதற்கான ஓர் அறிகுறியாக அப்படம் காணப்பட்டது.

புவியியல் பாடத்தில் அவர் காட்டிய திறமை, விரிவுரையாளர் என்ற மகுடத்தை, பேராதனைப் பல்கலைக்கழகம் அவரது தலையில் சூடுவதற்கு காரணமாக அமைந்தது.

விரிவுரையாளராக மாறியதும், தனது எதிர்காலம் இப்படித்தான் அமைய வேண்டும் என்று அவர் திட்டமிட்டார். ஆங்கிலத்திலும் புவியியலிலும் மேலும் திறமைகளை வளர்ப்பது அவரது இதய தாகமாக இருந்தது.



ஹஸ்புல்லா என்ற பேராசிரியரை ஈன்றதனால், மன்னார் மாவட்டம். பெருமையும் சிறப்பையும் பெறுகின்றது. என்றாலும் உள்நாட்டுப்போர், எல்லா இன மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. வரலாற்றுக் காலத்திலிருந்து ஆரோக்கியமாக வளர்ந்த இன உறவு சீர்குலைந்ததைக் கண்டு ஹஸ்புல்லாவின் உள்ளம் சிதைந்து போனது.

பேராசிரியர் ஹஸ்புல்லா முஸ்லிம்களுக்காக மட்டுமல்ல, மீள்குடியேறும் உரிமை மறுக்கப்பட்ட தமிழர்களுக்காகவும் குரல்கொடுத்தார். சம்பூர், தென்னைமரவாடி, கஞ்சு குடிச்சாறு, முள்ளிக்குளம் போன்ற இடங்களில் வாழ்ந்த, ஒடுக்கப்பட்ட தமிழர்களுக்காகவும் அவரது குரல் ஓங்கி ஒலித்தது.

பலவந்தமாக வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்காக இவர் பல நூல்களை எழுதியுள்ளார். அந்த நூல்கள் இருட்டில் மறைந்திருந்த பல தகவல்களை வெளிச்சத்துக் கொண்டு வந்தன. மயக்க நிலையில் மூடப்பட்டிருந்த பல கண்களை விழிக்கச் செய்தன. ஹஸ்புல்லா முன்வைத்த வாதங்கள் தீர்க்கதரிசனமற்ற அரசியல் வாதிகளை சுட்டெரித்தன. அரசியல் வாதிகள் இனப்பகைமையை விரிவாக்குவதிலேயே கவனம் செலுத்துகிறார்கள் என்பதை உணர்ந்த பேராசிரியர், எந்த அரசியல் கட்சியிலும் இணைவதற்கு ஆர்வம் காட்டவில்லை. அவரது ஒவ்வொரு மூச்சும், அகதிகளின் மீள் குடியேற்றமாக இருந்தது. அவரது வார்த்தைகளும் பண்புகளும் அனைவரையும் வசீகரிக்க வைத்தன என்றால் மிகையாகாது.

– கலாபூஷணம்
கே.எம்.எம். இக்பால்

# அக்கரைப்பற்று அர் ரஹீமிய்யா மாணவி அஸ்றப் பாத்திமாவுக்கு நான்கு பதக்கங்கள்

அக்கரைப்பற்று அர் ரஹீமிய்யா வித்தியாலய மாணவி அஸ்றப் பாத்திமா மொழித்தினப் போட்டிகளில் 04 பதக்கங்கள் பெற்று வெற்றியீட்டியுள்ளார். இதேபோன்று ஏனைய மாணவ, மாணவிகளும் பங்குகொண்டு தமிழ்த் தினப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளனர்.

இரண்டாம் இடம் எம்.வை.ஹாதியா மர்யம், மூன்றாம் இடம் ஹானியா செய்யனப், குழுப்பாடல் ஜே.அப்தஹா, எம்.ஆர்.சஹ்றா, எச். ஹிபா, என்.எச்.சனாரி, எம்.எஸ். நிமா, எம்.ஆர்.ஹானியா செய்னப், எம்.என்.நுஹா செய்னப், எஸ். சிறீன், எம்.ரி பர்ஹத், எம்.எம். தீனாஹ் ஆகிய மாணவிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆங்கிலமொழி தினப் போட்டியில் முதலாம் இடம் எல்.ஆபிஸ் அஹமட், மூன்றாம் இடம் என். ஆயிஷா அனாத், எம்.ஏ.ஆதில் அஹமட், சமூக விஞ்ஞான தினப் போட்டியில் முதலாம் இடம் ஆய்ஷா அனாத், ஏ.ஜி. ஹஸ்னத் சஹ்ரி, சிங்கள மொழித்தினப் போட்டியில் மூன்றாம் இடம் எல்.எப்.சமா பெற்றுள்ளனர்.





அக்கரைப்பற்று அர் ரஹீமிய்யா வித்தியாலயம் அக்கரைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள தரம் 9 வரையும் கொண்டுள்ள ஒரு பாடசாலையாகும். இப்பாடசாலை அண்மைக்காலத்தில் பாரிய அடைவு மட்டங்களை பெற்று வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்கு இடையில் கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும் நடைபெறும் தமிழ் மொழித்தினம், ஆங்கில மொழித்தினம், சிங்கள மொழித்தினம், சமூக விஞ்ஞான தினம், விளையாட்டு போன்ற போட்டிகளில் இந்தப் பாடசாலையும் தனது பெயரை நிலைநிறுத்திக் கொள்ளத் தவறுவதில்லை. அண்மையில் நடைபெற்று முடிந்த கோட்ட மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் (பாவோதல்) முதலாம் இடத்தையும், ஆங்கில மொழிதினப் போட்டியில் (பார்த்து எழுதுதல்) இரண்டாம் இடத்தையும், சிங்கள மொழி தினப் போட்டியில் முதலாம் இடத்தையும், சமூக விஞ்ஞான தினப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் என்று நான்கு போட்டிகளில் வெற்றி பெற்று 04 பதக்கங்களைப் பெற்று பெருமை சேர்த்துள்ளது.

அதிபர் திருமதி பரீத்தா நிப்றாஸ் அவர்களின் வழிநடத்தலும் ஆசிரியர்களின் வழிகாட்டலும் இவ்வெற்றிக்குக் காரணங்களாகும்.

—எம்.எல்.சரிப்டீன்
(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

# ஐம்பது கோடியைத் தாண்டிய ஜன்தன் கணக்கு; அரசின் செயல்பாட்டை பாராட்டிய பிரதமர் மோடி

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் பதவியேற்ற பிறகு நேரடியாக மக்களுக்கு நலத் திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமான திட்டமான பிரதமரின் ஜன்தன் வங்கிக் கணக்குத் திட்டம் 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28 அன்று தொடங்கப்பட்டது.

இத்திட்டம் சுமார் 9 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இந்நிலையில் 2023 ஓகஸ்ட் 9, நிலைவரப்படி மொத்த ஜன்தன் வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை 50 கோடியைத் தாண்டியுள்ளது. இவற்றில் 56 சதவீத கணக்குகள் பெண்களின் கணக்குகளாகும். 67 சதவீத கணக்குகள் கிராமப்புறங்கள் மற்றும் சிறிய நகரப்பகுதிகளிலும் தொடங்கப்பட்டுள்ளன.

இந்தக் கணக்குகளில் வைப்புத் தொகை ரூ. 2.03 இலட்சம் கோடிக்கு மேல் உள்ளது. இந்தக் கணக்குகளுக்கு சுமார் 34 கோடி ரூபே அட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. ஜன்தன் கணக்குகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் குறித்துப் பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார். ஜன்தன் கணக்கு 50 கோடியைத் தாண்டி உள்ளது. ஜன்தன் கணக்குகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் குறித்துப் பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.




ஜன்தன் கணக்குகளின் எண்ணிக்கை 50 கோடியைத் தாண்டியது. இந்தக் கணக்குகளில் பாதிக்கும் அதிகமானவை நமது மகளிர் சக்திக்கு சொந்தமானவை என்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் மோடி கூறினார்.

"இது ஒரு முக்கியமான முன்னேற்றம். இவற்றில் பாதிக்கும் அதிகமான கணக்குகள் நமது மகளிர் சக்திக்கு சொந்தமானவை என்பது மகிழ்ச்சியளிக்கிறது. கிராமப்புறங்கள் மற்றும் சிறிய நகர்ப்புறங்களில் 67% கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதால், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரப் பயன்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சென்றடையும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

இலங்கை வங்கிக்கு 3000 எண்ணிக்கையிலான இலத்திரனியற் தரவுப் பற்றுகைச் சாதனங்களை (POS) வழங்கி, விநியோகித்து, பொருத்தி, செயற்படுத்தி பராமரித்தல்.

**ஏலவிலை கூறல் இலக்கம் : P/PROC/2023/113**

1. இலங்கை வங்கிக்கு 3000 எண்ணிக்கையிலான இலத்திரனியற் தரவுப் பற்றுகைச் சாதனங்களை (POS) வழங்கி, விநியோகித்து, பொருத்தி, செயற்படுத்தி பராமரிப்பதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட சேவை வழங்குனர்கள் அல்லது அவர்களது அனுமதி பெற்ற உள்நாட்டு முகவர்களிடமிருந்து ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்கள் கோரப்படுகின்றன.
   i) ஏலவிலை கூற ஆர்வமுடையவரின் அண்ணளவான வருடாந்தப் பணப் புரள்வு கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் ரூ.200 மில்லியனாகக் காணப்பட வேண்டும். [(2021/2022, 2020/2021, மற்றும் 2019/2020) அல்லது (2022, 2021 மற்றும் 2020)].
   ii) இலங்கையினுள் கடந்த 05 ஆண்டுகளுக்குள் (01.01.2018ஆம் திகதி முதல் இன்றுவரை) குறைந்தபட்சம் 2500 இலத்திரனியற் தரவுப் பற்றுகைச் சாதனங்களை வழங்கி, பொருத்தி, செயற்படுத்தி இருப்பதோடு தற்பொழுது பராமரித்துக்கொண்டிருக்கவும் வேண்டும். கடந்த 05 ஆண்டுகளுக்குள் (01.01.2018ஆம் திகதி முதல் இன்றுவரை) செயற்படுத்தப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களுக்குமான ஆவண ஆதாரமானது வழங்கப்பட வேண்டும்.
2. ஏலவிலை கூற ஆர்வமுடையவர்கள் ஆங்கில மொழியிலான விலை கூறல் ஆவணத்தொகுதியை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, BOC சதுக்கம், இலங்கை வங்கித் தலைமையகம். 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் திருப்பிச்செலுத்தாக் கட்டணமாக 75,500/- (வரி உள்ளடங்கலாக) (கட்டணம் செலுத்தும் முறை-பணம்) ரூபாயைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் இறுதித் திகதியும் நேரமும் | 2023.09.14 1500 மணி |
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் நேரம் | 0900 மணி முதல் 1500 மணி வரை |
| ஏலவிலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | 2023.09.05 1400 மணி வரை |
| ஏலவிலை கூறல்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும் | 2023.09.15 1000 மணிக்கு ஏலவிலை கூறல்கள் மூடப்பட்டவுடன் திறக்கப்படும் |
| முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் | 2023.09.15ஆம் திகதி 1000 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகம் |

3. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை இலங்கையில் செயற்படும் மற்றொரு வர்த்தக வங்கியிடமிருந்து (இலங்கை வங்கி தவிர்ந்த) ரூபாய் அறுபது இலட்சம் (ரூ.6,000,000/-) பெறுமதிக்குப் பெறப்பட்டதும் 2024.01.12 வரை செல்லுபடியானதுமான பிணை உத்தரவாதத்துடன் (நிபந்தனையற்ற, மாற்ற முடியாத, தேவையின்போதான) இணைத்து அனுப்ப வேண்டும். வங்கிப் பிணைக்குப் பதிலாக பண வைப்பு (மீளப் பெறக்கூடிய) / கொடுப்பனவுக் கட்டளைகள் / வங்கி வரைவு போன்றன ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்படும் காசோலையானது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. PCA 3 படிவமானது ஏலவிலை கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும், உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786

1975 BOC www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சிறிய குளங்களின் புனரமைப்புக்கு ரூ. 30,000 மில்லியன் ஒதுக்கீடு

## அமைச்சர் அமரவீரவின் வேண்டுகோளிற்கு ஜனாதிபதி நடவடிக்கை

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி நிலை காரணமாக மாவட்டத்திலுள்ள 37 சிறிய குளங்களை புனரமைப்பு செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 30,000 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். அமைச்சர் மஹிந்த அமரவீர ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளின்பேரிலேயே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். மேற்படி மாவட்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வரட்சி நிலையினால் பெரும்பாலான குளங்கள் வற்றிப்போயுள்ளன. இதனை சாதகமாக பயன்படுத்தி புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தெரிவு செய்யப்பட்டுள்ள இந்தக் குளங்கள் கடந்த பல வருடகாலமாக எவ்வித புனரமைப்புகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் கிராமியப் பிரதேசங்களில் உள்ள இந்த குளங்களில் அதிகமானவை பழுதடைந்துள்ளது. இதனால் மழைக் காலங்களிலும் விவசாயத்திற்கும் கிராமிய மக்களின் பயன்பாட்டிற்கும் போதியளவு நீரை சேமித்துக் கொள்ள முடியாமையினால் மழைநீர் வீணாகின்றது. வரட்சியான காலநிலையினை சாதகமாகப் பயன்படுத்தி கிராமங்களிலுள்ள சிறியகுளங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 37 சிறிய குளங்கள் புனரமைப்பு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மாத்தளை மாவட்ட உதைப்பந்தாட்ட போட்டி; அஜ்மீர் தேசிய பாடசாலை சம்பியன்



மாத்தளை மாவட்டத்தின் ஒன்பது பாடசாலைகளைச் சேர்ந்த தலைசிறந்த உதைப்பந்தாட்ட அணிகள் மோதிக் கொண்ட 16 வயதிற்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான மாத்தளை மாவட்ட உதைப்பந்தாட்ட சுற்று தொடரின் வெற்றிக் கிண்ணத்தை அஜ்மீர் தேசிய பாடசாலை பெற்றுக் கொண்டது. இந்த அணி எந்த ஒரு போட்டியிலும் தோல்வி காணாது வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. அஜ்மீர் தேசிய பாடசாலை முதல் இரு சுற்றுக்களிலும் கிரீன்வுட் கல்லூரி மற்றும் வீர மோகன் கல்லூரி ஆகிய இரு அணிகளுக்கும் எதிராக முறையே (3:1) , (5:0) என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி ஈட்டி அரை இறுதிப் போட்டியில் மாத்தளை விஜய கல்லூரி அணியை ம (5:0) என்ற அடிப்படையில் வெற்றி ஈட்டியது.

இறுதிப் போட்டியில் மாத்தளை ஸாஹிரா கல்லூரியுடனான போட்டியில் அஜ்மீர் அணி வீரர் ஆதில் பெற்றெடுத்த ஒரு கோலினூடாக ஒன்றுக்கு பூச்சியம் (1:0) என்ற அடிப்படையில் மாத்தளை ஸாஹிரா கல்லூரியை வெற்றி கண்டு கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. பாடசாலை அதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களான ஆசிரியர் ஹனபி மற்றும் ஆசிரியர் இல்ஹாம் ஆகியோருக்கும், பழைய மாணவர் சங்கத்தின் விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் நீயாட் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் சர்வதேச கிளையினர், பாடசாலை விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும் பழைய மாணவர் சங்கம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.




வெலிகம அறபா தேசிய பாடசாலை பழைய மாணவர் குழுக்களில் ஒன்றான 'அறபா 91' குழுவினால் பாடசாலை கல்விச் செயற்பாட்டுக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளதோடு அதற்கான காசோலையை குழுவின் தலைவர் எம்.இஸட்.எம். அர்பத், பொருளாளர் எம்.எச்.எம்.நளீம் மற்றும் உறுப்பினர் ரியாஸ் ஆகியோர் பாடசாலை அதிபர் முதஹ்ஹரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.


## பெறுகை அறிவித்தல்

### கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை

### D6H வகை செயின் டோஸர் இயந்திரத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்

கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபையின் பெறுகைக் குழுவினால் பிரதேச சபைக்குச் சொந்தமான குப்பைக் களஞ்சியத்தில் (Dumpsite) வேலைகளுக்காக D6H வகை எலிவேட்டர் டிரக் உடன் செயின் டோஸர் இயந்திரமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி | - 2023.09.15ம் திகதி 15.00 மணிக்கு |
| கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | - 2023.09.18 மு.ப. 10.00 இற்கு |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத தகைமை கொண்ட கேள்விதாரர்களுக்கு காசாக மீளளிக்கப்படாத ரூ. 5000.00 கட்டணத்தைச் செலுத்தி மாதிரிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய முழுமையான கேள்வி கோரல் பத்திரங்களை செயலாளர், கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை, கொத்தட்டுவ புதிய நகரம் என்ற முகவரிக்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து 2023.08.25 முதல் 2023.09.15 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் 02 பிரதிகளுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு இரு கடித உறைகளில் இட்டு அவ்உறைகள் இரண்டையும் மீண்டும் தனி உறையில் இட்டு அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'D6H வகை செயின் டோஸர் இயந்திரமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்' என்ற பெயர் குறிப்பிட்டு 2023.09.18 மு.ப. 10.00 இற்கு முன்பு சபையின் தலைமையகத்தில் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்யலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

இவ்அறிவித்தலில் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழி நடைகளுக்கிடையில் ஏதேனும் ஐயப்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி நடையை அமுல்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**எச்.ஏ.ஏ.எஸ். சிரிவர்தன**
**விடய செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**செயலாளர்**
**கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை**
**தொ.பே. இலக்கம் - 0112410288**


### தீவிரவாத தாக்குதல்;

# உண்மை தன்மையை அரசாங்கம் உடனடியாக வெளியிட வேண்டும்



தீவிரவாத தாக்குதல் தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் உண்மை தன்மையை அரசாங்கம் வெளியிட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் (24) தெரிவித்தார். அண்மைய நாட்களில் சர்வதேச மற்றும் தேசிய ஊடகங்களின் புலனாய்வுத் துறையை மேற்கோள்காட்டி, இந்நாட்டில்பல்வேறு இனங்கள்மற்றும் மதங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டு வெடிப்புச் சம்பவ சூழல் ஏற்படக்கூடும் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன என்றும், இது தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயம் என்பதனால் அனைத்து கட்சிகளையும் தரப்புகளையும் உடனடியாக அழைத்து இது உண்மையா பொய்யா என்பதை தெளிவுபடுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் நேற்று (24) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஈஸ்டர் தாக்குதலுடன் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சம் காரணமாக இந்த உணர்வுபூர்வமான விடயம் தொடர்பில் அரசாங்கமும் பாராளுமன்றமும் கவனம் செலுத்துவதுடன் இது தொடர்பில் அனைத்து கட்சிகளுக்கும் பொறுப்பான தரப்பினருக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




அரச வைத்தியசாலைகளில் துணைமருத்துவ சேவையில் உள்ளோர் நேற்று (24) சில கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவியரீதியில் ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனடியாக ஹம்பாந்தோட்டை மாவட்ட பொதுவைத்தியசாலையிலும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தோர் மருந்துகளை பெறுவதற்காக ஹம்பாந்தோட்டை ஒசுசலவிற்கு முன்னால் நீண்ட கியூவரிசையில் காத்திருப்பதை படத்தில் காணலாம்.
படம்;. ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்




# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 ஒகஸ்ட் 29ஆம் திகதி ஏல விற்பனையினூடாக ரூ. 150,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123L014 | LKA18224C018 | LKA36424H300 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 70,000 | 40,000 | 40,000 | 150,000 |

| | | |
|---|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : | 2023 ஒகஸ்ட் 29 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2023 செப்டெம்பர் 01 |
| வழங்கப்படும் திகதி | : | 2023 செப்டெம்பர் 01 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2023 ஒகஸ்ட் 29, செவ்வாய்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## ரூ.200,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

11.50% 2026 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 120,000 மில்லியனையும், 09.00% 2028 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 80,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2023 ஓகத்து 28ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 11.50% 2026'A' | 09.00% 2028'A' |
|---|---|---|
| ISIN* | LKB01026H014 | LKB01628G019 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 120,000 மில்லியன் | ரூ. 80,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.50% ஆண்டொன்றிற்கு | 09.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2016 ஓகத்து 01 | 2012 யூலை 01 |
| **முதிர்வுத் திகதி** | **2026 ஓகத்து 01** | **2028 யூலை 01** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 பெப்ரவரி & 01 ஓகத்து | 01 சனவரி & 01 யூலை |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ.100.00 இற்கு ரூ.0.9688 | ரூ.100 இற்கு ரூ.1.5163 |
| ஏல விற்பனைத் திகதி | 2023 ஓகத்து 28, திங்கட்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2023 ஓகத்து 28, திங்கட்கிழமை, மு.ப.11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2023 செப்டெம்பர் 01** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடட் | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் / பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

லங்கா சதொச — LANKA SATHOSA
வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

## லங்கா சதொச லிமிடட்டுக்கு கணினி உபகரணங்களை வழங்கல்

விலைமனு இலக்கம்: LSL/PRO/05/45/Com.Equipment–Buffer(3)/2023
தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல்

**லங்கா சதொச லிமிடட்டுக்கு** கணினி உபகரணங்களை வழங்குவதற்கு விரும்பும் உள்நாட்டு வழங்குநர்கள், உள்நாட்டு முகவர்கள் மற்றும் அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களிடம் இருந்து லங்கா சதொச லிமிடட், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள்: விலைமனு ஆவணத்தில் கூறப்பட்டவாறு.

தேவை:

| உருப்படி விபரம் | அளவு |
|---|---|
| POS Machine (Full Set) | 34 |
| POS Machines | 07 |
| Wifi Access Point | 10 |
| Wifi Adapters | 20 |
| RJ 45 Keystone (CAT 06) | 50 |
| RJ 45 Faceplate (Single) | 50 |

விலைமனுக்களை சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை **ரூபா 3,000.00 (மீளளிக்கப்படாதது)** கேள்விமனு கட்டணத்தை செலுத்தி **2023 ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் மாதம் 18ஆம்** திகதி வரையான காலத்தில் கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி)**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023 செப்டெம்பர் மாதம் 08ஆம் திகதி மு.ப. 11.00க்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள், **2023 செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி பி.ப. 1.00க்கு அல்லது அதற்கு முன்னர்,** மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில **"LSL/PRO/05/45/Com.Equipment–Buffer(3)/2023"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட கூறுவிலையிடப்பட்ட பெறுமதியில் இருந்து நிபந்தனையற்ற **1% விலைமனு பிணை (மீளளிக்கப்படும்)** ஒன்றை கொண்டதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2023 செப்டெம்பர் 18 ஆம் திகதி பி.ப. 1.00க்கு** நிறைவடைவதோடு அதன் பின்னர் விலைமனுதாரர்கள் முன்னிலையில் அவை உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரிகளை அழையுங்கள்.
நிர்வாக விடயங்களுக்காக (திலினி) - 070 1560428
தொழில்நுட்ப விடயங்களுக்காக (அனுஷ்க) - 070 3611459

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழு தலைவர் வசமானதாகும்.**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

Magazine Issued with Sunday Observer
THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெலிசறை மற்றும் மிரிஹானை தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்துள்ளவர்களுக்கு உணவு வழங்குதல்

**ஒப்பந்த இலக்கம் : DIE/PRO/03/2022/23**

01. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெலிசறை மற்றும் மிரிஹானை தடுப்பு முகாம்களில் தடுத்து வைப்பவர்களுக்கு உணவு வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

03. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு, இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுகுறுபாயா", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து 2023.08.25 ஆம் திகதி முதல் 2023.09.14 ஆம் திகதி வரை எந்தவொரு கடமை நாளிலும் மு.ப. 9.00 மணி - பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், விலைகூறல் ஆவணங்களை அதே முகவரியில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

**தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.: 011-2101559**

04. மீளளிக்கப்படாத ரூபா ஐயாயிரத்து ஐந்நூறு (ரூ. 5,500/-) கட்டணத்தைச் செலுத்தி, எழுத்துமூல விண்ணப்பமொன்றை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுகுறுபாயா", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் 2023.08.25 ஆம் திகதி முதல் 2023.09.14 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை, அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். காசாக கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்

05. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை, "மூலப்பிரதி", "இணைப்பிரதி" என இரு பிரதிகளில் தயாரித்து, 2023.09.15 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் 5 ஆம் மாடி, "B" பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து ஒப்படைக்கவோ வேண்டும். விலைமனுக் கோரல் முடிவடைந்த உடனே மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வருகைத்தருவதற்கு விருப்பம் தெரிவித்த விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்

06. விலைமனுதாரர்களினால் கையளிக்கப்படுகின்ற விலைமனுவானது, விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

07. எல்லா விலைமனுக்களும், விலைமனுக்கோரல் ஆவணத்தில் பந்தி 3.3 இல் காட்டப்பட்டுள்ளவாறு, விலைமனு பிணைமுறியொன்றுடன், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பெயரில் (முகவரிக்கு) அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், விலைமனு பிணைமுறியானது ரூபா நான்கு இலட்சம் (ரூ.400,000/-) பெறுமதியைக் கொண்டதும், 2023.12.28 ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியொன்றினால் விநியோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

08. விலைமனு முன் சந்திப்பொன்று 2023.09.04 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்லை, "சுஹுறுபாயா", 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

**ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்பிட்டிய**
**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,**
**"சுஹுறுபாயா", ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

கிரிக்கெட் ரசிகர்களுக்காக உங்களது வீட்டை பதிவு செய்வதன் மூலம் மேலதிக வருவாயை ஈட்டுங்கள்

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகள் விரைவில் கண்டி மாவட்டத்திற்கு வரவிருப்பதோடு அதனால் தங்குமிடங்களுக்கு அதிக கேள்வி ஒன்று உள்ளது. உங்களது வீடு, தொடர்மாடி குடியிருப்பு அல்லது வேறு வகையான தங்குமிடங்களில் மேலதிக அறை ஒன்று இருந்தால், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் (SLTDA) பதிவு செய்வதன் மூலம் உங்களால் மேலதிக வருவாயை ஈட்ட முடியும்.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு தம்முடைய மேலதிக அறைகளை வாடகைக்கு விடுவதற்கு விரும்பும் வீட்டு உரிமையாளர்களுக்கான திட்டத்திற்கு தற்காலிக பதிவு ஒன்றை வழங்க SLTDA முன்வந்துள்ளது. பதிவு நடைமுறை இலகுவானது மற்றும் விரைவானது என்பதோடு உங்களால் விரைவாக பணம் ஈட்டுவதை ஆரம்பிக்க முடியும்.

உங்களது வீட்டை பதிவு செய்வதற்கு, SLTDA வுக்கு பின்வரும் விபரத்தை நீங்கள் வழங்க வேண்டும்:

- உங்களது பெயர் மற்றும் தொடர்பு விபரம்
- வாடகைக்கு உள்ள அறைகளின் எண்ணிக்கை
- உங்களது வீடு/ தங்குமிடத்தின் முகவரி
- ஓர் இரவுக்கு மாத்திரமான அடிப்படையில் கட்டணம்

உங்களது பதிவு அங்கீகரிக்கப்பட்டதும், SLTDAயின் இணையதளத்தில் உங்களின் தங்குமிடப் பட்டியலை ஆரம்பிக்க முடியும். கிரிக்கெட் ரசிகர்களுக்கு உங்களின் பட்டியலை தேடுவதற்கு முடியும் என்பதோடு உங்களது அறையை நேரடியாக பதிவு செய்ய முடியும்.

மேலதிக வருவாயை ஈட்ட இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.
எனவே, உங்களிடம் மேலதிக அறை ஒன்று இருந்தால்,
அதனை SLTDA உடன் இன்றே பதிவு செய்யுங்கள்!



Hotline 1912
web: www.sltda.gov.lk
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

# ஆசிய கிண்ணத்திற்கான இலங்கை அணியின் பயிற்சி நேற்று ஆரம்பம்

ஆசிய கிண்ணப் போட்டிக்கான இலங்கை அணி தயாராகும் பயிற்சி முகாம் நேற்று (24) கொழும்பு, எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமானது.

இதன்போது இலங்கை அணி இன்று (25) பயிற்சிப் போட்டி ஒன்றில் விளையாடவுள்ளதோடு தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமை (27) கண்டிக்கு பயணிக்கவுள்ளது.






அண்மையில் முடிவுற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரின் போது தோள்பட்டை காயத்துக்கு உள்ளான வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீர ஆசிய கிண்ணத்தில் பங்கேற்பதில் சந்தேகம் நிலவுகிறது. அவருக்கு பதில் கசுன் ராஜித்த அணிக்கு அழைக்கப்படட வாய்ப்பு உள்ளது.

அதேபோன்று காயத்துக்கு உள்ளாகி இருக்கும் சுழல்பந்து சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க ஆசிய கிண்ணத் தொடரின் ஒரு சில போட்டிகளில் விளையாடுவதில் சந்தேகம் நிலவுகிறது. அணியில் இடம்பெறுவதற்கு உடல் தகுதியை நிரூபிக்க வேண்டியிருக்கும் ஹசரங்க தொடரின் கடைசி சில போட்டிகளில் விளையாட வாய்ப்பு உள்ளது.

ஆசிய கிண்ண தொடரின் முதல் போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் 30 ஆம் திகதி பாகிஸ்தானில் பாகிஸ்தான் மற்றும் நேபாள அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் இலங்கையில் ஒகஸ்ட் 31 ஆம் திகதி போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. கண்டி, பல்லேகலவில் நடைபெறும் முதல் போட்டியில் இலங்கை அணி பங்களாதேஷை எதிர்த்தாடவுள்ளது.

ஆசிய கிண்ணத்திற்கான இலங்கை அணி தேர்வு செய்யப்பட்ட நிலையில் இன்னும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஒப்புதல் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணம்:

# இலங்கைக்கு இரு பயிற்சி போட்டிகள்



உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னதாக இலங்கை அணி பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுடன் பயிற்சிப் போட்டிகளில் ஆடவுள்ளது.

இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக போட்டியில் பங்கேற்கும் 10 அணிகளும் விளையாடும் பயிற்சி போட்டிகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி செப்டெம்பர் 29 ஆம் திகதி குவஹாத்தியில் நடைபெறும் பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி பங்களாதேஷ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

தொடர்ந்து இலங்கை அணி இரண்டாவது பயிற்சிப் போட்டியில் ஒக்டோபர் 3 ஆம் திகதி ஆப்கானிஸ்தான் அணியை சந்திக்கும். இந்தப் போட்டியும் குவஹாத்தியில் நடைபெறவுள்ளது.

இலங்கை நேரப்படி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பயிற்சிப் போட்டிகளில் அணிகளுக்கு தமது குழாத்தில் இருக்கும் 15 வீரர்களையும் களமிறக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

இதேவேளை, தொடரினை நடத்தும் இந்தியா பயிற்சி ஆட்டங்களில் இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுடன் மோதவிருப்பதோடு, ஐந்து தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தமது பயிற்சி ஆட்டங்களில் பாகிஸ்தான் மற்றும் நெதர்லாந்து அணிகளுடன் மோதுகின்றது.

உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# டயலொக் பாடசாலை ரக்பி தொடரின் நொக் அவுட் போட்டி இன்று ஆரம்பம்

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் தலைவர் கிண்ணம், பிரதமர் கிண்ணம் மற்றும் ஜனாதிபதி கிண்ணத்திற்காக நடைபெறும் பாடசாலைகளுக்கு இடையிலான டயலொக் ரக்பி நொக் அவுட் போட்டிகள் இன்று (25) ஆரம்பமாகவுள்ளன. இந்தத் தொடரின் இறுதிப் போட்டி தவிர்த்து எஞ்சிய அனைத்து போட்டிகளும் கொழும்பு, ஹவலொக் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கொழும்பு, இசிபத்தன கல்லூரிக்கு எதிரான அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்காக கொழும்பு சாஹிரா கல்லூரி மற்றும் டி.எஸ். சேனநாயக்க கல்லூரி அணிகள் இன்று முதலாவது காலிறுதியில் மோதவுள்ளன.

பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்குட்பட்ட ஏ பிரிவு லீக் சம்பியனாக மகுடம் சூடிய புனித பீட்டர்ஸ் கல்லூரி, ஜனாதிபதி கிண்ணத்திற்கான நொக் அவுட் தொடரை திரித்துவ கல்லூரிக்கு எதிரான காலிறுதியுடன் ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

நாளை நடைபெறும் இரண்டாவது காலிறுதிப் போட்டியில் புனித ஜோசப் கல்லூரி மற்றும் புனித அந்தோனியார் கல்லூரிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இதன்படி ஜனாதிபதி கிண்ணத்திற்கான அரையிறுதிப் போட்டிகள் செப்டெம்பர் 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் ஹவலொக் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டி செப்டெம்பர் 10 ஆம் திகதி கொழும்பு, றோயல் கல்லூரி விளையாட்டு வளாகத்தில் நடைபெறும்.

2023 டயலொக் பாடசாலை நொக் அவுட் ரக்பி தொடரின் பிரீமியர் கிண்ணத்திற்கான காலிறுதிப் போட்டிகளில் பிலியந்தலை மத்திய கல்லூரி, லும்பினி கல்லூரி, மஹானாம கல்லூரி, மலியதேவ கல்லூரி, ஸ்ரீ சுமங்கல கல்லூரி மற்றும் ஆனந்த கல்லூரி அணிகள் விளையாடவுள்ளன.

2023 டயலொக் பாடசாலை நொக் அவுட் ரக்பி தொடரின் தலைவர் கிண்ணத்திற்கான காலிறுதிப் போட்டிகளில் ரிச்மண்ட் கல்லூரி, லலித் அத்துலத்முதலி கல்லூரி, புனித ஜோன்ஸ் கல்லூரி, நாலந்த கல்லூரி, ராகுல கல்லூரி, ஸ்ரீ பியரத்ன கல்லூரி அணிகள் விளையாடவுள்ளன.

# அணு நீரை கடலில் விடுவித்தது ஜப்பான்

## சீனா பதில் நடவடிக்கை



புக்குஷிமா அணு உலையில் இருந்து கதிரியக்க கழிவு நீரை பசிபிக் பெருங் கடலில் கொட்டும் நடவடிக்கையை ஜப்பான் நேற்று (24) ஆரம்பித்ததை அடுத்து பிராந்தியத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்திருப்பதோடு சீனா கடும் கண்டனத்தையும் எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

ஜப்பானில் இருந்து அதிக கடல் உணவை வாங்கும் சீனா, அவ்வாறான இறக்குமதிகள் நிறுத்தப்படும் என்று நேற்று அறிவித்தது.

எனினும் நீர் பாதுகாப்பானது என்றும் அது தொடர்பில் பல விஞ்ஞானிகளும் இணங்கி இருப்பதாகவும் ஜப்பான் தெரிவித்துள்ளது. ஜப்பானின் இந்தத் திட்டத்தை ஐ.நாவின் அணுசக்தி கண்காணிப்பகமும் ஒப்புக்கொண்டுள்ளது.

எனினும் இது தொடர்பில் மேலும் ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்றும் இந்த செயல் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இதனை விமர்சிப்பவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த அணு உலையில் சேமிக்கப்பட்டிருக்கும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான நீர் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் கடலில் கலக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் ஆரம்பத்தில் இருந்து கடுமையாக எதிர்ப்பை வெளியிட்டு வந்த சீனா "ஜப்பானிய அரசாங்கம் மிகவும் சுயநலமாகவும் பொறுப்பில்லாமலும் பலவந்தமாக நீரை வெளியேற்றி, மனிதகுலத்தின் நலனுக்குமேல் சுயநலனுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது" என்று விமர்சித்துள்ளது.

ஜப்பானிய மீன்பிடிக் குழுக்களும் புக்குஷிமா நீர் கடலில் கலக்கப்படுவதை நீண்ட காலமாக எதிர்த்து வருகின்றன. முக்கிய சந்தைகள் ஏற்றுமதிக்குத் தடை விதித்தால் விற்பனை குறைந்துவிடும் என அவை அஞ்சுகின்றன.

புக்குஷிமா அணு உலை 2011 மார்ச் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது சுனாமியால் அழிக்கப்பட்டது.

## சர்வதேச செய்திகள்

# ரஷ்ய துணை இராணுவப் படை தலைவர் விமான விபத்தில் பலி

ரஷ்யாவின் வாக்னர் துணை இராணுவப் படைத்தலைவர் யெவ்கெனி பிரிகோஷின் விமான விபத்தில் உயிரிழந்ததாக அந்நாட்டு சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மொஸ்கோவிலிருந்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்குச் சென்றுகொண்டிருந்த விமானம் விழுந்து நொறுங்கியது. பிரிகோஷின் உட்பட அதில் 10 பேர் இருந்தனர் என்றும் யாரும் உயிர்பிழைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அதிகாரபூர்வ விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரிகோஷினுக்குச் சொந்தமான அந்தத் தனியார் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு ஆதாரம் உள்ளதாக வாக்னர் துணை இராணுவப் படையுடன் தொடர்புடைய கிரேசோன் குழு தெரிவித்தது.

ரஷ்யாவின் துரோகிகள் பிரிகோஷினைக் கொன்றுவிட்டதாக அது கூறியது.





ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு நெருக்கமாக இருந்த பிரிகோஷினின் துணை இராணுவப் படை, உக்ரைனில் பல வட்டாரங்களைக் கைப்பற்ற உதவியது. ஆனால் பின்னர் புட்டினுக்கும் பிரிகோஷினுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் பிரிகோஷின் ரஷ்யப் படைகளுக்கு எதிரான கிளர்ச்சியை வழிநடத்தினார்.

அவர் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டைச் சுமத்தப்போவதாகவும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அப்போது மிரட்டல் விடுத்திருந்தார்.

அதன் பின்னர் பெலாரஸுக்குச் சென்றிருந்த பிரிகோஷின் அந்நாட்டு ஜனாதிபதியின் உதவியோடு ரஷ்யாவுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டதாகக் கூறப்பட்டது.

அதன் கீழ் பிரிகோஷின் பெலாரஸில் வசிக்க ஒப்புக்கொண்டார். அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் மீட்டுக்கொள்ளப்பட்டன. எனினும் அவர் மீண்டும் ரஷ்யாவிற்குத் திரும்பினார்.

புட்டினால் பிரிகோஷினின் உயிருக்கு ஆபத்து ஏதும் இல்லை என்று பெலாரஸ் ஜனாதிபதி அப்போது தெரிவித்திருந்தார்.

# வடகொரிய உளவு செய்மதி தோல்வி



உளவுப் பணிகளுக்கான செய்மதி ஒன்றை அதன் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தும் 2ஆவது முயற்சி தோல்வியடைந்ததாக வட கொரியா தெரிவித்துள்ளது.

'அது ஒரு பெரிய பிரச்சினை இல்லை' என்றும் 'ஒக்டோபர் மாதம் மீண்டும் அதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும்' என்றும் பியோங்யாங் குறிப்பிட்டது.

கடந்த மே மாதம் வட கொரியா மேற்கொண்ட இத்தகைய முயற்சியும் தோல்வியில் முடிந்தது. செய்மதியை ஏந்திச் சென்ற ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்ட சற்று நேரத்தில் பெருங்கடலில் விழுந்தது.

உளவு செய்மதியை ஏவும் செயல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்களுக்கு எதிரானது எனக்கூறித் தென் கொரியா கண்டித்துள்ளது.

நாட்டை நோக்கி வரும் தாக்குதல்களை கண்காணிக்கவும் நாட்டின் திட்டங்களை மேலும் துல்லியமாக செயற்படுத்துவதற்கும் இவ்வாறான உளவு செய்மதிகள் அவசியம் என்று வட கொரியா கருதுகிறது. இது தொடர்பில் அந்நாட்டு தலைவர் கிம் ஜொங் உன் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்.

# பிரிக்ஸ் அமைப்பில் 6 நாடுகள் இணைப்பு




வளரும் நாடுகளின் அமைப்பான 'பிரிக்ஸ்' குழுவில் அடுத்த ஆண்டு முதல் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஈரான் உள்ளிட்ட ஆறு நாடுகள் புதிதாக இணைக்கப்படும் என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா நேற்று (24) தெரிவித்தார். 'பிரிக்ஸ்' உச்சி மாநாட்டில் பேசிய தென்னாபிரிக்க ஜனாதிபதி, "அர்ஜென்டீனா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளை பிரிக்ஸ் அமைப்பின் முழுநேர உறுப்பினர்களாக சேர்க்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்த முடிவு 2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் அமுலுக்கு வரும்" என்று தெரிவித்துள்ளார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய 5 நாடுகளின் கூட்டமைப்பாக 2009இல் பிரிக்ஸ் உருவானது.

கடந்த ஒகஸ்ட் 22 ஆம் திகதி ஆரம்பமான இதன் 15ஆவது உச்சிமாநாடு நேற்று (24) நிறைவடைந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒகஸ்ட் மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுகாதார அமைச்சு**

**வடமத்திய மாகாண சபை**

**பெறுகை இல. NCP/SS/F05/04**

## குறைபாடு சார்ந்த உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள குறைபாடு சார்ந்த உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அனுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, 3ஆம் மாடி, வடமத்திய மாகாண சபை கட்டிடத்தொகுதி, சுகாதார அமைச்சு அலுவலகத்தின் சார்பில் மாகாண அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகின்றார்.

| பொதி இல. | உருப்படி இலக்கம் | விபரங்கள் | எண்ணிக்கை (அலகு) | மீளளிக்கப் படாத கட்டணம் இல. ரூ. | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) 2024-01-12ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் |
|---|---|---|---|---|---|
| 1 | NCP/SS/F05/05/01-2023 | சக்கர நாற்காலிகள் | 250 | 4,000.00 | 190,000.00 |
| | NCP/SS/F05/05/02-2023 | கொமட் சக்கர நாற்காலிகள் | 50 | | 54,000.00 |
| | NCP/SS/F05/05/03-2023 | நடக்கும் சட்டகம்/ அலுமினியம் | 50 | | 17,000.00 |
| | NCP/SS/F05/05/04-2023 | முழங்கை தாங்கிகள் | 100 | | 11,000.00 |
| | NCP/SS/F05/05/05-2023 | நீர் மெத்தைகள் | 50 | | 17,500.00 |
| 2 | NCP/SS/F05/05/06-2023 | செவிப்புல உபகரணம் | 400 | 3,500.00 | 266,000.00 |
| 3 | NCP/SS/F05/05/07-2023 | Foldable Intra Ocular lenses (IOL) | 415 | 2,500.00 | 95,500.00 |

**அட்டவணை - 1**

- விநியோக அமைவிடம்: மாகாண சமூக சேவைகள் திணைக்களம், இல. 372, தர்மபால மாவத்தை, அனுராதபுரம்.
- ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நாள் முதல் அறுபது (60) நாட்களுக்குள் வழங்கல், விநியோகங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையில் இடம்பெறும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அனுராதபுரம், இல. 372, தர்மபால மாவத்தை, சமூக சேவைகள் திணைக்களம், நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0252225185 தொலைநகல்: 0252225316) மற்றும் 2023-09-14ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை) மேற்கூறப்பட்ட இதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. **தகைமை தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன:**

   4.1) வியாபாரப் பதிவுச் சான்றிதழ்

   4.2) விலைக்கோரல் பொருட்களை வழங்குவதில் குறைந்தபட்சம் 3 வருட கடந்தகால அனுபவம் (தயவு செய்து கொள்வனவுக் கட்டளை மற்றும் நிறைவுறுத்தல் சான்றிதழ்களை இணைக்கவும்)

   4.3) கொள்வனவாளர் ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொழில்நுட்ப விபரக்குறிப்புகளில் கோரப்பட்டுள்ள அனைத்து பொருட்களுக்கும் விரிவான உத்தரவாதம்.

   4.4) எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு துணைப்பாகங்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன என விலைமனுதாரர் உறுதிசெய்தல் வேண்டும்.

   இந்தத் தகுதி தேவைப்பாடுகள் விலைக்கோரல் ஆவணத்தின் IIIஆம் பிரிவு பிந்திய தகுதித் தேவைப்பாடுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-08-25ஆம் திகதி முதல் 2023-09-14ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் 1ஆம் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கப்படாத கட்டணத்தை அனுராதபுரம், சமூக சேவைகள் திணைக்களம், நிர்வாக அதிகாரிக்குச் செலுத்துவதன் பேரில் (3ஆம் பந்தி) முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளல் வேண்டும்.

   விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 1ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் 2023-09-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட நகல் பிரதியுடனான விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என வெவ்வேறான கடித உறைகளில் உள்ளிட்டு, ஒவ்வொரு உறையின் இடதுபக்க மேல் மூலையிலும் இதேபோல் குறிப்பிட்டு மற்றும் இரண்டு உறைகளையும் வேறொரு பெரிய உறையில் உள்ளிட்டு முத்திரைக் குறி பொறித்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கும் பொருள் மற்றும் பெறுகையின் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு சுகாதார அமைச்சு அலுவலகம், 3ஆம் தளம், ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரிக்கு 2023-09-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

7. விலைமனுக்கள் ஒப்படைக்கப்படும் இறுதி நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் மற்றும் சகல விலைமனுக்களுடனும் 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி உத்தரவாதமொன்று விலைக்கோரல் பிணை முறியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**கே.எம்.எஸ்.டி. ஜயசேக்கர,**
**தலைவர்,**
**மாகாண அமைச்சு பெறுகைக் குழு,**
**சுகாதார அமைச்சு,**
**வடமத்திய மாகாண சபைக் கட்டிடத்தொகுதி,**
**3ஆம் தளம்,**
**ஹரிஸ்சந்திர மாவத்தை,**
**அனுராதபுரம்.**

2023-08-24ஆம் திகதி.

**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

Manager front office

**+94 112429341**

**Hotline 1949**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

# விலைமனு அழைத்தல்

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவரால் கீழே குறிப்பிடப்படும் வேலைக்கு முன் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியல் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் இன்றி) (ரூ.மில்லியன்) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப் படாத கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/ 02/20/ B/11 /2023 | பூந்தலதேசிய பூங்காவின் சுற்றுலா நிலையத்தின் பழுதுபார்த்தல் | 7.6 | C6/C7/C8 ) (கட்டிடங்கள்) | 3000.00 | 115000/- 2024.01.02 வரை செல்லுபடியாதல் வேண்டும் |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறைமையின் கீழ் இவ் விலைமனு கோரப்படும்.
3. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2023.09.18 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை பத்தரமுல்ல, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இதற்கான விலைமனுப் படிவங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
4. விலைமனுப்படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை 2023.09.18 வரை, 'வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வன சீவராசிகள் பாதுகப்புத் திணைக்களம்' என்ற பெயரில், எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, மற்றும் CIDA பதிவுப்புத்தகத்தின் மூலப்பிரதியை மேற்காணப்படும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
5. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த திட்ட வளாகத்தை பரீட்சித்துப் பார்க்குமாறு கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. அரச அங்கீகாரம் பெற்றுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து அல்லது, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு, காசாகச் செலுத்தி பற்றுச்சீட்டை இணைத்தல வேண்டும். விலைமனுப் பிணையம் இணைக்கப்பட்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என தனித்தனி தபாலுறைகளில் சேர்த்து முத்திரையிட்டு, மீண்டும் ஒருறையில் உள்ளிட்டு முத்திரையிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு, 2023.09.19 அன்று பி.ப. 2.30 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது இத்திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாமென்பதுடன், தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத்திறத்தல் அன்றைய தினம் 2023.09.19 பி.ப. 2.00 இற்கு மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் நீங்கள் அல்லது உங்கள் அதிகாரம் பெற்ற முகவரொருவர் சமுகமளித்திருக்கலாம்.
8. விலைமனுத் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 தொலைபேசியூடாக திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி)ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம். விலைமனுத் தொடர்பான தீர்மானமெடுக்கும் உரிமை திணைக்களப் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன் இவ் அறிவித்தலில் அல்லது விலைமனு மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை தொடர்பான எவ்விடயமும் தொடர்பாக தீர்மானிக்கும் உரிமை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.
9. விலைமனுக்களைத் தயாரிக்கையில் ஏற்படும் எந்தவிதமான செலவினங்கள் தொடர்பாகவும், திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்பேற்கமாட்டார்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.**

## சுற்றாடல் அமைச்சு

# "இலத்திரனியல் கழிவு (E-Waste) முகாமைத்துவ தேசிய கொள்கை"

## வரைவுக்கான பொதுமக்கள் கருத்தை பெறுதல்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடு ஒன்று என்ற வகையில் இலங்கை இலத்திரனியல் கழிவினால் அதிகரித்து வரும் சவால்களை சந்தித்து வருவதோடு அது சார்ந்த பங்குதாரர்களுடன் கூட்டிணைந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த முறை ஒன்றில் நாட்டில் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்த வேண்டி உள்ளது. அண்மைய ஆண்டுகளின் புள்ளிவிபரங்களுக்கு அமைய, மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்களின் பயன்பாடு வேகமாக அதிகரித்திருப்பதோடு அதனால் எதிர்காலத்தில் மேலும் இலத்திரனியல் கழிவுகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 2020 தேசிய கழிவு முகாமைத்துவ கொள்கையின் கீழ் துறைசார் கொள்கை ஒன்றாக இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ கொள்கையினை வரைந்து மேலுள்ள பிரச்சினைகளுக்கான முழுமையான தீர்வை வழங்குவதற்கு சுற்றாடல் அமைச்சு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது. அனைத்து தொடர்புடைய பங்குதார நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களின் கூட்டிணைவில் நிபுணர்களின் குழு மூலம் ஏற்பாட்டு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலத்திரனியல் கழிவின் பல்வேறுபட்ட அம்சங்களை அடையாளம் காண்பது மற்றும் நாட்டில் முழுமையான இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ முறைமை ஒன்றை நிறுவுவதற்கு முடியுமாகும் வகையில் பல்வேறுபட்ட பங்குதாரர்களின் பொறுப்புகளை அடையாளம் காண்பதற்கான செயற்பாட்டை இந்த தேசிய கொள்கை மேற்கொள்ளும்.

இந்த நடைமுறையை அதிகம் திறந்த வகையிலும் வெளிப்படைத் தன்மையுடனும் மேற்கொள்ள இந்த அமைச்சு எதிர்பார்க்கிறது. அதனால், ஆர்வம் காட்டுபவர்கள் (எந்த ஒரு தனிநபர், நிறுவனம் அல்லது அமைப்பு) இந்த கொள்கைக்கு கருத்துகள்/ அபிப்பிராயங்களை 2023.09.24 ஆம் திகதிக்கு முன்னர் சுற்றாடல் அமைச்சின் சுற்றாடல் மாசு கட்டுப்பாடு மற்றும் இரசாயன முகாமைத்துவ பிரிவுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் எழுதி அனுப்புவதற்கு கோரப்படுகின்றனர்.

இது தொடர்பில் மேலதிக விபரங்களை 011-2034165 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது eeconga@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த கொள்கை வரைவு அமைச்சு இணையதளத்தில் தற்போது கிடைக்கப்பெறும்.
http://www.env.gov.lk/web/index.php/en/

**டொக்டர் அனில் ஜயசிங்க,**
**செயலாளர்,**
**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்**

**"சொபாதம் பியச"**
**416/C/1,**
**ரொபட் குணவர்தன மாவத்தை**
**பத்தரமுல்லை.**

**The Housewives' companion Classifieds on Daily News**

## அறிவித்தல்

### சொப்ட்லொஜிக் ரிடைல் (பிரைவட்) லிமிட்டட்

# உரிமை கோரப்படாத பொருட்கள்

2023 மே 31ம் திகதிக்கு முன்னர் ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, ரோயல் கார்டன்ஸ் 1 இல. 288/14 (20)இன் உள்ள எமது சேவை நிலையத்திற்கு தயாரிப்புகளை கையளித்துள்ள எமது பெறுமதியான எல்லா வாடிக்கையாளர்களிடமும் இத்தால் நாம் வேண்டுவது, உரிமை கோரப்படாத தயாரிப்புகளை எம்மால் நிச்சயமாக களஞ்சியப்படுத்த முடியாததால் 2023 செப்டம்பர் 30ம் திகதிக்கு முன்னர் வருகைதந்து கீழ்க்காணும் முகவரியிலிருந்து அவர்களது பொருட்களை சேகரித்துக் கொள்ளுங்கள் என்பதாகும். அந்தத் திகதியின் பின்னர் உரிமை கோரப்படாத எல்லா தயாரிப்புகளும் அகற்றப்படும் என வாடிக்கையாளர்களுக்கு நாம் தெரிவிக்க விரும்புகிறோம். அந்த காலப்பகுதியில் உரிமை கோரப்படாத எந்த தயாரிப்புகள் பற்றியும் கம்பனியினால் பொறுப்புக்கூறப்படமாட்டாது என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

**சொப்ட்லொஜின் ரிடைல் (பிரைவட்) லிமிட்டட்**
**சொப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் துணைக்கம்பனி**
**இல. 288/14 (20), ரோயல் கார்டன்ஸ்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, ராஜகிரிய.**
**தொ.பே. இல. 0115541900**

Best way to fulfil your Future dreams...

SUNDAY OBSERVER Marriage Proposals | සිළුමිණ මංගල යෝජනා | வாரமஞ்சரி திருமண சேவைகள்

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service

SUNDAY OBSERVER
(For 15 Words)
Rs. 1,500/- * Cost of each additional word Rs. 25/-
Decades of Trusted Service

සිළුමිණ මංගල යෝජනා
(For 15 Words)
Rs. 1,200/- * Cost of each additional word Rs. 25/-
දශක ගණනාවක විශ්වසනීය සේවාව...

வாரமஞ்சரி திருமண சேவைகள்
(For 15 Words)
Rs. 600/- * Cost of each additional word Rs. 25/-
பலவருடங்களாக நம்பிக்கையுள்ள சேவை

* A Marriage Proposal published in Sunday Observer can be published in Silumina by paying an additional Rs. 200/-
* A Marriage Proposal published in Silumina can be published in Tharunee by paying an additional Rs. 300/-

The convenient way to make your payment... Acc.No. 000000377 Green light for Online Transfer LAKE HOUSE BRANCH

E-mail - classified@lakehouse.lk
Gayani - 077 7 278 948 / Piyumi - 011 2 429 383 / 011 2 429 342

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**106 கார்கள் விற்பனைக்கு**

GO-6919 JAGUAR 2001, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958. 052994

**111 ஹொண்டா கார்கள் விற்பனைக்கு**

GR-6773 HONDA SHUTTLE 1999, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0714542958. 052992

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

LC-3800 HONDA 2002, LORRY கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 053008

LE-1942 ASHOK LEYLAND TUSKER 2007, LH-6521 ASHOK L EYLAND TU SKER 2010, LORRIES கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 053002

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

ABT-8345 BAJAJ 2019, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810. 052998

it's what you want www.adz.lk

# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABN-0032 | பஜாஜ் | 2016 | ராகம |
| ABN-4741 | பஜாஜ் | 2016 | எம்பிலிபிட்டிய |
| ABB-8602 | பஜாஜ் | 2015 | மாதரா |
| AAY-8127 | பஜாஜ் | 2015 | ரத்தினபுரி |
| ABG-8073 | பஜாஜ் | 2015 | கண்டி |
| AAW-6022 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAZ-1380 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABA-0304 | பஜாஜ் | 2015 | மாதரா |
| ABC-3782 | பஜாஜ் | 2015 | திருகோணமலை |
| ABF-9831 | பஜாஜ் | 2015 | சிலாவ் |
| AAU-6696 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAP-5545 | பஜாஜ் | 2014 | கண்டி |
| AAG-3518 | பஜாஜ் | 2013 | அனுராதபுரம் |
| YY-8917 | பஜாஜ் | 2012 | கண்டி |
| AAA-0999 | பஜாஜ் | 2012 | பாணந்துரா |
| AAB-3821 | பஜாஜ் | 2012 | ராகம |
| YX-8559 | பஜாஜ் | 2012 | மாதரா |
| AAE-3025 | பஜாஜ் | 2012 | கண்டி |
| YW-3655 | பஜாஜ் | 2012 | ரத்தினபுரி |
| YW-6797 | பஜாஜ் | 2012 | கண்டி |
| YQ-5810 | பஜாஜ் | 2011 | ராகம |
| YQ-5065 | பஜாஜ் | 2011 | எம்பிலிபிட்டிய |
| YS-2640 | பஜாஜ் | 2011 | ராகம |
| YE-3198 | பஜாஜ் | 2010 | எம்பிலிபிட்டிய |
| YB-5869 | பஜாஜ் | 2010 | ராகம |
| YE-1402 | பஜாஜ் | 2010 | அம்பாரா |
| YE-7689 | பஜாஜ் | 2010 | கண்டி |
| QT-2133 | பஜாஜ் | 2009 | ராகம |
| QN-5858 | பஜாஜ் | 2007 | ரத்தினபுரி |
| QE-1650 | பஜாஜ் | 2006 | ராகம |
| QJ-0576 | பஜாஜ் | 2006 | ராகம |
| QH-5555 | பஜாஜ் | 2006 | ராகம |
| QE-2316 | பஜாஜ் | 2006 | ராகம |
| HB-1031 | பஜாஜ் | 2003 | ராகம |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CBH-6744 | MG | 2019 | கண்டி |
| CAM-8732 | மைக்ரோ | 2015 | ராகம |
| KM-3713 | டாடா | 2011 | ராகம |
| KG-1774 | மாருதி | 2008 | குருநாகல் |
| KF-9630 | மைக்ரோ | 2006 | ராகம |
| HU-2611 | மஸ்தா | 2000 | ராகம |
| HE-7590 | ஹோண்டா | 1999 | ராகம |
| GY-0975 | நிசான் | 1999 | ராகம |

| ஜீப் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| KL-7987 | டொயோட்டா | 2007 | கண்டி |

| மோட்டார் பயிற்சியாளர் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| 60-4275 | நிசான் | 1982 | குருநாகல் |

| இரட்டை நோக்கம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PW-8087 | மஹிந்திரா | 2013 | ராகம |
| PU-4601 | மஹிந்திரா | 2012 | ராகம |
| PR-5966 | டாடா | 2011 | பாணந்துரா |
| PB-5984 | மிட்சுபிஷி | 2003 | ராகம |
| GX-1461 | மஸ்தா | 1997 | ராகம |

| மோட்டார் லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| LJ-4948 | லங்கா அசோக் லேலண்ட் | 2012 | ரத்தினபுரி |
| LC-2669 | சுசுகி | 2002 | அம்பாரா |

| மோட்டார் லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| RC-7997 | மஹிந்திரா | 2011 | அம்பாரா |
| RC-0833 | மஹிந்திரா | 2010 | அம்பாரா |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

| | |
|---|---|
| ராகம 0773 951 796 | திருகோணமலை 0769 138 400 |
| ரத்தினபுரி 0774 857 351 | கண்டி 0773 972 860 |
| நுவரெலியா 0777 717 562 | அனுராதபுரம் 0767 139 916 |
| அம்பாரா 0773 547 556 | குருநாகல் 0764 425 205 |
| எம்பிலிபிட்டிய 0773 610 188 | பாணந்துறை 0775 215 263 |
| மாத்தறை 0743 601 121 | சிலாவ் 0770 288 804 |

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## கமத்தொழில் அமைச்சு
## இலங்கை உரங்கள் கம்பெனி லிமிடெட்
## மற்றும்
## இலங்கை வர்த்தக உர லிமிடெட்

# யூரியா (Granular & Prilled) உர பெறுகைக்கு விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இலங்கை உரங்கள் கம்பெனி லிமிடெட் மற்றும் இலங்கை வர்த்தக உர லிமிடெட்டுக்கு 15,000+/-5% மெட்ரிக் தொன் யூரியா (Granular) மற்றும் 10,000+/-5% மெட்ரிக் தொன் யூரியா (Prilled) உரத்தின் பெறுகை – விலைமனு இல.: 2023/MoA/FER/UR/ICB/01

கீழ் தரப்பட்டுள்ள விபரங்களின்படி, இலங்கை உரங்கள் கம்பெனி லிமிடெட் மற்றும் இலங்கை வர்த்தக உர லிமிடெட்டுக்கு திரும்பப் பெற முடியாத கடன் கடிதத்தின் கட்டணம் செலுத்தும் விதிமுறைகளின் கீழ் CIFFOT அடிப்படைக்கு அமைய 15,000+/-5% மெட்ரிக் தொன் யூரியா (Granular) மற்றும் 10,000+/-5% மெட்ரிக் தொன் யூரியா (Prilled) உரத்தின் வழங்கலுக்காக தகுதியுடைய உர வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், முதன்மையானவர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம் இருந்து கமத்தொழில் அமைச்சு, செயலாளர் சார்பில் நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு (SCAPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு இல. | ஏற்றுமதி முறை | உரத்தின் வகை | அளவு (மெட்.) | | வடிவம் | விலைமனு பிணை உத்தரவாதம் (அமெ. டொ.) | கொழும்பில் விநியோகம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2023/MoA/ FER/ UR/ ICB/01 | CIFFOT அடிப்படை | யூரியா (Granular) | 15,000+/-5% | CFC – 9,000+/-5% | பொதியிடப்பட்டது (ஏற்றப்படும் துறைமுகத்தில் மொத்தமாக அனுப்பப்பட்டு கொழும்பு துறைமுகத்தில் கப்பலுடன் சேர்த்து 50 கிலோ எடையுள்ள பைகளில் பொதியிடல்) | 30,000 | ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியில் இருந்து 42 நாட்களுக்குள் |
| | | | | CCF – 6,000+/-5% | | | |
| | | யூரியா (Prilled) | 10,000+/-5% | CFC – 6,000+/-5% | | | |
| | | | | CCF – 4,000+/-5% | | | |

02. தகுதியுடைய விலைமனுதாரர் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
   - i. அனைத்து விலைமனுதாரர்களும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பொருட்களை வழங்குவதற்கு சட்ட உரிமையை பெற்றிருத்தல் வேண்டும்.
   - ii. விலைமனு சமர்ப்பிக்கும் திகதியில் இருந்து குறைந்தது கடந்த இரண்டு (02) ஆண்டு காலம் ஒன்றுக்காக குறித்த நாட்டில் முறையான அனுமதியுடன் வர்த்தகம் ஒன்றாக அதன் பதிவு செய்யப்பட்ட மூல நாட்டில் சட்டரீதியாக நிறுவப்பட்ட வர்த்தக நிறுவனம் என்ற வகையில் நிரூபிப்பதற்கு தொடர்புடைய நிர்வாகங்களினால் வழங்கப்பட்ட பதிவு/ கூட்டிணைவு ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட (வர்ண) பிரதி ஒன்றை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - iii. விலைமனு சமர்ப்பிக்கும் திகதியில் இருந்து கடந்த 03 ஆண்டுகளுக்கு எந்த ஒரு நாட்டுக்கும் இரசாயன உரம் அல்லது எந்த ஒரு பொருட்களினதும் சர்வதேச வர்த்தகத்தில் உள்ள அனுபவம்.
   - iv. வெளிநாட்டு விலைமனுதாரராக இருந்தால், முதன்மையான தரப்பினர் சார்பில் இலங்கையில் உள்ளூர் பிரதிநிதி/ உள்ளூர் முகவர் ஒருவர் பிரதிநிதித்துவம் செய்தல் வேண்டும்.
   - v. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் திகதியில் அல்லது ஒப்பந்தம் வழங்கப்படும் திகதியில் பொதுத் திறைசேரி/ தேசிய பெறுகை ஆணைக்குழுவின் (NPC) பொது நிதி திணைக்களத்தினால் தகுதியற்றவர் என்ற அறிவிப்பு ஒன்றுக்கு உட்பட்ட விலைமனுதாரர் ஒருவர் தகுதியிழப்புக்கு உள்ளாவார்.
   - vi. விலைமனுதாரர் ஆதாய முரணை பெற்றவராக இருத்தலாகாது. அனைத்து விலைமனுதாரர்களும் ஆதாய முரணை பெற்றிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டால் தகுதியிழப்பு செய்யப்படலாம். இந்த விலைமனு ஆவணங்களின் கீழ் கொள்வனவு செய்வதற்கு பொருட்களின் பெறுகைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கும் வடிவம், விபரக்குறிப்பு மற்றும் ஏனைய ஆவணங்களின் தயாரிப்புக்காக ஆலோசனை சேவையை வழங்குவதற்கு கொள்வனவாளர் மூலம் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் நிறுவனம் அல்லது அதன் எந்த ஒரு கூட்டாளர்களுடனும் கடந்த காலத்தில் தொடர்புடையவர்களாக இருந்தால், இந்த விலைமனு செயற்பாடுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தரப்புகளுடன் விலைமனுதாரர்கள் ஆதாய முரணை பெற்றிருப்பதாக கருதப்படும்.
03. 2023.11.20 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட 30,000.00 அமெரிக்க டொலர் பெறுமதிக்கு இலங்கை, பத்தரமுல்லை, ரஜமல்வத்த வீதி, "கொவிஜன மந்திரய", இல. 80/5, கமத்தொழில் அமைச்சு, செயலாளரின் பெயருக்கு விலைமனு பிணை உத்தரவாதம் ஒன்றை சமர்ப்பிக்க கோரப்படுகின்றனர்.
04. விலைமனு ஆவணத் தொகுதி ஒன்றுக்காக **ரூபா 250,000.00 (ரூபா இருநூற்று ஐம்பதாயிரம் மாத்திரம்)** மீளளிக்கப்படாத விலைமனு கட்டணத்தை ரொக்கப்பணத்தில் செலுத்தி இலங்கை உரங்கள் கம்பெனி லிமிடெட்டின் பதில் முகாமையாளரிடம் (பெறுகை மற்றும் இறக்குமதிகள்) இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களினால் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
05. வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள் உட்பட **2023.08.25 ஆம் திகதி தொடக்கம் 2023.09.13 ஆம் திகதி வரை மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 3.30 க்கு இடையே** எந்த ஒரு தினத்திலும் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.
06. சர்வதேச போட்டி ரீதியான விலைமனு நடைமுறை (ICB) மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
07. 2023.09.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவை கொண்ட கடித உறையை பின்வருபவருக்கு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்,

**SCAPC தலைவர்,**
**C/o கமத்தொழில் அமைச்சு**
**பெறுகை பிரிவு - உர துறை**
**இல. 80/5, "கொவிஜன மந்திரய"**
**ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை, இலங்கை.**

அல்லது இலங்கை, பத்தரமுல்லை, ரஜமல்வத்த வீதி, "கொவிஜன மந்திரய", இல. 80/5, தரைத் தளம், பெறுகை பிரிவு - உர துறை, கமத்தொழில் அமைச்சு, உதவி செயலாளரின் (பெறுகை) அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டிக்கு இட வேண்டும்.

08. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023.09.05 ஆம் திகதி மு.ப. 10.30க்கு இலங்கை, பத்தரமுல்லை, ரஜமல்வத்த வீதி, "கொவிஜன மந்திரய", இல. 80/5, கமத்தொழில் அமைச்சு, வளவின் மாநாட்டு மண்டபத்தில் (1ஆவது மாடி) இடம்பெறும்.
09. விலைமனுக்களை ஏற்பது 2023.09.14 ஆம் திகதி மு.ப. 11.00க்கு நிறைவடைவதோடு அதன் பின் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பி தரப்படும்.
10. மேலதிக விபரங்களை இலங்கை உரங்கள் கம்பெனி லிமிடெட், பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் இறக்குமதிகள் (தொலைபேசி இலக்கம்: +94-11-2947765/ கைபேசி: +94-772069981, தொலைநகல்: +94-11-2930423, மின்னஞ்சல்: actgpm@lakpohora.lk) அல்லது இலங்கை வர்த்தக உர லிமிடெட், பதில் பிரதி முகாமையாளரிடம் (பெறுகை மற்றும் வழங்கல்கள்) இருந்து (தொ./ தொலைநகல்: +94 -112949091 , +94-774451382 மின்னஞ்சல்: ccfpurchasing @gmail.com) பெற்றுக்கொள்ள முடியும்.
11. விலைமனு ஆவணத்தை பரீட்சிப்பதை வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள் உட்பட 2023.08.25 ஆம் திகதி தொடக்கம் 2023.09.13 ஆம் திகதி வரை மு.ப. 9.30 மற்றும் பி.ப. 3.30க்கு இடையே இலங்கை, வத்தளை, ஹுனுபிட்டிய, பெறுகை பிரிவு (01ஆவது மாடி), இலங்கை உரங்கள் கம்பெனி லிமிடெட்டில் மேற்கொள்ள முடியும்.
12. இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட நேரம் இலங்கையின் நிலையான நேரமாகும் (GMT)

**செயலாளர்**
**கமத்தொழில் அமைச்சு**
**இல. 80/5, "கொவிஜன மந்திரய"**
**ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை, இலங்கை.**
திகதி: 2023.08.25

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT



Sunday Observer adz it's what you want Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want




- Auto Focus

adz Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# இலங்கை புகையிரத சேவைகள்

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை புகையிரத சேவைக்கு 50,000 எண்ணிக்கையிலான**
**BOLTS & NUTS WITH WASHERS பெறுகை**
**பெறுகை இலக்கம் : SRS/F.7926**

01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழு (மேஜர்) தவைரினால் ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள இலங்கை புகையிரத சேவைக்கு 50,000 எண்ணிக்கையிலான Distance Bolts & Nuts with 02 Washers & Split Pin கொள்வனவு செய்வதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. மனுதாரர்கள் தங்கள் மனுக்களை நேரடியாகவோ அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அங்கீகாரம் பெற்ற முகவருக்கு பகர அதிகார பெற்றவர் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

02. மீள்ச் செலுத்தப்படாத **ரூ.8,450/-** ஆவணக் கட்டணத்தினை செலுத்தி **பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திலிருந்து ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை, அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில்** பெறக்கூடிய படிவங்களில் மட்டும் **2023.10.05 ஆம் திகதி பி.ப.3.00** மணி வரை **(இலங்கை நேரப்படி)** மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

03. விலைமனுக்கள் **2023.10.06 ஆம் திகதி பி.ப.02.00 (இலங்கை நேரப்படி)** மணிக்கு மூடப்படும்.

04. மனுதாரர்கள் அவர்களின் விலைமனுவின் ஒரு பகுதியாக **ரூ.320,000/-** மனுப் பாதுகாப்பு பிணையாக சமர்ப்பிக்க வேண்டும்.

05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிந்தவுடன் **பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை எனும் முகவரியில்** உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம்.

06. மூடப்பட்ட மனுக்கள் பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்பட வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (பெறுகை),**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10, இலங்கை.**

07. மனு ஆவணங்களை பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில் இலவசமாகப் பரிசீலனை செய்ய முடியும்.

தொலைபேசி இல : **94(11) 2438078, 94(11) 2436818 or 0114600209**
தொலைநகல் இல : **94 (11) 2432044**
மின்னஞ்சல் : **srs.slr@gmail.com / tender2@railway.gov.lk**
இணையத்தளம் : **www.railway.gov.lk**

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கை புகையிரத சேவைகள்,
பெறுகை இல.: **SRS/F.7926**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

லங்கா சதொச LANKA SATHOSA

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிடெட்டுக்கு நடுத்தரமான பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கல்

விலைமனு இலக்கம் : LSL/PRO/05/47/Shopping Bags (M)/2023
தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல்

**லங்கா சதொச லிமிடட்டுக்கு** பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கலுக்காக உள்நாட்டு விநியோகஸ்தர்கள், உள்நாட்டு பிரதிநிதிகள், அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களிடம் இருந்து 03 மாத காலத்திற்கு **லங்கா சதொச லிமிடட் பெறுகைக் குழு தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்பு மற்றும் தேவை:

| இலக்கம் | பொருட்களின் விபரம் | அளவு (LxWxG) | அங்கீகரிக்கப்பட்ட உச்ச எடை | மதிப்பிடப்பட்ட அளவு | அளவி (Gauge) | உற்பத்தி பொருள் | அச்சிடப்பட்டது / அச்சிடப்படாதது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) – நடுத்தரம் | (17" + 10" x 05") | 04 கிலோ | 15,000,000 | மைக்ரோன் 20க்கு மேல் | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |

விலைமனுக்களை சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை **ரூபா 5,000.00 (மீளளிக்கப்படாதது)** கேள்விமனு கட்டணத்தை செலுத்தி **2023 ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் மாதம் 15ஆம்** திகதி வரையான காலத்தில் கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,**
**வொக்சோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023 செப்டெம்பர் மாதம் 07ஆம் திகதி மு.ப. 11.00க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள், **2023 செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி பி.ப. 12.00க்கு அல்லது அதற்கு முன்னர்,** மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/47/Shopping Bags (M)/2023"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட **ரூபா 510,000.00** தொகைக்கான **நிபந்தனையற்ற விலைமனு பிணை (மீளளிக்கப்படும்) ஒன்றை** கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2023 செப்டெம்பர் 15 ஆம் திகதி பி.ப. 12.00க்கு** நிறைவடைவதோடு அதன் பின் விலைமனுதாரர்களின் முன்னிலையில் அவை உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரியை அழையுங்கள்.
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி பெறுகை (திலினி) - 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்குவது தொடர்பான இறுதி முடிவு, **லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழு தலைவர் வசமானதாகும்.**

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிடட்**
**இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

# விலைமனுக் கோரல்

## குருணாகல் பிரதேச சபை

குருணாகல் பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்வரும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களின் 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆந் திகதிக்கு உட்பட்ட கால வரையான குத்தகைக்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்கோரல் விண்ணப்பங்கள் 2023.08.28 மு.ப. 08.30 முதல் 2023.09.26 ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை வழங்கப்படுவதோடு 2023.09.27 ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதோடு அன்றைய நாள் மு.ப 10.30 மணியளவில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

03. குறிப்பிட்ட விலைமனு முறி,பிணை முறி மற்றும் விலைமனுக்கான விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணங்கள் முழுமையாக செலுத்தப்பட்டதன் பின்னரே விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படுவதோடு, முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கான விண்ணப்பப்படிவங்கள் "செயலாளர், குருணாகல் பிரதேச சபை, புத்தளம் வீதி, உடதிகன, குருணாகல்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பிரதான காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

04. உங்களால் செலுத்தப்படும் அனைத்து ஆதனங்களிற்கான குத்தகைகளானது அரசினால் விதிக்கப்படும் வரிக் கொள்கைகள் மற்றும் கட்டண திருத்தங்களிற்கு உட்பட்டவையாக இருக்கும்.

**செயலாளர்,**
**குருணாகல் பிரதேச சபை,**
**புத்தளம் வீதி, உடதிகன,**
**குருணாகல்.**

**உப அட்டவணை - 01**

**2024 ஆம் வருடத்திற்கான குத்தகைக்கு வழங்கப்படும் ஆதனங்கள்**

| தொடர் இல. | 2024 ஆம் வருடத்திற்கான குத்தகைக்கு வழங்கப்படும் ஆதனங்கள் | விலை மனுக்களுக்கான விண்ணப்ப கட்டணம் | மீள் செலுத்தக் கூடிய பிணை முறி | 2024 ஆம் வருடத்திற்கான ஆகக் குறைந்த கேள்வி |
|---|---|---|---|---|
| | | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் |
| 1 | வெல்லவ சனிக்கிழமை வாராந்த சந்தை (சிற்றுண்டிச் சாலை மற்றும் கழிவறை அடங்கலாக) | 250.00 | 43273.13 | 865,462.50 |
| 2 | வெல்லவ வாராந்த சந்தை மீன் கடை (இல. 01) | 350.00 | 2546.78 | 25,467.75 |
| 3 | வெல்லவ வாராந்த சந்தை மீன் கடை (இல. 02) | 350.00 | 2546.78 | 25,467.75 |
| 4 | வெல்லவ வாராந்த சந்தை மீன் கடை (இல. 03) | 350.00 | 2601.90 | 26,019.00 |
| 5 | வெல்லவ வாராந்த சந்தை மீன் கடை (இல. 04) | 350.00 | 2601.90 | 26,019.00 |
| 6 | வெல்லவ வாராந்த சந்தை கோழி இறைச்சிக் கடை (இல. 01) | 350.00 | 1702.05 | 17,020.50 |
| 7 | வெல்லவ வாராந்த சந்தை கோழி இறைச்சிக் கடை (இல. 02) | 350.00 | 1756.65 | 17,566.50 |
| 8 | வெல்லவ வாராந்த சந்தைக்கு அருகாமையில் உள்ள மாட்டிறைச்சிக் கடை | 350.00 | 12458.25 | 124,582.50 |
| 9 | வெல்லவ வாராந்த சந்தை பன்றி இறைச்சிக் கடை | 350.00 | 1874.25 | 18,742.50 |
| 10 | வெல்லவ வாராந்த சந்தைக்கு அருகாமையில் உள்ள காரியாலய அறை | 250.00 | 1400.70 | 14,007.00 |
| 11 | வெல்லவ வாராந்த சந்தைக்கு அருகாமையில் உள்ள கடை அறை இலக்கம் 5/6 | 250.00 | 1493.63 | 14,936.25 |
| 12 | வெல்லவ வாராந்த சந்தைக்கு அருகாமையில் உள்ள கடை அறை இலக்கம் 03 | 250.00 | 1285.20 | 12,852.00 |
| 13 | வெல்லவ வாராந்த சந்தைக்கு அருகாமையில் உள்ள கடை அறை இலக்கம் 04 | 250.00 | 579.60 | 5,796.00 |
| 14 | வெல்லவ வாராந்த சந்தைக்கு அருகாமையில் உள்ள கடை அறை இலக்கம் 1/2 | 250.00 | 2083.73 | 20,837.25 |
| 15 | வெல்லவ வாராந்த சந்தைக்கு அருகாமையில் உள்ள கடை அறை இலக்கம் 07 | 250.00 | 1157.63 | 11,576.25 |
| 16 | மாஸ்பொத ஞாயிறு வாராந்த சந்தை (சிற்றுண்டிச் சாலை மற்றும் கழிவறை அடங்கலாக) | 250.00 | 385887.50 | 7,717,750.00 |
| 17 | மாஸ்பொத வாராந்த சந்தை மீன் கடை (இல. 01) | 350.00 | 2083.73 | 20,837.25 |
| 18 | மாஸ்பொத வாராந்த சந்தை மீன் கடை (இல. 02) | 350.00 | 2083.73 | 20,837.25 |
| 19 | மாஸ்பொத வாராந்த சந்தை மீன் கடை (இல. 03) | 350.00 | 2083.73 | 20,837.25 |
| 20 | மாஸ்பொத வாராந்த சந்தை மீன் கடை (இல. 04) | 350.00 | 2083.73 | 20,837.25 |
| 21 | மாஸ்பொத வாராந்த சந்தை கோழி இறைச்சிக் கடை (இல. 01) | 350.00 | 1620.68 | 16,206.75 |
| 22 | மாஸ்பொத வாராந்த சந்தை கோழி இறைச்சிக் கடை (இல. 02) | 350.00 | 1620.68 | 16,206.75 |
| 23 | மாஸ்பொத வாராந்த சந்தை பன்றி இறைச்சிக் கடை (இல. 01) | 350.00 | 1852.20 | 18,522.00 |
| 24 | மாஸ்பொத வாராந்த சந்தை பன்றி இறைச்சிக் கடை (இல. 02) | 350.00 | 1852.20 | 18,522.00 |
| 25 | ரொஷிடாவத்த பொது இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 727.65 | 7,276.50 |
| 26 | வெலிகொடவத்த தென்னை அறுவடை | 250.00 | 1210.00 | 12,100.00 |
| 27 | சூரியவத்த பொது இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 600.60 | 6,006.00 |
| 28 | மாளிகாதென்னவத்த தென்னை அறுவடை | 250.00 | 519.75 | 5,197.50 |
| 29 | அஸ்ஸெத்தும முஸ்லிம் மையவாடியின் தென்னை அறுவடை | 250.00 | 1097.25 | 10,972.50 |
| 30 | எபேவத்த தென்னை அறுவடை | 250.00 | 3037.65 | 30,376.50 |
| 31 | உயந்தன புதிய ஏல இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 450.45 | 4,504.50 |
| 32 | ரங்கம நெலும் பொகுண i (செலிங்கோ) இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 1131.90 | 11,319.00 |
| 33 | ரங்கம நெலும் பொகுண ii (கிரீன்வே) இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 1320.00 | 13,200.00 |
| 34 | ரண்வன பொது இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 254.10 | 2,541.00 |
| 35 | தொரடியாவ கம்சபா வத்த இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 508.75 | 5,087.50 |
| 36 | ஹங்வெல்ல பொது இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 924.00 | 9,240.00 |
| 37 | பொரலுவத்த பொது இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 165.00 | 1,650.00 |
| 38 | பொரலுவத்த பொது இடத்திற்கான தென்னை அறுவடை 02 | 250.00 | 550.00 | 5,500.00 |
| 39 | கரம்பேவத்த பொது இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 132.00 | 1,320.00 |
| 40 | கரம்பேவத்த கிங்ஸ் பாக் ii பொது இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 880.00 | 8,800.00 |
| 41 | மெல்ரோஸ்வத்த பொது இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 574.75 | 5,747.50 |
| 42 | கலகெதர மெகாசிட்டி தென்னை அறுவடை | 250.00 | 924.00 | 9,240.00 |
| 43 | கோணகம நேசர்ஸ்பார்க் தென்னை அறுவடை | 250.00 | 330.00 | 3,300.00 |
| 44 | காமல்வத்த பொது இடத்திற்கான தென்னை அறுவடை | 250.00 | 440.00 | 4,400.00 |
| 45 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 07 | 250.00 | 1911.00 | 19,110.00 |
| 46 | போயகனை பொது கடை அறை இல. 1/7 | 250.00 | 1058.00 | 10,580.00 |
| 47 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 2/7 | 250.00 | 1029.00 | 10,290.00 |
| 48 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 3/7 | 250.00 | 850.50 | 8,505.00 |
| 49 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 4/7 | 250.00 | 1018.50 | 10,185.00 |
| 50 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 5/7 | 250.00 | 1396.50 | 13,965.00 |
| 51 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 6/7 | 250.00 | 1058.00 | 10,580.00 |
| 52 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 7/7 | 250.00 | 1047.50 | 10,475.00 |
| 53 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 8/7 | 250.00 | 1218.00 | 12,180.00 |
| 54 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 9/7 | 250.00 | 903.00 | 9,030.00 |
| 55 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 10/7 | 250.00 | 1008.00 | 10,080.00 |
| 56 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 11/7 | 250.00 | 871.50 | 8,715.00 |
| 57 | போயகனை பொதுக் கடைத் தொகுதி வளாகத்தில் உள்ள சஹன கடை அறை | 250.00 | 7000.00 | 70,000.00 |
| 58 | போயகனை பொது கடைத்தொகுதி கடை அறை இல. 8 | 250.00 | 1995.00 | 19,950.00 |
| 59 | மரலுவாவ பொல்கொல்ல வத்த இடத்தின் தென்னை அறுவடை | 250.00 | 480.00 | 5,280.00 |
| 60 | தம்படவத்த பொது இடத்தின் தென்னை அறுவடை | 250.00 | 700.00 | 7,700.00 |
| 61 | யக்கபிடிய வத்த பொது இடத்தின் தென்னை அறுவடை | 250.00 | 630.00 | 6,930.00 |
| 62 | பிரதான காரியாலயத்தின் சிற்றுண்டிச் சாலை | 250.00 | 30,720.00 | 384,000.00 |
| 63 | பிரதான காரியாலயத்தின் உடல் கட்டமைப்பு நிலையம் | 250.00 | | 384,000.00 |

**உப அட்டவணை - 02**

**2024 ஆம் வருடத்திற்கான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கப்படும் ஆதனங்கள்**

| தொடர் இல. | 2024 ஆம் வருடத்திற்கான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கப்படும் ஆதனங்கள் | விலை மனுக்கான விண்ணப்ப கட்டணம் | மீள் செலுத்தக் கூடிய பிணை முறி | 2024 ஆம் வருடத்திற்கான ஆகக் குறைந்த கேள்வி |
|---|---|---|---|---|
| | | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் |
| 1 | பமுணாவல ஹெல்கமவத்த | 250.00 | 550.00 | 5,500.00 |
| 2 | பமுணுஸ்ஸ புஷ்வூட்வத்த | 250.00 | 330.00 | 3,300.00 |
| 3 | ரத்கரவ்வ கிவுலவெவ அருகாமையில் உள்ள இடம் | 250.00 | 330.00 | 3,300.00 |
| 4 | ஹெட்டிகெதர நதீ உயன இடம் | 250.00 | 330.00 | 3,300.00 |
| 5 | கோணகமவத்த (நேசர்ஸ்பாக்) (எசெல்ரோ) | 250.00 | 330.00 | 3,300.00 |
| 6 | கோணகமவத்த (மார்க் பெஞ்சமின்) | 250.00 | 330.00 | 3,300.00 |
| 7 | ரொஸ்வூட்வத்த | 250.00 | 440.00 | 4,400.00 |
| 8 | கிரீன்வெளிவத்த பொது இடம் | 250.00 | 220.00 | 2,200.00 |

**2023.08.25**

**குருணாகல் பிரதேச சபை**
**புத்தளம் வீதி, உடதிகன,**
**குருணாகல்**

**செயலாளர்,**
**குருணாகல் பிரதேச சபை.**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல் (IFB)

| இல. | ஒப்பந்த பெயர் |
|---|---|
| 01. | பலாங்கொடை-இராசகல்ல-ஊவெல்ல வீதியில் இலக்கம் 8/2 பாலத்தினை இனை மீள்புனரமைத்தல் |

மேற்கூறிய பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2023.08.25 ஆம் திகதி முதல் 2023.09.13 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## விலைமனுக்களுக்கான அழைப்பு - IFB

சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)
கமத்தொழில் அமைச்சு

**Friends நிலக்கடலை செயற்றிட்டத்திற்கு 1200 எண்ணிக்கையான மோட்டார் பொருத்தப்பட்ட பல்வகை செயற்பாடுடைய inter-cultivator இயந்திரம்**

**150 எண்ணிக்கையான 2" அங்குல நீர் பம்பி - மின்சாரம்**

**36 எண்ணிக்கையான 2" அங்குல நீர் பம்பி - எரிபொருள்**

**186 எண்ணிக்கையான தெளிக்கும் நுண் நீர்ப்பாசன பொதி (நிறுவல்கள் சகிதம்)**

**1200 எண்ணிக்கையான நிலக்கடலை கோதுகளை வேறாக்கும் இயந்திரம் என்பவற்றை வழங்குதல்**

**விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்: SAPP/PRO/GDS/2023/38 மற்றும் 30**

இலங்கை அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திலிருந்து (IFAD) சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) செலவுக்காக நிதியுதவியைப் பெற்றுள்ளது மற்றும் கலப்பின சோள விதைகளை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவியின் ஒரு பகுதியைப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

எந்தவொரு IFAD நிதியுதவியின் பயன்பாடும் IFAD இன் ஒப்புதலுக்கு உட்பட்டது, நிதி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் IFAD இன் விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க வேண்டும். IFAD மற்றும் அதன் அதிகாரிகள், முகவர்கள் மற்றும் பணியாளர்கள் SAPP தொடர்பாக எந்தவொரு தரப்பினராலும் கொண்டு வரப்படும் அனைத்து வழக்குகள், நடவடிக்கைகள், உரிமைகோரல்கள், கோரிக்கைகள், இழப்புகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றிலிருந்து பாதிப்பில்லாதவர்களாக இருக்க வேண்டும்.

1. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்ட உருப்படிகளை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து (விலைமனுதாரர்கள்) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை செயற்றிட்ட பெறுகைக் குழு தற்போது அழைக்கின்றது.

| விலைக் கோரல் குறிப்பீட்டு இலக்கம் | உருப்படியின் பெயர் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்வி வைப்பு | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| SAPP/PRO/GDS/2023/38 | மோட்டார் பொருத்தப்பட்ட பல்வகை செயற்பாடுடைய inter-cultivator இயந்திரம் - 4 Stroke | 1200 | 20,000.00 | 830,000.00 | 2024 ஜனவரி 7ஆம் திகதி வரை |
| | 2" அங்குல நீர் பம்பி - மின்சாரம் | 150 | | 230,000.00 | 2024 ஜனவரி 7ஆம் திகதி வரை |
| | 2" அங்குல நீர் பம்பி - எரிபொருள் | 36 | | 55,000.00 | 2024 ஜனவரி 7ஆம் திகதி வரை |
| | தெளிக்கும் நுண் நீர்ப்பாசன பொதி | 186 | | 410,000.00 | 2024 ஜனவரி 7ஆம் திகதி வரை |
| SAPP/PRO/GDS/2023/30 | நிலக்கடலை கோதுகளை வேறாக்கும் இயந்திரம் | 1200 | 20,000.00 | 1,600,000.00 | 2024 ஜனவரி 7ஆம் திகதி வரை |

2. டிசம்பர் மாத முற்பகுதிக்கு முன் இந்த விநியோகம் எதிர்பார்க்கப்படுகின்றது.
3. இந்த விலைக்கோரல் ஆவணத்தில் உள்ள தேவைப்பாடுகளின் அட்டவணையில் இந்த பொருட்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் பற்றிய மேலதிக விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
4. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று ராஜகிரிய, இல. 212/A, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகத்தில் 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு SAPP/PRO/GDS/2023/38 குறிப்பீட்டிலக்கத்திற்கும் ந.ப. 12.00 மணிக்கு SAPP/PRO/GDS/2023/30 குறிப்பீட்டிலக்கத்திற்கும் இடம்பெறும்.
5. ஆர்வமும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்கள் பெறுகை நிபுணர், சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்டத்தின் (SAPP) 011-2448031 எனும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது procurement@sapp.lk என்ற முகவரியில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களை 2023 ஆகஸ்ட் 25ஆம் திகதி முதல் 2023 செப்டெம்பர் 22ஆம் திகதி வரையில் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேற்கூறப்பட்ட அட்டவணையில் உள்ள 1ஆம் மற்றும் 2ஆம் இலக்கத்தின் ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் மற்றும் 2023 ஆகஸ்ட் 25ஆம் திகதி முதல் 2023 செப்டெம்பர் 22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றை இலங்கை, ராஜகிரிய, இல. 212/A, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், செயற்றிட்ட பணிப்பாளருக்குச் சமர்ப்பித்து மேற்கூறப்பட்ட பெறுகைக்கான ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். செலுத்தும் முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும். கொடுப்பனவுகளை SAPP நிதிப் பிரிவிற்குச் செலுத்துதல் வேண்டும்.
7. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட ஒரு உறையில் இட்டு கீழ்க் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பெறுகைப் பிரிவு, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
   - அ) குறிப்பீட்டிலக்கம் SAPP/PRO/GDS/2023/38 - 2023 செப்டெம்பர் 25ஆம் திகதி ந.ப. 12.00 மணி அல்லது அதற்கு முன்
   - ஆ) குறிப்பீட்டிலக்கம் SAPP/PRO/GDS/2023/30 - 2023 செப்டெம்பர் 25ஆம் திகதி மு.ப. 11.30 மணி அல்லது அதற்கு முன்

   விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 90 நாட்கள் வரையில் (2023 டிசம்பர் 24ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்) அல்லது வாங்குபவரால் நிர்ணயிக்கப்பட்ட நீட்டிக்கப்பட்ட நாள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல் முடிந்தவுடன், விலைமனுதாரர்கள் அல்லது கலந்துகொள்ளத் தெரிவுசெய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.
8. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் கடித உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களுடனும் 02ஆம் பந்தியில் (அட்டவணை) குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். மேலே குறிப்பிடப்பட்ட முகவரிகள்

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம்,**
**இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய.**
**தொலைபேசி இலக்கம்: +94 11 2431 426**

# பெறுகை கோரல்

## கொலொன்ன பிரதேச சபை

கொலொன்ன பிரதேச சபையின் கொம்போஸ்ட் களஞ்சியத்தின் கட்டிடத்தை அகலமாக்குதல், பிரதேச பாதையை அமைத்தல் மற்றும் அலுவலக அறையின் முன்னால் துண்டுக்கல் பதித்தல் செயற்றிட்டத்திற்கான கீழ்க்காணும் தகைமையுடைய ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து தேசிய போட்டி திறந்த கேள்வி கோரலில் கீழ் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட செலவு வெட் வரி இன்றி (ரூ.மி.) | குறைந்தபட்ச தகைமைத் தரம் CIDA | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி ரூ. |
|---|---|---|---|---|---|
| LGS(RE) 2324901 | கொலொன்ன கொம்போஸ்ட் களஞ்சியத்தின் கட்டிடத்தை அகலமாக்குதல் | 5.34 மில்லியன் | C-07 | 3,500.00 | 54,000.00 |

02. இதற்கான கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அதனோடு சம்பந்தப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2023.08.29 முதல் 2023.09.18 வரை சாதாரண அலுவலக கடமை நாட்களில் மு.ப. 9.00 முதல் பிற்பகல் 3.00 வரை கொலொன்ன பிரதேச சபை அலுவலகத்தில் மேற்படி கட்டணங்களைச் செலுத்தி கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு 2023.09.19 முற்பகல் 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு செயலாளர், கொலொன்ன பிரதேச சபை, கொலொன்ன என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது CIDA/ ICTAD பதிவை உறுதி செய்வதற்காக அதன் உறுதி செய்த பிரதி ஒன்றையும், காசாக கேள்விப் பிணை வைப்புச் செய்வதாயின் அதன் பற்றுச்சீட்டையும் காசாக பிணைத் தொகையை வைப்புச் செய்வதாயின் அங்கீகரிக்கப்பட்ட நிதி வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட பிணைமுறியொன்றுடன் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2023.09.19 முற்பகல் 10.05 இற்கு அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கொலொன்ன பிரதேச சபைக்கு உரியது.

**தொடர்புகள் :- தொ.பே. - 045-2260275**

**செயலாளர்,**
**அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**கொலொன்ன பிரதேச சபை**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
சிறு ஏற்றுமதி பயிர் பெருந்தோட்ட அபிவிருத்தி பிரிவு

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் நிறுவனம்

## கேள்விக்கோரல்

**செவனகல சீனி ஆலை சந்தியிலிருந்து பிதரான நுழைவாயில் வரை தார் இடுதல் (1055 மீட்டர் வரை நீளமான வீதி) (S- 543)**

வரையாறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனத்தின் திணைக்கள வழங்கல் சபைத் தலைவரால் செவனகல சீனி தொழிற்சாலைக்கு செவனகல சீனி ஆலை சந்தையிலிருந்து பிதரான நுழைவாயில் வரை தார் இடுவதற்கு (1055 மீட்டர் வரை நீளமான வீதி) ஆர்வமுடைய தரப்பினர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. **கேள்விதாரர்கள், 2023.09.13 திகதி வரையிலான வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 15.00** மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.8,000/-** ஐ செலுத்தி வரையறுக்கப்பட்ட லங்கா **சீனி (தனி) நிறுவனம், இலக்கம் 27, மெல்பனர் எவனியு, கொழும்பு 04** என்ற முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் ஊடாக முழுமையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
2. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியன் மூலம் பெற்றுக்கொண்ட ரசீதினை கேள்வியுடன் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாதவிடத்து கேள்விகள் நிராகரிக்கப்படும்.
3. முத்திரையிடப்பட்ட கேள்விகளை கடித உறையிலிட்டு நேரில் வந்து ஒப்படைக்கவும் அல்லது குரியர் சேவை அல்லது பதிவுத்தபால் மூலமாக **தலைவர், திணைக்கள வழங்கல் சபைத் தலைவர், வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனம், இலக்கம் 27, மெல்பனர் எவனியு, கொழும்பு 04** என்ற முகவரிக்கு **2023.09.14 ஆம் திகதி 14.00 மணிக்கு** முன்னர் கிடைக்குமாறு அனுப்பவும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"செவனகல சீனி தொழிற்சாலைக்கு செவனகல சீனி ஆலை சந்தையிலிருந்து பிதரான நுழைவாயில் வரை தார் (1055 மீட்டர் வரை நீளமான வீதி) இடுவதற்கான கேள்விக்கோரல்"** எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் அவை திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம். பிந்திக்கிடைக்கும் அல்லது முறையாக பூரணப்படுத்தாத கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விக்கோரல் தொடர்பான இறுதி முடிவு கேள்விச்சபையை சார்ந்ததாகும்.
4. அனைத்து கேள்விகளும் திறக்கப்பட்ட தினத்திலிருந்து **119 நாட்கள்** செல்லுபடியாக வேண்டியதோடு, **600,000.00 ரூபா (ஆறு இலட்சம்)** பெறுமதியான பிணைப் பாதுகாப்புடன் முன்வைக்கப்பட வேண்டும்.
5. இந்த ஒப்பந்தத்திற்காக மனுதாரர்கள் நெடுஞ்சாலை / கட்டுமானத்தில் தரம் C5 அல்லது அதற்கு மேல் CIDA தரத்திலான தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வழங்கல் தலைவர், வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனம் **(தொ.பே +94 11 2 584 184, மொபைல் + 94 77 010 3359, பெக்ஸ்:+94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk)** மூலமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர் - திணைக்களத்தின் கொள்முதல் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனம்,
இலக்கம் 27, மெல்பனர் எவினியு,
கொழும்பு 04.

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

லங்கா சதொச LANKA SATHOSA

# பெறுகை அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிடட் கட்டுநாயக்க விற்பனையகத்தின் புனரமைப்பு மற்றும் சீரமைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல்

Bid No: LSL/PRO/05/41/Renovation-Katunayake/2023

லங்கா சதொச லிமிடட் கட்டுநாயக்க விற்பனையகத்தின் புணரமைப்பு மற்றும் சீரமைப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு C6 தரத்திற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்துள்ள தகுதியுடைய, கட்டிட நிர்மாணத் துறையில் தகைமை பெற்ற நிர்மாண ஒப்பந்ததாரர்களிடம் இருந்து, **லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழு தலைவர்** மூலம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகி-ன்றன.

தேவை: விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை **ரூபா 5000.00 (மீளளிக்கப்படாத)** கேள்விமனு கட்டணத்தை செலுத்தி **2023 ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் மாதம் 15ஆம்** திகதி வரையான காலத்தில் கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி)**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,**
**வொக்சோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023 செப்டெம்பர் மாதம் 06ஆம் திகதி மு.ப. 11.00க்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் **2023 செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி பி.ப. 01.00க்கு** அல்லது அதற்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், பெறுகைப் பரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/41/Renovation-Katunayake/2023"** என்று குறிப்பிட வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கையில் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட நிபந்தனையற்ற முன்வைக்கப்படும் பெறுமதியில் **1% பெறுமதியைக் கொண்ட விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2023 செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி பி.ப. 01.00க்கு** நிறை-வடைவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைம-னுதாரர்கள் முன் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரிகளை அழைக்கவும்
இரோஷா – 076 4097545 (தொழில்நுட்பு விடயங்கள்)
திலினி – 070 1560428 (நிர்வாக விடயங்கள்)

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு தலைவர், **லங்கா சதொச லிமிடட் பெறுகைக் குழு வசமானது.**

தலைவர்,
லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

---

1990ஆம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகளின் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் விற்பனை அறிவித்தல்

## இலங்கை கொமர்ஷல் வங்கி பி.எல்.சி
## ( சிலாபம் கிளை)

உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ.ஏ.விமலசேன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 18.10.2001ம் திகதிய வரைபட இல. 2605 பங்கீட்டு வரையறுக்கப்பட்ட காணியில் லொட் 1 என குறிப்பிடப்பட்டதும் சங்கட்டிகுளமஹேன என அழைக்கப்படும் காணி அதனுடன் கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதன்மீது நிற்கும் மற்றவை எல்லாம் சேர்த்த, வட மேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்ட தெமழ ஹத் பற்று பிரதேசத்தின் குமார பல்லம் பற்றின் ஆனமடுவ பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவின் சங்கட்டிகுளம் கிராமஅலுவலர் பிரிவில் சங்கட்டிகுளம் கிராமத்தில் அமைந்துள்ள சொல்லப்பட்ட லொட் 01 காணித்துண்டானது **வடக்கில்** (பிரதேசசபை) வீதியினாலும் மற்றும் எவ்.வி.பி. 1839 இன் லொட் 131 இனாலும் **கிழக்கில்** லொட் 132, 137½ மற்றும் எவ்.வி.பி. 1839 இன் 138 இனாலும் **தெற்கில்** லொட் 77 மற்றும் எவ்.வி.பி. 1839 இன் 103 இனாலும் **மேற்கில்** வீதியினாலும் எல்லைப்படுத்தப்பட்டதுடன் சொல்லப்பட்ட வரைபட இல. 2605 படி **இருபத்தியொரு ஏக்கர்கள் இரண்டு றூட்டுகள் மற்றும் பதினான்கு பேர்ச்சஸ் (ஏ21-றூ2-பே14)** விஸ்தீரணமான காணியாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணியானது, கீழே விவரிக்கப்பட்டுள்ள காணியின் மீள் நிலஅளவையாகும்.

நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 18.04.1910 திகதிய வரைபட இல. 269295 இல் பங்கீட்டு வரையறுக்கப்பட்ட "சங்கட்டிகுளமஹேன" என அழைக்கப்படும் காணி, அதனுடன் கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள், மற்றும் அதன் மீது நிற்கும் மற்றவை எல்லாம் சேர்த்த, வட மேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்ட தெமழ ஹத் பற்று பிரதேசத்தின் குமார பல்லம் பற்றின் ஆனமடுவ பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவின் சங்கட்டிகுளம் கிராமஅலுவலர் பிரிவில் சங்கட்டிகுளம் கிராமத்தில் அமைந்துள்ள சொல்லப்பட்ட காணியானது, **வட-கிழக்காக** சங்கட்டிகுளக்கட்டினாலும் **தென்-கிழக்காக** அரச வனத்தினாலும், **தென்-மேற்காக** இட ஒதுக்கம் மற்றும் அரச வனத்தினாலும் **வட-மேற்காக** இட ஒதுக்கம் மற்றும் அரச வனத்தினாலும் எல்லைப்படுத்தப்பட்டதுடன் **இருபத்தியொரு ஏக்கர்கள் இரண்டு றூட் மற்றும் 14 பேர்ச்சஸ் (ஏ21-றூ2-பே14)** விஸ்தீரணத்தினை கொண்டிருப்பதுடன் புத்தளம் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்க இல ஜே 11/33 இல் பதிவு செய்யப்பட்டதுமாகும்.

கொச்சிக்கடை பிரசித்த நொத்தாரிசு பி.டி.ஈ. பெர்னான்டோ அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட **இலங்கை கொமர்ஷியல் வங்கி பீ.எல்.சி.** உடனான 2015 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட இல. 14993, 2016 டிசம்பர் 7 திகதியிடப்பட்ட இல. 15624, 2017 ஏப்ரல் 06 திகதியிடப்பட்ட இல. 15624, 2018 யூலை 19 திகதியிடப்பட்ட இல. 16574 ஆகிய ஈட்டுமுறிகளின் மீதான கொடுப்பனவை செலுத்த கடமைப்பட்டுள்ள இல. 590, வி.சி. வீதி, யகம்வெல தும்மலசூரியவை சேர்ந்த **அப்துல் ஹமீட் முகமட் நசீர்** அவர்கள் கொடுப்பனவை செலுத்த தவறியுள்ளார்.

**இலங்கை கொமர்ஷியல் வங்கி பீ.எல்.சி இனால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2023 செப்டெம்பர் மாதம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்கிறேன்**

**ஆதனத்தினை அடைதல்:**

சிலாபத்தில் இருந்து புத்தளம் வீதி வழியாக 80ம் கிலோ மீட்டர் கம்பத்தினை கடந்து சுமார் 200 மீட்டர்கள் சென்று வலது கைப்பக்கமாக பங்கதெனிய பஸாருக்கு குறுந்தூரத்திற்கு முன்னாக அமைந்துள்ள ஆனமடுவ வீதியை (B45) அடையலாம்.

இந்த வீதியின் வழியே சுமார் 30.4 கி.மீ. தூரம் சென்று வலதுபுறமாக சிறி தம்ம விசாகா ஆராமை வீதி என்று எல்லாராலும் அறியப்படும் பிரதேச சபை வீதிக்கு திரும்பி சங்கட்டிக்குளம் முஸ்லிம் கல்லூரி வளாக ஓரமாக சென்று பின் மேலும் 0.9 தொடக்கம் 1.0 கி.மீ. செல்ல குறித்த ஆதனமானது இடது கைப்பக்கத்தில் அமைந்துள்ளது.

**கட்டணம் செலுத்தும் முறை: -**

வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை பணமாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூராட்சி மன்றத்திற்கு செலுத்த வேண்டிய விற்பனை வரி1% (ஒரு சதவீதம்)
(3) ஏலதாரரின் தரகுப்பணம் 21/2% (இரண்டரை வீதம்). (கொள்வனவு விலையுடன் சேர்த்து தரகுக்கட்டணம் மற்றும் பொருத்தமான வரிகள் மீதான)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவொர் கட்டணம் 1000 ரூபா
(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய வேறு கட்டணங்கள், ஏதாவது இருப்பின்
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான கட்டணம் ரூபா. 2000/-.

கொள்வனவு விலையின் மிகுதி 90% உடன் விற்பனை திகதியின் பின் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகாரசபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களும் செலுத்தப்படல் வேண்டும்.

உறுதிகளையும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பார்வையிடுவதற்கு

இலங்கை கொமர்ஷியல் வங்கி பீ.எல்.சி
இல. 44, கொழும்பு வீதி,
சிலாபம்.
தொலை: +94(0)322222956/+94(0)322222966
தொலைநகல்: +94(0)322222957

- **மேற்குறிப்பிட்ட ஏல விற்பனையை முன்னறிவித்தல் இன்றி நிறுத்தி வைக்கும்/இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு**
- **ஏலமானது கொவிட் 19 நெறிமுறைகளுக்கு அமைவாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட இறுக்கமான வழிகாட்டல்களுக்கு ஏற்ப நடைபெறும்.**

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4302622, 11 4367111 | aucslk@gmail.com

---

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

# கேள்வி கோரல்

### சுகாதார அமைச்சு

## அரசாங்க வைத்தியசாலைகள் / நிறுவனங்களில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் – 2023/2024

சுகாதார அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு "$C_2$" தலைவரினால் 2023/2024ஆம் ஆண்டிற்காக கீழ்க் காணும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்யும் சேவையை தொடர்ந்து நடாத்திக் கொண்டு செல்லக் கூடிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01. இதன்பொருட்டு ஆர்வம் காட்டும் தரப்பினர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகளுக்கு இலங்கை வங்கி - தப்ரபேன் கிளையில் பேணப்படும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 7040244 எனும் கணக்கிலக்கத்திற்கு அல்லது சுகாதார அமைச்சின் சிறாப்பர் பிரிவிற்கு மீளளிக்கப்படாத பின்வரும் அட்டவணையில் அந்தந்த வைத்தியசாலைக்கு இயைபாகக் குறிப்பிட்டிருக்கும் தொகையை கேள்வி ஆவணக் கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்து மூல வேண்டுகோள், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-08-25ஆம் திகதி தொடக்கம் 2023-09-14ஆம் திகதி வரை பொதுவான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரையான காலப் பகுதியில் சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவில் இருந்து பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வைத்தியசாலையின் பெயர் | கேள்வி இலக்கம் | சொத்துக்கள் சான்றிதழின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | கேள்வி ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | தேசிய இரத்த பரிமாற்ற நிலையம், நாரஹேன்பிட்ட | MH/PB/15/LAU/01/2023 | 150,000.00 | 11,400.00 | 1,000.00 |
| 2 | பொது வைத்தியசாலை, களுத்துறை | MH/PB/15/LAU/02/2023 | 500,000.00 | 31,000.00 | 1,000.00 |
| 3 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை- ராகம | MH/PB/15/LAU/03/2023 | 500,000.00 | 476,600.00 | 3,500.00 |
| 4 | வாத நோய் மற்றும் புனருத்தாபன வைத்தியசாலை – ராகம | MH/PB/15/LAU/04/2023 | 300,000.00 | 20,300.00 | 1,000.00 |
| 5 | தேசிய மனநல சுகாதார நிறுவனம் | MH/PB/15/LAU/05/2023 | 500,000.00 | 114,800.00 | 3,500.00 |
| 6 | கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியா | MH/PB/15/LAU/06/2023 | 300,000.00 | 73,200.00 | 1,000.00 |
| 7 | சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்தியசாலை- வெலிசரை | MH/PB/15/LAU/07/2023 | 500,000.00 | 61,700.00 | 1,000.00 |
| 8 | த சொய்சா பெண்கள் வைத்தியசாலை - கொழும்பு 08 | M1-I/PB/15/LAU/08/2023 | 500,000.00 | 74,400.00 | 1,000.00 |
| 9 | மாவட்ட வைத்தியசாலை - கந்தானை | MH/PB/15/LAU/09/2023 | 300,000.00 | 31,200.00 | 1,000.00 |
| 10 | காசல் வீதி மகளிர் வைத்தியசாலை | MH/PB/15/LAU/10/2023 | 500,000.00 | 300,050.00 | 3,500.00 |
| 11 | அபேக்ஷா வைத்தியசாலை – மஹரகம | MH/PB/15/LAU/11/2023 | 500,000.00 | 199,500.00 | 3,500.00 |
| 12 | இலங்கை தேசிய கண் வைத்தியசாலை - கொழும்பு | MH/PB/15/LAU/12/2023 | 500,000.00 | 76,600.00 | 1,000.00 |
| 13 | தேசிய தொற்றுநோய் நிறுவன வைத்தியசாலை (ஐ.டி.எச்) அங்கொடை | MH/PB/15/LAU/13/2023 | 300,000.00 | 59,400.00 | 1,000.00 |
| 14 | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில | MH/PB/15/LAU/14/2023 | 500,000.00 | 250,000.00 | 3,500.00 |
| 15 | றிஜ்வே அம்மையார் சிறுவர் வைத்தியசாலை (போதனா) - கொழும்பு 8 | MH/PB/15/LAU/15/2023 | 500,000.00 | 34,400.00 | 1,000.00 |
| 16 | காச நோய்க் கட்டுப்பாடு மற்றும் மார்பு நோய் தொடர்பான தேசிய நிகழ்ச்சித் திட்டம் (தேசிய சயரோக இரசாயன கூடம் - வெலிசரை) | MH/PB/15/LAU/16/2023 | 150,000.00 | 600.00 | 1,000.00 |
| 17 | குடும்ப சுகாதாரப் பணியகம் | MH/PB/15/LAU/17/2023 | 150,000.00 | 4,300.00 | 1,000.00 |
| 18 | வாய் சுகாதார நிறுவனம், மஹரகம | MH/PB/15/LAU/18/2023 | 150,000.00 | 4,900.00 | 1,000.00 |
| 19 | இலங்கை தேசிய பல் வைத்தியசாலை (போதனா) - கொழும்பு 07 | MH/PB/15/LAU/19/2023 | 500,000.00 | 40,800.00 | 1,000.00 |
| 20 | பொது வைத்தியசாலை, சிலாபம் | MH/PB/15/LAU/20/2023 | 500,000.00 | 178,300.00 | 3,500.00 |
| 21 | விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ | MH/PB/15/LAU/21/2023 | 500,000.00 | 35,200.00 | 1,000.00 |
| 22 | சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர்களுக்கான (விசேட) வைத்தியசாலை – பேராதனை | MH/PB/15/LAU/22/2023 | 500,000.00 | 26,100.00 | 1,000.00 |
| 23 | ஆதார வைத்தியசாலை, கம்பளை | MH/PB/15/LAU/23/2023 | 300,000.00 | 45,300.00 | 1,000.00 |
| 24 | பொது வைத்தியசாலை, கேகாலை | MH/PB/15/LAU/24/2023 | 500,000.00 | 176,500.00 | 3,500.00 |
| 25 | போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய, காலி | MH/PB/15/LAU/25/2023 | 500,000.00 | 471,900.00 | 3,500.00 |
| 26 | தாதியர் பாடசாலை, குருநாகல் | MH/PB/15/LAU/26/2023 | 150,000.00 | 2,300.00 | 1,000.00 |
| 27 | போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் | MH/PB/15/LAU/27/2023 | 500,000.00 | 60,000.00 | 1,000.00 |
| 28 | பொது வைத்தியசாலை – திருகோணமலை | MH/PB/15/LAU/28/2023 | 500,000.00 | 49,400.00 | 1,000.00 |
| 29 | பொது வைத்தியசாலை – பொலன்னறுவை | MH/PB/15/LAU/29/2023 | 500,000.00 | 193,900.00 | 3,500.00 |
| 30 | மாவட்டப் பொது வைத்தியசாலை, மாத்தளை | MH/PB/15/LAU/30/2023 | 500,000.00 | 190,500.00 | 3,500.00 |
| 31 | ஆதார வைத்தியசாலை, கந்தளாய் | MHIPB/15/LAU/31/2023 | 300,000.00 | 57,800.00 | 1,000.00 |
| 32 | போதனா வைத்தியசாலை, மஹமோதர | MH/PB/15/LAU/32/2023 | 500,000.00 | 210,700.00 | 3,500.00 |
| 33 | போதனா வைத்தியசாலை, அனுராதபுரம் | MH/PB/15/LAU/33/2023 | 500,000.00 | 408,200.00 | 3,500.00 |
| 34 | பொது வைத்தியசாலை, மொனராகலை | MH/PB/15/LAU/34/2023 | 500,000.00 | 128,300.00 | 3,500.00 |
| 35 | போதனா வைத்தியசாலை, குருநாகல் | MH/PB/15/LAU/35/2023 | 500,000.00 | 657,600.00 | 12,500.00 |
| 36 | பொது வைத்தியசாலை, பதுளை | MH/PB/15/LAU/36/2023 | 500,000.00 | 84,400.00 | 1,000.00 |
| 37 | பொது வைத்தியசாலை, இரத்தினபுரி | MH/PB/15/LAU/37/2023 | 500,000.00 | 96,700.00 | 1,000.00 |
| 38 | போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டி | MH/PB/15/LAU/38/2023 | 500,000.00 | 202,000.00 | 3,500.00 |
| 39 | மாவட்டப் பொது வைத்தியசாலை, நீர்கொழும்பு | MH/PB/15/LAU/39/2023 | 500,000.00 | 132,700.00 | 3,500.00 |
| 40 | மாவட்டப் பொது வைத்தியசாலை, நாவலப்பிட்டி | MH/PB/15/LAU/40/2023 | 500,000.00 | 60,300.00 | 1,000.00 |

02. ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை வைத்தியசாலைக்கு கேள்விகள் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாயின் அதற்காக வெவ்வேறு கேள்வி ஆவணங்கள் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு நிறுவனம் / வைத்தியசாலையின் பொருட்டு வெவ்வேறான கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்த ஒப்பந்தத்தின் பொருட்டு அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட சமூக அமைப்புகள் இயைபுடைய பிரதேசத்தின் பிரதேச செயலாளர் வழங்கிய பதிவுச் சான்றிதழ்.

II. துணிகளைச் சலவை செய்தல், உலர வைத்தல் மற்றும் அழுத்துதல் என்பவற்றை வியாபாரமொன்றாக நடாத்திக் கொண்டு செல்லல் பற்றிய பிரதேச செயலாளரின் சான்றிதழ் அல்லது கம்பனி பதிவாளர் அலுவலகத்தில் கம்பனியொன்றாகப் பதிவு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய சான்றிதழ் பிரதி.

III. விண்ணப்பிக்கும் வைத்தியசாலையின் சலவை செய்ய வேண்டிய துணிகளின் கொள்ளளவிற்கு ஏற்ப துணிகளை உலர வைப்பதற்கான வசதிகள் உள்ளதென்பதை உறுதி செய்யும் சான்றிதழ்

IV. துணிகளைச் சலவை செய்யும் இடம் மற்றும் உலர்த்தும் இடத்திற்கு இயைபான பிரதேச பொறுப்பு சுகாதார உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட துணிகளைச் சலவை செய்யும் மற்றும் உலர்த்தும் இடம் பற்றிய தகுதிச் சான்றிதழ்.

V. முன் அனுபவம் தொடர்பாக கடந்த 02 வருட காலத்தை உள்ளடக்கிய சான்றிதழ்.

(பொது வைத்தியசாலை மற்றும் போதனா வைத்தியசாலைக்காக முன்வரும் போது மாதமொன்றுக்கு 500 துணித்துண்டுகளுக்கு மேற்பட்ட எண்ணிக்கையை சலவை செய்யும் அரச நிறுவனம், அரசு சார்ந்த நிறுவனம், அல்லது தனியார் நிறுவனம் / நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவம் பற்றிய சான்றிதழ்/ சான்றிதழ்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

❖ ஏனைய அனைத்துத் தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டு சேவை அனுபவம் மாத்திரம் இல்லாத புதிய விண்ணப்பதாரர்கள் இதற்காக முன்வருவாரானால் அவர் 15% செயலாற்றுகை பிணை வைப்பொன்றை வழங்குவதற்கு இணங்குவதன் மூலம் இந்த ஒப்பந்தத்திற்கான கேள்வி ஆவணங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவதற்கு கவனத்திற் கொள்ளும் அபிப்பிராயத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

VI. ஒவ்வொரு வைத்தியசாலையின் பொருட்டும் பின்வரும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பெறுமதிச் சான்றிதழ்களின் பெறுமதி 02ஆம் இலக்கத்தின் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கேள்விகள் வழங்கப்படும் நாள் முதல் 06 மாத காலத்திற்குச் செல்லுபடியாகும் பெறுமதிச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அ) போதனா வைத்தியசாலை மற்றும் பொது வைத்தியசாலை ஒன்றின் பொருட்டு ரூபா 500,000.00
ஆ) ஆதார வைத்தியசாலை மற்றும் மாவட்ட வைத்தியசாலை ஒன்றின் பொருட்டு ரூபா 300,000.00
இ) சுகாதார நிறுவனம், தாதியர் பாடசாலை ஒன்றின் பொருட்டு மற்றும் ஏனையவை ரூபா 150,000.00

VII. மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் வழங்கப்பட்ட சுற்றாடல் அனுமதிப் பத்திரம்.

VIII. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான பதிவுச் சான்றிதழ் (அந்தந்த வைத்தியசாலைக்காக வெவ்வேறாக பெற்றுக் கொள்ளப்பட்ட பதிவுச் சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய I – VIII வரையான அனைத்து சாட்சி ஆவணங்களையும் முறையாக சான்றுபடுத்தி விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் குறித்த ஆவணங்கள் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. கேள்வி ஆவணங்கள் மூலப் பிரதி மற்றும் நகல்பிரதி எனத் தயாரிக்கப்பட்டு இரண்டு உறைகளில் இட்டு அந்த உறைகள் இரண்டையும் வேறொரு உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு இடது பக்க மேல் மூலையில் "............................................ வைத்தியசாலைக்காக 2023-09-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குத் திறக்கப்படவுள்ள 2023/ 2024ஆம் ஆண்டிற்கான அழுக்குத் துணிகளைச் சலவை செய்யும் பெறுகை" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023-09-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், அமைச்சு பெறுகைக் குழு "சி$_2$", சுகாதார அமைச்சு, (புதிய கட்டிடம்), பெறுகைப் பிரிவு, 2 ஆம் மாடி, இலக்கம் 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அந்த முகவரியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

07. 2023-09-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்ததும் உடனடியாக அவ்விடத்திலேயே கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு இந்நிகழ்வில் சமுகமளிக்க அனுமதி வழங்கப்படும்.

08. அரசாங்கத்தின் ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்டுள்ள நபர்களுக்கு இந்தப் பெறுகைக்காக முன்வர முடியாது.

09. சமர்ப்பிக்கப்படும் கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

10. கேள்வி ஆவணங்கள் இலவசமாக சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவில் பொதுவான கடமை நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவின் 011-2112717/ 011-2112714 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு "$C_2$" ,**
**சுகாதார அமைச்சு (புதிய கட்டிடம்),**
**பெறுகைப் பிரிவு, 2ஆம் மாடி,**
**இலக்கம் 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு 10.**

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு

## சிவில் விமான சேவைகள் அதிகார சபை

## 1955 ஆம் ஆண்டின் 196 வான்கலமோட்டல் ஒழுங்குமுறையின் கீழ் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் அறிவித்தல்

உள்நாட்டு தனியார் செயற்பாட்டு (Domestic Private Operations) நடவடிக்கைகள், விமானத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுகள் (Aerial work) மற்றும் கூலி விமான போக்குவரத்து (Charter Operations) செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பயண நேர அட்டவணைக்கேற்ப உள்நாட்டு பயணிகளை ஏற்றிச்செல்லும் பொது போக்குவரத்து, சரக்கு மற்றும் அஞ்சல் விமான சேவைகளை முன்னெடுப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம் மற்றும் அதற்குரிய கோவைகள் உட்பட நிபந்தனைகளுக்கு அமைய விமான செயற்பாட்டுச் சான்றிதழ் மற்றும் விமானக் கம்பனிக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக இல. 120, 120A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லயில் உள்ள வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் ஏவியேஷன் (தனியார்) கம்பனி (David Pieris Aviation (Private) Limited) இனால் 2023 ஜுலை மாதம் 12 ஆம் திகதி சமரப்பிக்கப்பட்ட 2023 ஜுலை மாதம் 12 ஆம் திகதி கொண்ட விண்ணப்பப்படிவத்தில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன். இத்தாபனமானது வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் ஏவியேஷன் (தனியார்) கம்பனி எனும் வணிக நாமத்துடனும் “வரையறுக்கப்பட்ட டீபீ ஏவியேஷன் (தனியார்) கம்பனி (DP Aviation (Pvt) Ltd)” எனும் வர்த்தகநாமத்துடனும் அழைக்கப்படும். வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் ஏவியேஷன் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றது.

**திரு. டீ.பீ.பீரிஸ்**
**கப்டன். ஜொஹான் பீரிஸ்**
**எயார் வைஸ் மாஷல் ஓ.டி.என்.எல்.பெரேரா (ஓய்வுபெற்ற)**

இக்கம்பனியின் உத்தேச விமானப் போக்குவரத்து செயற்பாடுகள் தொடர்பாக பிரதான பொறுப்பு முகாமைத்துவத்திற்கு எயார் வைஸ் மாஷல் ஓ.டி.என்.எல்.பெரேரா (ஓய்வுபெற்ற) அவர்களை வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் ஏவியேஷன் (தனியார்) கம்பனி பெயரிட்டுள்ளது.

விண்ணப்பதாரரின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியை இலக்கம் 152/1, மினுவன்கொட வீதி, கட்டுநாயக்க ஐ கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைமையகத்தின் கீழ்த்தளத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொது மக்களுக்கு இதனை பார்வையிட முடியும்.

